86649
2223

# தேர்ந்த கட்டுரைகள்

வெளியீடு — 8

★★★★★★★★★




தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டுவாரியம்
தமிழீழம்
02- 04 - 1992

JPL
C2223

# தேர்ந்த கட்டுரைகள்

தேசிய நாகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

பொது நூலகம்
1992
யாழ்ப்பாணம்

வெளியீடு — 8

★★★★★★★★★

KOHA JPL

86649

PUBLIC LIBRARY
JAFFNA

222.3C.C

86649C.C

தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டுவாரியம்
தமிழீழம்
02- 04 - 1992

நூலகப் பிரிவு
நகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
86629
KOHA JPL

# பொருளடக்கம்


இந்தியா மற்றும் இலங்கைத் தமிழ்த்தீவிர வாதிகளைப்பற்றி வெளிக்கொணரப்படாத பகுதி 1-18
சுவர்களுக்குள் வசிக்கும் குடியேற்ற வாசிகள் 19-23
தமிழர் தாயகம் எதிர் சிங்களவர் தாயகம் 24-32
இந்தோனேஷியா மக்கள் இடப்பெயர்ச்சியும் அதன் தாக்கமும் 33-41
1962 இல் நடாத்தப்பட்ட 'ஒபறேசன் கோல்ட் வாச்டு' என்னும் சதி 42-52
வங்காள விரிகுடாவில் வளர்ந்துவரும் பதற்றநிலை 53-56
தாங்கள் அரசியல்கைதிகளை வைத்திருப்பதாகப் புலிகள் கூறுகிறார்கள் 57-62
யாழ்ப்பாண குடாநாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதற்கான சமரை நடாத்த இராணுவத்தினர் தயார் நிலையில் உள்ளனர் 63-68
வான் வெளியில் முடிவடையாத கதை அது 1986 ஆம் வருடம் 69-70
கோமடீஸ்வரர்கள் வரிசையில் எதிர்பாராத வெற்றி 71-73
பர்மிய உள்நாட்டுப்போர் 74-80
எல்லோரையும் கொல்லவேண்டும் 81-86
தமிழ்நாடு தமிழீழவிடுதலைப் புலிகள் தொடர்பு 87-83
வீரர்களைப்பயிற்றுவித்தலும் கிழக்கை கட்டுப் பாட்டில் வைத்திருத்தலும் 89-95
விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் தொடர்ந்தும் காத்தான்குடி வாழ்கின்றது 96-99
யாழ்குடா நாட்டை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இராணுவம் தயார் நிலையில் உள்ளது 100-106
எதிர்காலத்தை நோக்கி வீசும் காற்று 107-113
பிறெஸ்லரின் திருத்தம் -2 114-117
தமிழ்க்கவிப்பித்து 118-

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# இந்தியா மற்றும் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளைப் பற்றி வெளிக்கொணரப் படாத பகுதி

-டி.எஸ்.சுப்பிரமணியம்

(Frontline 17 01·1992)

ஆயுதமேந்திய இலங்கைத்தமிழ்த் தீவிரவாதிகளின் வளர்ச்சியில் 1983 ஆம் ஆண்டுக்குப் பின் இந்தியா வகித்த பங்கைத் தமிழ்நாடு அரசின் உள்துறைச் செயலர் திரு. நாகராஜன் அரசியல் அரங்கிற்குக் கொண்டுவந்துள்ளார். 1983 ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அநேக இலங்கைத் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களுக்கு இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் இந்தியாவால் வழங்கப்பட்ட போதும் அது இதை மறுத்து வந்தது. இச்செயல் இப்பொழுது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் எம் ஜி ஆர். தலைமையிலான தமிழ்நாடு அரசாங்கம் வகித்த பங்கும் சர்ச்சைக்குரியதாயிருக்கின்றது.

தமிழ்த் தீவிரவாதக் குழுக்களை இந்தியாவுக்கு வரவழைத்ததுடன் அவைகளுக்கு இராணுவப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கியதுடன், தமிழ்நாடு மநில அரசுக்குத் தெரிவிக்காமலே தமிழ்நாட்டில் அவர்கள் பயிற்சி முகாம்கள் அமைக்க ஒப்புதல் தரப்பட்டதையும், சென்னையிலும் புதுடில்லியிலும் பிரசாரச் செயலகங்களை அமைக்க ஒப்புதல் தரப்பட்டதையும், இறுதியில் அவர்கள் இந்தியாவால் ஆயுதங்களையப்பட்டதையும் உற்றுநோக்கும் போது, தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் சம்பந்தமாக இந்தியா ஒரு திட்டவட்டமான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

திருமதி இந்திராகாந்தியின் ஆட்சியின் போது தமிழ்த் தீவிரவாதக் குழுக்களுக்கு என்ன நோக்கத்தின் அடிப்படையில் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் ஆயுதமும், பயிற்சியும் வழங்கத் தீர்மானித்தார்கள்? இவர்களுடைய ஆயுதப் போராட்டம் இலங்கை அரசாங்கத்தை இணங்கப் பேச்சுவார்த்தைக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும் என திருமதி இந்திராகாந்தி கருதியமையாலேயே தமிழ்த் தீவிரவாதக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்க விரும்பினார் என இந்தத் தீவிரவாதக் குழுக்களுடன் ஆரம்பத்

திலிருந்தே தொடர்பை வைத்துக் கொண்டுள்ள ஒருவர் கூறு கின்றார். இவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது இலங்கை அரசாங்கத்தை வீழ்த்துவதற்கல்ல என்றும், இந்தியாவினுடைய உறுதியான ஆதரவு இலங்கைத் தமிழ் மக்களுக்கு உண்டு என் பதை இலங்கை அரசாங்கத்துக்கு உணர்த்துவதற்காகவே என் றும் இவர் மேலும் கூறுகின்றார்.

"இலங்கை அரசாங்கம் தனது வல்லாதிக்க நிலையிலி ருந்து கீழ் இறங்கிவரும் வரை நாம் எமது ஆயுதப் போராட்டத் தைத் தொடர்ந்த பின், நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை களுக்குச் செலவேண்டும் என்பதே இந்தியக் கொள்கை வகுப் பாளர்களின் நோக்கம்'' என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 1986 இல் 'புரண்ட்லைன்' பத்திரிகைக்குக் கூறியுள்ளார். திருமதி இந்திரா காந்தியின் ஆலோசகர் திரு ஜீ. பார்த்தசாரதி அவர்கள், இலங் கைத் தமிழர்களின் பிரச்சினை பற்றி வகுதத கொள்கையை இவர் பாராட்டியுள்ளார். உண்மையிலேயே ஒவ்வொரு தீவிர வாதக் குழுக்களும் இந்தப் பிரச்சினையில் திரு. பார்த்தசாரதி அவர்களின் அணுகுமுறையைப் பாராட்டியிருந்தனர்.

இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்தியா பயிற்சி அளிக்க முன்வந்ததன் காரணம் யாது?

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி இலங் கைத் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாதிகளால் நன்கு திட்டமிட்டுக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படுகொலை களின் காரணமாக இந்தியா இலங்கைத் தமிழ் மக்களின் பிரச் சினையில் ஆர்வம் கொண்டிருந்தது எனப் பலராலும் நம்பப் பட்டதற்கு மாறாக அதற்குச் சில நாட்களுக்கு முன்னரே இந் தியா தமிழர் விடயத்தில் அக்கறை கொள்ளத் தொடங்கியது. இறந்தவர்களின் உடல்களை விசாரணை இன்றி அப்புறப்படுத்த இடம் கொடுக்கும் அவசரகாலச் சட்டம் யாழ்ப்பாண தீபகற் பத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டதை ஆட்சேபிக்குமுகமாக ஜூலை மாதம் 21 ஆம் திகதி இந்தியாவுக்கான இலங்கைத் தூது வர் திரு.பேர்னாட் திலகரத்தினா இந்திய வெளிவிவகார அமை லகத்திற்கு அழைக்கப்பட்டு இந்தியாவின் கவலை இவருக்குத் தெரிவிக்கப்பட்டது. இலங்கைத் தமிழ் மக்களின் துன்பங்களில் இந்திய அரசாங்கம் வெளிப்படையாகவே அனுதாபம் கொண்டி ருக்கிறது என்பதை இலங்கை அரசாங்கத்துக்குத் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாகவே இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் யூலை மாதம் 23 ஆம் திகதி ரோந்து சென்ற இலங்கைப்படையினர் பலரை யாழ்ப்பாணத்தில் கொன்றதன் காரணமாக நடுபூராவும் தமிழ்மக்களுக்கு எதிரான வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டது இதன் காரணமாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். இந்த இனப்படுகொலை முழு உலக மக்களின் கவனத்தை ஈர்த்ததுடன் தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்களையும் இலங்கைத்தமிழ் மக்கள் பால் அனுதாபங்கொள்ள வைத்தது அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் திரு வி பி நரசிம்மராவ் அவர்களை உடனடியாகக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். கொழும்பிலிருந்து திரு. நரசிம்மராவ் புதுடெல்லிக்குத் திரும்பியதும், இலங்கையின் உண்மை நிலைபற்றி ஒரு அறிக்கை சமர்ப்பித்தார் இந்த அறிக்கையே இந்தியா இலங்கைக்கான கொள்கையை வகுப்பதற்கு அடிப்படையாக அமைந்தது.

இது நடந்த ஒருமாத காலத்துக்குள்ளேயே, எத்தனை தமிழ் இளைஞர்களைத் திரட்டமுடியுமோ அத்தனை தமிழ் இளைஞர்களைத் திரட்டி அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்குமாறு திருமதி இந்திராகாந்தி இந்தியப் புலனாய்வுத்துறையினரான 'றோ' வுக்கு (Raw) பணிப்புரை வழங்கினார். திரு ஜெயில் சிங் அவர்களே அப்போதைய இந்திய உள்நாட்டமைச்சராக இருந்தவராவார். தீவிரவாதக் குழுக்களை ஆயுதப்பயிற்சிக்கு இந்தியாவுக்குக் கொண்டுவரும் பணி ஒரு இலங்கைத் தமிழ்த் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. றோ' ஆயுதப் பயிற்சி அளிக்கும் உத்தரப் பிரதேசத்திலுள்ள டெகிறாடன் (D hra Dun) என்னும் இடத்துக்கு அனுப்பப்படுவதற்காக ரெலோ, ஈரோஸ், ஈ பி ஆர் எல்.எவ் புளொட் ஆகிய தமிழ்த் தீவிரவாதக்குழுக்களைச் சேர்ந்த இளைஞர்கள் விரைவாகத் தமிழ்நாட்டுக்கரையை வந்தடைந்தார்கள். இந்த முதலாவது பயிற்சித் தொகுதியில் விடுதலைப் புலிகள் இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது.

சிறிசபாரத்தினத்தின் தலைமையிலுள்ள ரெலோவே இந்தப் பயிற்சி மூலம் நன்மையடைந்த முதலாவது தீவிரவாதக் குழுவாகும். ஏனெனில் தங்களுக்கென்று தனிப்பட்ட கொள்கை ஒன்று இல்லையெனவும் இந்தியா எதை நடைமுறைப்படுத்த விரும்புகின்றதோ அதைத் தாங்கள் எதிர்க்காமல் பின்பற்றத் தயாராக இருப்பதாகவும் 1985 ஆம் ஆண்டில் 'புரண்ட் லைன்' பத்திரிகைக்கு இவரே கூறியுள்ளார். பயிற்சிக்குச் சென்ற இரண்

டாவது குழு 'ஈரோஸ்' அமைப்பாகும். அதைத் தொடர்ந்து 'புளொட்டும்' இறுதியாக ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவும் பயிற்சியைப் பெற்றது.

இந்தியாவில் பயிற்சிகளை ஆரம்பிக்க முன் புளொட் தலைவர் உமா மகேஸ்வரனும், ஈ பி ஆர் எல்.எவ். தலைவர் கே. பத்மநாப வும், ஈரோஸ் தலைவர் வே பாலகுமாரனும் பெய்ரூட் (Beirut) சிடோன் (Sidon), பெக்கா (Bekaa) பள்ளத்தாக்கு மற்றும் பல இடங்களில் பலஸ்தீன விடுதலை மக்கள் முன்னணியால் (Peoples Front for The Liberation of Palestine) பயிற்சியளிக்கப்பட்டிருந்தார்கள். பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மக்கள் முன்னணியின் தலைவர் டாக்டர் ஜோர்ஜ் கபாஸ், (George Habash) அவர்களுடன் எல்லாத் தீவிரவாதக் குழுக்களையும் விட 'புளொட்' நெருங்கிப் பழகி வந்தது இலங்கைத் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களைச் சேர்ந்த சிலர் 1980-ம் ஆண்டின் முற்பகுதியில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தால் பயிற்சியளிக்கப்பட்டனர். (ஆங்கிலம் தெரியாத காரணத்தால் திரு பிரபாகரன் இந்தப் பயிற்சியைப் பெறச் செல்லவில்லை எனக் கூறப்படுகின்றது.)

1983-ம் ஆண்டு ஒக்டோபர்/நவம்பர் மாதங்களில் 'ரெலோ' அமைப்பைச் சேர்ந்த முதல் தொகுதி இளைஞர்களுக்கு இந்தியாவில் பயிற்சி ஆரம்பமானது. இரண்டு கிழமைக்குள் 500 இளைஞர்களைப் பயிற்சிக்கு அனுப்புபடி 'றோ' கேட்டதாகவும், பல தந்திரமான வழிமுறைகளைக் கையாண்டு தீவிரவாதக் குழுக்கள் இளைஞர்களைச் சேர்த்ததாகவும் அறிய முடிகின்றது படகுகள் மூலம் இராமேசுவரத்துக்கு அகதிகளாக வரும் இளைஞர்களைப் பிடித்துப் பயிற்சி அளிப்பதற்காக உத்தரப் பிரதேசத்திலுள்ள சக்கிரட்டா (Chakrata) என்னும் இடத்துக்கு இக்குழுக்களை அனுப்பினார்கள்.

தீவிரவாதக் குழுக்கள் காலட்பேக்கில் இளைஞர்களுக்கு ஆசை வார்த்தை காட்டித் தங்கள் குழுக்களில் அவர்களைச் சேர்ப்பதற்குப் போட்டியிட்டனர். நல்ல உணவும், உடையும், முறையான பயிற்சியும் இந்தியாவால் அவர்களுக்கு வழங்கப்படுமெனக் கூறப்பட்டது. தமிழ் மக்களுக்கெதிராகச் சிங்கள வெறியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல் காரணமாகக் கடும் பாதிப்புக்குட்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் சிங்களவர்களை எதிர்த்துப் போராடப் பயிற்சியைப் பெறுவதற்காக இந்தியாவுக்கு வருவதற்கு முன்வந்தார்கள். உண்மையிலேயே இலங்கையின் வடக்குக் கிழக்கிலுள்ள பாடசாலைகளுக்கு இந்தத் தீவிர

வாதக் குழுக்கள் தங்கள் வாகனங்களைக் கொண்டு சென்றவுடனேயே இந்தியாவுக்குப் பயிற்சிக்கு அனுப்புவதற்கு இளைஞர்களைத் திரட்டிவிடுவர். தேங்காய் ஒன்று வாங்கி வரும்படி ஒரு தாயால் அனுப்பப்பட்ட ஒரு இளைஞனும் இதில் அடங்குவான். இராமேசுவரத்துக்குப் படகு ஒன்று உடனே புறப்படுவதாகக் கேள்விப்பட்ட இந்த இளைஞன் தனது பெற்றோர்களுக்கு அறிவிக்காமலே வாகனத்தில் ஏறிக்கொண்டான். பயிற்சி முகாமில் இவனைத் தேங்காய் எனப் பெயரிட்டே அழைத்தார்கள்.

ஆரம்பத்தில் ரெலோவைச் சேர்ந்த சுமார் 350 இளைஞர்களுக்கும், ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த 200 இளைஞர்களுக்கும், ஈ. பி. ஆர். எல். எவ். ஐச் சேர்ந்த 100 இளைஞர்களுக்கும், புளொட்டைச் சேர்ந்த 70 இளைஞர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. டில்லியின் விமான நிலையத்துக்கு அருகாமையிலும், புதுடில்லியின் மத்தியிலுள்ள இராமகிருட்டிணபுரத்திலும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மற்றக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவிருப்பதாகக் கேள்விப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே பிரபாகரன் இந்திய அரசாங்கம் மற்றும் 'றோ' ஆகியவற்றில் சந்தேகம் உற்றார். (திரு பிரபாகரனுக்கும், உமாமகேஸ்வரன், சிறீசபாரத்தினம் ஆகியோருக்குமிடையே அவ்வேளையில் நல்லுறவு இருக்கவில்லை )

இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் திரு பிரபாகரன் ஒத்துழைப்பு நல்கினால் மாத்திரமே விடுதலைப் புலிகள் இயக்க இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க முடியுமென அதிகாரபூர்வமான ஒரு தகவலைத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், திரு. பிரபாகரனின் நெருங்கிய சகாவுமான திரு ப. நெடுமாறன் அவர்கள் திரு பிரபாகரனுக்குக் கொடுத்தார். ''நான் திரு பிரபாகரனிடம் இத்தகவலைக் கொடுத்தபோது குறிப்பிட்ட தமிழ் அரசியல் தலைவரின் கீழ் நீங்கள் உலகத்திலுள்ள எல்லாவற்றையும் கொடுக்க வாக்குறுதி அளித்தாலும் கூட எங்களுக்கு அது தேவையில்லை'' என ஒரே வார்த்தையில் திரு. பிரபாகரன் பதிலளித்தார் எனத் திரு நெடுமாறன் கூறினார். ''நான் அறிந்திருக்கும் வரை இராணுவப் பயிற்சி பற்றி எதுவுமே தமிழ்த் தலைவரான திரு. அமிர்தலிங்கம் அறிந்திருக்கவில்லை. அதன் பின்னரே அவர் இதைப் புதுடில்லியில் இருந்து உறுதிப்படுத்திக் கொண்டார்'' எனத் திரு. நெடுமாறன் மேலும் கூறினார்.

இது நடந்த சில வாரங்களுக்குப் பின் திரு நெடுமாறன் மொஸ்கோவுக்குச் சென்றதாகவும் காகிதத்தில் மட்டும் பெயர்களைக் கொண்ட தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் 'றோ' விடமிருந்து பயிற்சியைப் பெறும் பொழுது, விடுதலைப் புலிகள் இயக்கம் ஏன் அந்தப் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என அவர் அங்குள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரைச் சந்தித்து முறைப்பாடு செய்ததாகவும். அந்த அதிகாரி இந்த விடயத்தைப் புதுடில்லிக்குத் தெரியப்படுத்துவதாகவும் அவர் கூறினார். அவர் மொஸ்கோவிலிருந்து புதுடில்லி திரும்பியதும் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் அவர்களைத் தான் சந்தித்ததாகவும் இரகசியப்பயிற்சித் திட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஏன் சேர்த்துக்கொள்ளப்படவில்லை எனக் கேட்டதாகவும் திரு. நெடுமாறன் கூறியுள்ளார்.

தன்னைச் சந்தித்த புலனாய்வுத்துறை அதிகாரிகளிடம், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தனியான பயிற்சி அளிக்கப்படவேண்டுமெனத் திரு பிரபாகரன் கேட்டுக் கொண்டார். இதற்கமைய பங்களூர் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் தங்கள் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார்கள். விடுதலைப் புலிகளுக்கு மற்றக் குழுக்களுடன் சேர்த்துப் பயிற்சிகள் கொடுக்கப்படவில்லை. எல்லாக் குழுக்களும் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டன எனத் திரு. நெடுமாறன் மேலும் கூறினார்.

"நாங்கள் (விடுதலைப் புலிகள்) இந்தியாவுக்கு அடிமையான ஒரு இராணுவமாக இருக்க விரும்பாவிடினும், மற்றைய தீவிரவாதக் குழுக்கள் பலம் பெறுவதன் மூலம் எங்களுடைய இயக்கம் அவர்களால் அழிக்கப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பது எங்களுக்குக் கவலையைத் தருவதாக இருக்கின்றது" என "இந்தியாவும் ஈழத்தமிழர் நெருக்கடிகளும்" என்னும் தலைப்பில் 1988/89-ல் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது 'அப்படி நடந்தால் அது ஈழத்தின் விடுதலைக்காகப் போராடும் இயக்கத்தின் முடிவாக இருந்திருக்கும் என நாங்கள் கருதுகிறோம். இதன் காரணமாக இந்திய அரசாங்கம் எங்களைச் சந்தித்து. அது எங்களுக்குக் குறைந்தளவு பயிற்சியைத் தர முன்வந்தபோது அதை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். குறைந்தளவு உதவியையே நாங்கள் பெற்றோம். இருப்பினும் எங்களது சொந்த முயற்சியால் பல பயிற்சி முகாம்களை அமைத்துக் கொண்டதுடன் எங்களது இராணுவ சக்தியை நாங்

கள் வளர்த்துக் கொண்டோம். இந்தியாவின் உதவியில் தங்கியிருக்காமல் எங்கள் சொந்த வளத்திலிருந்தே போதியளவு ஆயுதங்களைச் சேகரித்துக் கொண்டோம். இப்படியே 'றோ' வினால் விடுக்கப்பட்ட சவாலை எதிர்கொள்ளத்தக்க வகையில் நாம் பலம் பெற்றோம்'' எனவும் அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்தியா விடுதலைப் புலிகளை அணுகியது என அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது தவறானதாகும். உண்மையில் விடுதலைப் புலிகளே இந்தியப் புலனாய்வுத் துறையைத் (IB) தங்களுக்குப் பயிற்சி அளிக்கும்படி வேண்டி அணுகினார்கள். இது சம்பந்தமான சந்திப்பு புலனாய்வுத் துறையினருக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுக்குமிடையே பாண்டிச்சேரியில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் தங்களுடைய பிரசுரத்தில் குறிப்பிட்டது போல் அவர்கள் தமிழ் நாட்டில் தங்களுக்கெனப் பயிற்சி முகாம்களை அமைத்துக் கொண்டார்கள். சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டுருக்கருகேயுள்ள குளத்தூரிலும், மதுரை மாவட்டத்திலுள்ள திண்டுக்கல்லுக்கு அருகேயுள்ள சிறுமலையிலும் விடுதலைப் புலிகளுடைய இரண்டு பெரிய முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகளில் ஒருவரான திரு யோகி அவர்களின் சகோதரரான பொன்னம்மான் அல்லது குகன் என அழைக்கப்படுபவர் இந்த இரு முகாம்களுக்கும் பொறுப்பாக இருந்தார். (1987-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலுள்ள நாவற்குழியில் தற்செயலாக நடந்த குண்டுவெடிப்பில் பொன்னம்மான் இறந்தார்). சிறுமலையிலும் குளத்தூரிலும் தானே தனது போராளிகளுக்குத் திரு. பிரபாகரன் பயிற்சி கொடுத்தார். மதுரையிலுள்ள அழகர்மலை திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களுக்கு அண்மையிலும் விடுதலைப் புலிகளுக்குச் சிறிய முகாம்கள் இருந்தன.

குளத்தூரில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளுடைய முகாமுக்குத் தேவையான உணவுத் தானியங்களைத் அயலிலுள்ள கிராமங்களிலிருந்து பெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைத் திராவிடக் கழகத்தைச் சேர்ந்த குளத்தூர் மணி என்பவர் மேற்கொண்டு வந்தார். அதே மாதிரித் திரு. நெடுமாறன் சிறுமலை முகாமுக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தார். (திரு. ராஜீவ் காந்தியின் கொலை சம்பந்தமான திரு குளத்தூர்மணி அண்மையில் காவல் துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.)

PUBLIC

விடுதலைப் புலிகளைச் சேர்ந்த முதற்றொகுதிப் போராளிகளுக்கு 1983-ம் ஆண்டு ஜூலைக் கலவரங்களுக்கு முன்னர் திரு.

பிரபாகரனே பயிற்சி அளித்து வந்தார். இவரிடம் பயிற்சி பெற்ற முன்னோடிப் போராளிகளில் கிட்டு, குமரப்பா, புலேந்திரன், பண்டிதர், ரகு, லிங்கம் ஆகியோர் அடங்குவர்.

1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் நடாத்தப்பட்ட 'சார்க்' அமைப்பின் உச்சி மாகாநாட்டின்பின், தமிழ் நாட்டிலுள்ள பயிற்சி முகாம்கள் யாவற்றையும் மூடிவிட்டு 1987-ம் ஆண்டு ஜனவரி மாதம் திரு பிரபாகரன் யாழ்ப்பாணம் திரும்பினார். "இந்தியாவில் அப்பொழுது இருந்த சூழ்நிலை தனக்குச் சாதகமாக இருக்காதெனக் கருதியமையாலேயே திரு பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றார்" எனத் திரு. நெடுமாறன் கூறினார்.

(அன்றைய பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியினதும், அன்றைய தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரனதும் பணிப்புரைக்கு அமைய தமிழ்நாடு காவல்துறையினர், தமிழ் நாட்டிலுள்ள விடுதலைப் புலி உட்பட மற்றும் ஏனைய தீவிரவாதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் கைப்பற்றினர். இந்த நடவடிக்கையைத் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முழுமனதாக ஆதரிக்கவில்லை. காவல் துறையினர் கைப்பற்றிய ஆயுதங்களையும், தொலைத் தொடர்பு சாதனங்களையும் திருப்பி ஒப்படைக்கும் வரை திரு. பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். இது நடந்த சில நாட்களுக்குப் பின்னர் அன்றைய இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியும், முன்னாள் இலங்கை ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனாவும் கலந்து கொண்ட சார்க் மாநாடு நடைபெற்ற பங்களூருக்குத் திரு. பிரபாகரன் விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டார். அங்கு திரு. ராஜீவ் காந்தியாலும், எம். ஜி ஆராலும் முன்வைக்கப்பட்ட இணக்கத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் நெருக்குதல் கொடுத்தபோதும் திரு. பிரபாகரன் அதை ஏற்க மறுத்துவிட்டார்.)

அவருடைய இறுதி இலட்சியமான தமிழீழத்தை இந்திய அதிகார வர்க்கம் ஒரு பொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்பதை உணர்ந்து கொண்டமையாலேயே திரு பிரபாகரன் இந்தியாவின் நடவடிக்கைகளில் இக்காலகட்டத்தில் சந்தேகமும் வெறுப்பும் கொண்டார்.

புதுடில்லியிலுள்ள இராமகிருட்டினபுரம், டில்லி விமான நிலையம், டெகினாடன் மற்றும் பல இடங்களில் றோவினால் அளிக்கப்பட்ட ஆரம்பப் பயிற்சிக்குப் பின் தீவிரவாதக் குழுக்கள்

தங்களுக்கெனத் தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை அமைத்துக் கொண்டனர். தனது வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றி மத்திய அரசாங்கம் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்த வேளையில் சென்னையிலும் மற்றும் செங்கல்பட்டு, திருச்சி, புதுக்கோட்டை, தென்னாற்காடு, சேலம், தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர், அண்ணா ஆகிய பத்து மாவட்டங்களிலும் முப்பது முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

பல தீவிரவாதக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்புள்ள வட்டாரத்தின்படி, ஓய்வுபெற்ற இராணுவத்தினரே இக்குழுக்களைச் சேர்ந்த போராளிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அமர்த்தப்பட்டதாக அறிய முடிகின்றது. இந்த முகாம்கள் இருப்பதை உள்ளூர் வாசிகள் நன்கறிந்திருந்ததுடன், இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதையிட்டு அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தனர் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்த ஊர்களிலுள்ள இளைஞர்களும் இப்படியான பயிற்சியைப் பெற விரும்பிய போதும் நல்ல காலத்திற்கு அவர்களுக்கு அப்பயிற்சி கொடுக்கப்படவில்லை.

புளொட் அமைப்பின் பிரதான பயிற்சித்தளம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஓரத்தநாட்டிலிருந்த போதிலும் அதற்கு வேறொரு முகாம் மதுரை மாவட்டத்திலுள்ள தமிழ் நாட்டுக்கும், கேரளத்துக்கும் எல்லையிலுள்ள வனப்புமிக்க தேனீ என்ற இடத்தில் அமைந்திருந்தது. தங்களுடைய முகாமிலிருந்து மலையிலுள்ள சுடுகலன் பயிற்சித்தளத்துக்கு இளைஞர்கள் பவனி செல்வது அக்கிராமவாசிகளுக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்ததாக புளொட் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கூறுகின்றார்.

தேனீ போன்ற இயற்கை அழகுள்ள இடத்தில் இருந்து கொண்டு பயிற்சியைப் பெறும் வாய்ப்பை 'புளொட்டிலுள்ள எல்லாப் போராளிகளும் பெறவில்லை. ஆகக் கூடிய எண்ணிக்கையைக் கொண்ட போராளிகள் 'புளொட்' அமைப்பிலேயே இருந்தார்கள். இதனுடைய பயிற்சி முகாம்களில் இடநெருக்கடி தோன்றியதால் சென்னைக்கு மத்தியிலுள்ள நந்தனம் என்ற இடத்தில் இது ஒரு கலியாண மண்டபத்தை வாடகைக்கு அமர்த்தியது. இம்மண்டபத்திலேயே அவர்கள் தங்களது பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டி இருந்தது. உத்தரப் பிரதேசத்திலுள்ள பயிற்சி முகாமொன்றில் குளிப்பதற்கு 'சாம்பூ' வேண்டும் என அடம்பிடித்த புளொட் போராளி ஒருவர் பயிற்சியளிப்பவர்களால் வெளியேற்றப்பட்டார். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக்

கோட்டையிலும் 'புளொட்' அமைப்புக்கு ஒரு பயிற்சி முகாம் இருந்ததாக அறிய முடிகின்றது.

சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலையில் ரெலோவின ருடைய முக்கியமான பயிற்சித்தளம் இருந்தது. இதற்குக் காஞ்சி புரத்திற்கு அண்மையிலுள்ள மகரால் என்னும் கிராமத்தில் வேறொரு பயிற்சி முகாமும், சென்னைக்கருகாமையிலுள்ள பொரூரில் இன்னொரு பயிற்சி முகாமும் இருந்தது,

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணத்துக்கு அருகா மையில் ஈ.பி. ஆர். எல். எவ். அமைப்பின் பிரதான பயிற்சி முகாம் அமைந்திருந்தது.

ஆரம்பத்தில் உத்தரப் பிரதேசத்தில் பயிற்சி பெற்ற போராளிகள் தாங்கள் பயிற்சி பெற்ற இடத்தின் பெயரைத் தங் களுக்குத் தெரியாதென தங்களைச் சந்தித்த பத்திரிகை ஆசிரி யர்களுக்குக் கூறியுள்ளார்கள். டெஹ்ராடனுக்கு அருகாமையி லேயே முகாம் இருப்பதாகக் கூறியுள்ளார்கள். ''நாங்கள் இரவி லேயே உத்தரப்பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு மீண் டும் இரவிலேயே கொண்டுவரப்பட்டுள்ளோம். ஆகையால் பயிற்சி முகாம் எங்கிருக்கின்றது என்பது எங்களுக்குத் தெரியாது. பயிற்சி முகாம்களிலிருந்து வெளியே வர எங்களுக்கு ஒப்புதல் கிடைக்கவில்லை மூன்றரை மாதங்களுக்கு நாங்கள் பயிற்சியைப் பெற்றோம்'' என ரெலோ அமைப்பைச் சேர்ந்த போராளி ஒருவர் கூறினார்.

அபிப்பிராய பேதங்களும், கசப்புணர்வுகளும் கொண்ட பல குழுக்களின் முப்பது முகாம்கள் தமிழ் நாட்டில் இருந்ததால்' இந்த ஒவ்வொரு குழுக்களும் ஒரு முகாமிலுள்ள செய்திகள் மற்ற முகாமுக்குச் செல்லாதவாறு பார்த்துக்கொண்டன பல சந்தர்ப் பங்களில் இந்த முகாம்கள் சித்திரவதைக் கூடங்களாக மாறி யுள்ளன. கும்பகோணத்துக்கு அருகாமையிலுள்ள ஒரு முகாமில் ஒரு இளைஞன் கொதிக்கும் எண்ணெய்க்குள் போடப்பட்டதாக காவல்துறையினர் கூறியுள்ளனர்.

இன்னொரு சம்பவத்தில் ஒரத்த நாட்டிலுள்ள புளொட் முகாமிலுள்ள போராளி ஒருவர் விடுதலைப் புலிகளுக்குத் தக வல்கள் கொடுப்பதாகப் புளொட் உறுப்பினர்கள் சந்தேகித்த போது, அப்போராளி அவ்வூர் மிராசுதார் ஒருவர் வீட்டுக்குச் சென்று அடைக்கலம் கோரினார். புளொட்டைச் சேர்ந்த மற்

றவர்கள் அப்போராளியைப் பின் தொடர்ந்து சென்று தங்களிடம் அவரை ஒப்படைக்கும் படி மிராசுதாரரை வற்புறுத்தினார்கள். அதற்கு அந்த மிராசுதார் மறுத்தபோது அந்தப் போராளியையும் மிராசுதாரரையும் புளொட் இயக்கத்தினர் சுட்டுக் கொன்றார்கள். எம்.ஜி.ஆருடைய அரசாங்கத்தில் மந்திரியாகவிருந்த அ.தி.மு.க. தலைவர் ஒருவருடைய உறவினரே மிராசுதார் என்று உள்ளூர் பத்திரிகைகள் இச்சம்பவத்திற்கொரு அரசியல் திரிபை உண்டாக்கிவிட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தை எம்.ஜி.ஆர். அறிந்ததும், அவர் வெறுப்புற்று தமிழ் நாட்டிலிருந்து எல்லாத் தீவிரவாதக் குழுக்களையும் வெளியேற்ற விரும்பினார் என ஒரு அரசியல் வட்டாரத்தில் இருந்து அறியமுடிகின்றது. இக்குழுக்களை வெளியேற்றுவதற்குப் பதிலாக, இக்குழுக்களின் தலைவர்களை எச்சரிக்கும் படி இவருக்கு ஆலோசனை கூறப்பட்டது. எம்.ஜி.ஆரை நள்ளிரவில் சந்தித்த உமாமகேஸ்வரன் இச்சம்பவத்துக்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார். இதைத் தொடர்ந்து எல்லாக்குழுக்களின் தலைவர்களையும் தான் சந்திக்கவிருப்பதாக எம்.ஜி.ஆர். மதுரையில் 1984ஆம் ஆண்டு அறிவித்தார். இவ்வறிவித்தலுக்கமைய அவர் எல்லாத் தலைவர்களையும் சந்தித்ததுடன் அவர்களுக்குப் போதியளவு உதவியும் செய்துள்ளார்.

பயிற்சி முகாம்கள் இருப்பதை இப்படியான சம்பவங்கள் வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்தின. உள்ளூர்க் கிராமவாசிகளும் இந்த முகாம்கள் இருந்ததை அறிந்து இருந்தார்கள்.

"முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க இயலாது" என்ற பழமொழிக்கு ஏற்ப இவற்றையெல்லாம் நாம் மறைத்துவிட முடியாது. ஆரம்பத்தில் ஒரு சில பயிற்சி முகாம்களே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பின்னர் இதுவளர்ச்சியடைந்து முப்பது பெரிய, சிறிய நடுத்தர முகாம்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு தீவிரவாதக் குழுக்களும் சென்னையிலும் மற்றும் பத்து மாவட்டங்களிலும் தங்கள் சொந்த முகாம்களை அமைத்துக் கொண்டனர். தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களில் அநேகமானோர் மத்தியிலுள்ள கொள்கைவகுப்பாளர்களையும், டில்லியிலுள்ள புலனாய்வுத்துறைத் தலைவர்களையும் சந்திக்கும் சுதந்திரம் பெற்றிருந்தனர். ஆயுதங்களைக் கொண்டுவரும் கப்பல்களுக்கு சுங்கக் கட்டுப்பாடுகள் பெரிதாக இருக்கவில்லை.",

இந்தப் பயிற்சி முகாம்களில் நடைபெற்றுவந்த விரும்பத்தகாத விடயங்களை அறிய வந்த முக்கிய அதிகாரிகள் மாநிலத்தில் சட்டத்துக்கும், ஒழுங்குக்கும் ஏற்படப்போகின்ற பாதிப்பை நினைத்து மனக்கவலையடைந்தார்கள். குறிபார்த்துச்சுடும் பயிற்சிகூடப் போராளிகளுக்குக் கொடுக்கப்பட்டது. அதிகாரிகளின் இக்கவலைகள் முதலமைச்சர் திரு. எம் ஜி.இராமச்சந்திரன் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபொழுது. அவைகளை அவர் மத்திய அரச அதிகாரிகளுடைய கவனத்துக்குக் கொண்டுவருமாறு ஆலோசனை கூறினார். மத்திய அரச அதிகாரிகளுடன் இந்த விடயங்கள் பற்றித் தங்களுக்குப் பேசமுடியாது என அவ்வதிகாரிகள் கருதியிருந்த வேளையில் எம்.ஜி.ஆர். அவர்களும் பிரதம மந்திரியுடன் இவைகள் பற்றிப் பேசத் தயக்கம் காட்டிவந்தார். இந்தக்கால கட்டத்தில் தான் திருமதி இந்திராகாந்தியும், எம்.ஜி ஆரும் அரசியல் ரீதியாக நட்புறவை வளர்த்து வந்தனர். 'மத்திய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகக் கருத்துக் கூறுவதில் இவர் சில கட்டுப்பாடுகளை வைத்திருந்தார்''எனத் தோன்றுகின்றது. அல்லது கர்நாடகத்திலும், தமிழ் நாட்டிலும், புதுடில்லியிலும் தமிழ்த் தீவிரவாதிகளைப் பயிற்சிக்கு அனுப்பியது இவருக்கு அரசியல் மேல்மட்டத்தால் தெரியப்படுத்தப்பட்டும் இருக்கலாம்'' என அரசியல் தலைமைப்பீடத்துடன் நெருங்கிப் பழகும் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது அவருடைய அமைச்சிலோ அல்லது நிருவாகத்திலோ அவருக்கு இந்த விடயங்கள் பற்றி என்னென்ன தெரியும், அல்லது என்னென்ன தெரியாதென்று கேட்கக்கூடிய துணிவுள்ள ஒருவரும் இருக்கவில்லை.

''இந்த விடயங்களில் எம்.ஜி.ஆர். பாராமுகமாகவே இருந்தார். மத்திய அரச அதிகாரிகளுக்கு இந்தத் தகவல்களைக் கொடுக்கும்படி அவர் முன்னர் கூறியவற்றையே திரும்பவும் கூறினார்'' எனத் தகவலறிந்த வட்டாரங்கள் கூறின. இவர் பணித்ததின் பேரில் உத்தியோகபூர்வமாகக் கருதக்கூடிய கடிதமொன்றை புலனாய்வுத்துறைப் பணிப்பாளருக்கு எழுதி அதன் பிரதிகளை டில்லியிலுள்ள பாதுகாப்புச் சம்பந்தமான கிளைகளில் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்தக் கடிதத்துக்கு எல்லோரும் எதிர்பார்த்தது போல் ஒரு விதமான பதிலும் கிடைக்கவில்லை.

''இதே வேளையில் பயிற்சி முகாம்களும் அதிகரித்துக்

கொண்டே இருந்தன. மத்திய அரச அதிகாரிகள் இந்த விடயங்களை நேரடியாகக் கவனித்துவருவதால் நாங்கள் இதில் தலையிடக் கூடாதென மறைமுகமாக எங்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. மாநில அரசு தலையிட முடியாத சிறிய யூனியன் பிரதேசங்கள் எனக் கூறுமளவுக்கு இந்த முகாம்கள் இருந்தன'' என ஒரு வட்டாரம் கூறியுள்ளது.

கும்பகோணத்துக்கு அருகேயுள்ள தீவிரவாதிகளின் முகாம் ஒன்றுக்கு முன்னால், மாநிலக் காவல்துறையினரின் நிழற்படக் கருவி (கமரா) ஒன்றைத் தீவிரவாதிகள் வலுக்கட்டாயமாகக் கைப்பற்றி அதை நொருக்கிய சம்பவம், ஒரு கவலையைத் தரும் சம்பவமாகும். இருப்பினும் மாநிலக் காவல்துறையினர் தங்கள் வட்டாரங்களிலிருந்த முகாம்கள் சம்பந்தமான தகவல்களைத் தங்கள் ஆட்கள் மூலம் பெற்றுக்கொண்டார்கள்.

''கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு பயிற்சி முகாம்களுக்குள் சித்திரவதைகள் செய்யப்படுவதையும், தாங்களே சட்டத்தின் பாதுகாவலர்களாக நடப்பதையும் பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கின்றோம். இன உணர்வு காரணமாக இந்த முகாம்களைச் சுற்றியுள்ள கிராமவாசிகள், போராளிகள் மேல் ஆரம்பத்தில் ஆதரவு கொண்டிருந்தார்கள். காலப்போக்கில் தீவிரவாதிகளின் தலைவர்களும் பயிற்சி முகாம்களிலுள்ள போராளிகளும் பயிற்சி முகாம்களுக்கு வெளியே தங்கள் ஆயுதங்களுடன் வந்து தங்களைப் பெரியவர்களாகக் காட்டிக்கொள்ள ஆரம்பித்ததும், இதனால் அச்சமடைந்த கிராமவாசிகளின் அனுதாபத்தை போராளிகள் இழந்துவிட்டார்கள் என இந்த வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

நாலு பெரிய சம்பவங்கள் சம்பந்தமாகக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர், அவையாவன:

(1) 1982ஆம் ஆண்டு மே மாதம் சென்னையிலுள்ள பாண்டி பசாரில் பிரபாகரனுக்கும், உமாமகேஸ்வரனுக்கும் இடையே நடந்த சூட்டுச்சம்பவம்.

(2) 1984இல் ஆகஸ்ட் மாதத்தில் தமிழீழ இராணுவம் என்று அழைக்கப்படும் ஒரு சிறு குழுவினால் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நடாத்தப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவம். (பத்து நாட்களுக்குள் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டோர் கண்டுபிடிக்கப்பட்டனர்)

22230.C.

(3) 1986ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஒரத்த நாட்டின் அண்மையிலுள்ள கிராமமொன்றில் உள்ள சில வீடுகள் ஒரு தீவிரவாதக் குழுவால் கொள்ளையடிக்கப்பட்டது.

(4) 1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆந் திகதி சென்னையிலுள்ள சூளைமேட்டைச் சேர்ந்த ஒரு இளைஞன் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினர் சுட்டுக்கொன்றமை.

1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி 'ஒபரேசன் ரைகர்' (*Operation Tiger*) என்ற நடவடிக்கையை காவல்துறையினர் மேற்கொள்ள மேற்கூறிய சம்பவங்களே தூண்டுகோலாக அமைந்தன. இந்த நடவடிக்கையின் காரணமாக தமிழ்நாட்டிலுள்ள எல்லாத் தீவிரவாதக் குழுக்களுடைய ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் காவல்துறையினர் ஒரு வேட்டுத்தானும் தீராது கைப்பற்றினர்.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு அப்பொழுது புதிய தீவிரவாதக் குழுவாக இருந்த ஈ. என். டி. எல். எவ்க்கு பயிற்சியளிக்கப்பட்டதாக தகவலறிந்த தமிழ் வட்டாரங்கள் கூறுகின்றன. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளையில் அநேகமான பயிற்சி முகாம்கள் மூடப்பட்டுவிட்டன. இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டின் முதலாவது அத்தியாயம் இத்துடன் ஒரு முடிவுக்கு வந்தது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்டதுடன் இந்த நெருக்கடியான அத்தியாயம் ஒரு முடிவுக்கு வந்தபோதும், 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆந் திகதி இந்திய அமைதி காக்கும் படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே போர் ஆரம்பித்த பின்பும் இதனுடைய பின் விளைவுகள் இருந்துகொண்டே இருக்கின்றன. 1987ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி எம்.ஜி.ஆர் இறக்கும்வரை மாத்திரமின்றி, 1988ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி அண்ணா தி.மு.க அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டு ஜானகி அம்மையாரின் ஆட்சி கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பின்பும் விடுதலைப் புலிகள் விடயத்தில் மென்போக்கே கடைப்பிடிக்கப்பட்டுவந்துள்ளது.

1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆந் திகதி வெளி வந்த திராவிட முன்னேற்றக்கழகப் பத்திரிகையான 'முரசொலி' யில், அரசாங்க ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட முக்கிய விப ரங்களைத் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி தந்துள்ளார். இந்திய அமைதிகாக்கும் படைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ஆந் திகதி மோதல் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதைக் கண்ட புலனாய்வுத்துறையின் பணிப்பாளர் (IB) 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ஆந் திகதி தமிழ் நாட்டி லுள்ள காவல்துறைப் பணிப்பாளருக்கு (DGP) விடுதலைப் புலிகளுடைய தொலைத் தொடர்பு சாதனங்களைக் கைப்பற் றும்படி பணித்ததாகத் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி கூறியுள்ளார். ஆனால் தமிழ்நாடு அரசாங் கத்திடமிருந்து அறிவுறுத்தல் வந்ததன் பின்னரே தான் அதைச் செய்ய முடியுமென்றும், தான் அப்படிச் செய்வதால் எழக்கூடிய பின்விளைவுகளை ஞாபகப்படுத்தியும் காவல்துறைப்பணிப்பாளர் இதற்குப் பதில் கொடுத்திருந்தார். அத்துடன் இது சம்பந்தமாக யாரையும் கைதுசெய்வது புத்திசாலித்தனமல்ல என்பதையும் சுட்டிக்காட்ட அவர் பின்நிற்கவில்லை.

1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆந் திகதியில் இருந்து இந்திய அமைதிகாக்கும் படைக்கும் விடுதலைப்புலி களுக்குமிடையே போர் ஆரம்பித்ததன் பின் தமிழ்நாடு காவல் துறைப் பணிப்பாளரை விடுதலைப் புலிகளுடைய தொலைத் தொடர்பு சாதனங்களை உடனே கைப்பற்றும்படி மத்திய அரசாங்கம் பணித்தது.

1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆந் திகதி தமிழ் நாடு காவல்துறைப்பணிப்பாளர், புலனாய்வுத்துறைப் பணிப் பாளர், மத்திய அரசின் செயலாளர் ஆகியோர் பங்குபற்றிய கூட்டத்தில், விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடி யவர்கள் ஒன்றில் மாநில பிரதம காரியதரிசியாக இருத்தல் வேண்டும். அல்லது காவல்துறைப் பணிப்பாளராக இருத்தல் வேண்டும் அல்லது புலனாய்வுத்துறைப் பணிப்பாளராக இருத் தல் வேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்டது. விடுதலைப்புலிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டை தளர்த்தலாமென்றும், தமிழ் நாடு அரசாங்கம் என்ன கட்டுப்பாடுகளை விதிக்க எண்ணு கின்றதோ அதே கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்றும் இது நடந்த மறுநாளே புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் தமிழ்

நாடு காவல்துறைப் பணிப்பாளருக்கு ஒரு செய்தியை அனுப்பி யிருந்தார். இதன் பிரகாரம் சென்னையில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவ ரான கிட்டு அவர்களை யார் சந்திக்க விரும்புகிறார்களோ அவர்களை சோதனை செய்த பின் சந்திக்க ஒப்புதல் தரலாம் என அறிவிக்கப்பட்டது.

இதேவேளை 1987ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி எம். ஜி. ஆரின் மறைவைத் தொடர்ந்து அவரினால் கட் டிக்காக்கப்பட்டு வந்த அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம் இரண்டு பிரிவுகளாகி ஒன்று திருமதி ஜானகி தலைமையிலும் மற்றது செல்வி ஜெயலலிதா தலைமையிலும் பிளவுபட்டது. திருமதி ஜானகி இராமச்சந்திரன் இருபத்திமூன்று நாட்களே முதலமைச்சராகப் பதவி வகித்தார். அண்ணா தி. மு. கழகத் தின் இரு பிரிவினருக்குமிடையே மாநில சட்ட சபையில் ஏற்பட்ட வன்முறைச்சம்பவங்களுக்குப் பின் மாநில அரசாங்கம் கலைக்கப் பட்டு 1988ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி தமிழ்நாடு ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்தக் கட்டத்திலும் விடுதலைப்புலிகள் விடயத்தில் காட்டப்பட்டு வந்த மென்போக்கு நிறுத்தப்படவில்லை.

ஜனாதிபதி ஆட்சியின் கீழுள்ள தமிழ்நாடு நிருவாகம் விடு தலைப்புலிகளுக்கு ஆதரவு அளிப்பது மாத்திரமின்றி அவர்கள் ஆயுதங்களையும் மற்றும் பொருள்களையும் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்கு எதிராக எதுவித நடவடிக்கைகளை யும் எடுக்கவில்லை எனவும், 1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆந் திகதி காவல்துறைப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் ஒரு இராணுவ அதிகாரி குற்றம் சுமத்தியுள்ளார். இக்குற்றச் சாட்டுக்களை காவல்துறைப் பணிப்பாளர் மறுத்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சு 1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆந்திகதி தமிழ்நாட்டு காவல்துறைப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் இக்குற்றச்சாட்டுக்களுக்கு விளக்கம் கோரி யிருந்த போதும் 1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி காவல்துறைப்பணிப்பாளர் தான் எழுதிய பதிலில் இவற்றை மறுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரான திரு. ஏ. எஸ். பால சிங்கம் சுதந்திரமாகச்செயல்படுவதற்கு ஒப்புதல் தரப்பட்டுள்ளது

எனவும், திரு. கிட்டுவுக்குத் தனியான தொலைபேசித் தொடர்புகள் வழங்கப்பட்டிருக்கின்றதெனவும், இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிடும் இந்திய அமைதிகாக்கும் படைக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்க விடுதலைப் புலிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கின்றதெனவும். விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டிலிருந்து ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் இலங்கைக்குக் கடத்துகின்றார்கள் எனவும் குற்றஞ் சுமத்தி, இதற்கான விளக்கத்தைத் தருமாறு தமிழ் நாட்டிலுள்ள புலனாய்வுத் துறைத் தலைவரை மத்திய அரசின் உள்துறைச் செயலர் 1988-ம் ஆண்டு மே மாதம் 3-ம் திகதி கோரியிருந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின் தமிழ்நாட்டுப் புலனாய்வுத் துறைத் தலைவரால் அதற்கு அனுப்பப்பட்ட பதிலில், மத்திய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே எல்லா முடிவுகளும் எடுக்கப்பட்டன எனக் கூறப்பட்டிருந்தது.

1988-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி மதுரையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 72 தீவிரவாதிகளையும் சென்னையில் 70 விடுதலைப் புலிகளையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவல்துறையினர் கைதுசெய்து சிறையில் வைத்தனர். அடுத்த மாதம் செப்டம்பர் 11-ம் திகதி திரு. கிட்டுவும், மற்றும் 14 விடுதலைப் புலிகளும் அதே சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சென்னையில் சிறை வைக்கப்பட்டனர்.

தங்களை விடுதலை செய்யாவிடின். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் இடையே மோதல் ஆரம்பித்து ஒரு ஆண்டு பூர்த்தியான 1988-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10-ம் திகதியிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் திரு. கிட்டு பயமுறுத்தியதால், 85 விடுதலைப் புலிகள் 1988-ம் ஆண்டு ஒக்டோபர் 9-ம் திகதி விமானமூலம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். திரு. கிட்டு இந்திய அமைதி காக்கும் படையினரால் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக விடுதலை செய்யப்பட்டார். ஏனையோர் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையிலிருந்து 1990-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளியேறும் வரை அவர்களால் தடுப்புக் காவலில் வைத்திருக்கப்பட்டனர்.

இந்திய அமைதி காக்கும் படையைச் சேர்ந்த அதிகளவிலான படையினர் இறந்து கொண்டிருந்த வேளையிலும். இலங்கை

தமிழர்கள் பிரச்சினையில் இந்தியா என்ன அணுகுமுறையைப் பின் பற்றியது என்பதையும், விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துத் தீவிரவாதிகள் விடயத்தில் தமிழ்நாடு எப்படியான மென்போக்கை கடைப்பிடித்தது என்பதையும் இந்த விபரங்கள் வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றன.

முதலமைச்சர் ஜெயலலிதாவும், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்ததாக ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சுமத்துவதாகவும், இவர்கள் இருவருமே உதவி செய்யவில்லை என்றும், எம். ஜி ஆர். மாத்திரமே தங்களுக்கு உதவி செய்தார் என்றும், விடுதலைப் புலிகள் உறுப்பினர்களில் ஒருவரான திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் அண்மையில் வெளிப்படுத்தியுள்ளார். எம். ஜி. ஆர் விடுதலைப்புலிகள் மீது கொண்டிருந்த அனுதாபத்தை விட, அவரது தயாள குணத்தின் காரணமாக, 1987ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அவர்கள் பெற்ற நான்குகோடி ரூபாவை விட மேலும் இருபதுகோடி ரூபாவை நன்கொடையாகப் புலிகளால் பெற முடிந்தது எனத் தீவிரவாத வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.


# பெயர்கள்

தமிழுக்கு அமுதென்று
பெயர்!
தமிழனுக்கோ
அகதி என்று
பெயர்!

சகீர்

ராணி 23-2-92

# சுவர்களுக்குள் வசிக்கும் குடியேற்ற வாசிகள்




இக்குடியேற்றவாசிகள் உபசார குணங்கள் கொண்டவர்கள். மேற்குக் கரையிலும் (West Bank) காசாத் தொடரிலும் (Gaga

Strips) உள்ள தங்கள் யூதச் சகோதரிகளைப் போலல்லாது அராபியர்களைத் தங்கள் நண்பர்களாக்க விரும்புகிறார்கள் என இவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் இயந்திரத் துப்பாக்கிகளைத் தம்முடன் கொண்டு செல்வதைத் தவிர்த்துக் கொள்கின்றார்கள். இவர்கள் பலஸ்தீனிய அயலவர்களைக் காப்பி அருந்துவதற்குத் தங்கள் வீடுகளுக்கு அழைக்கின்றார்கள். உள்ளூர் அராபிய வியாபாரிகளையும் ஆதரிக்கின்றார்கள். இருந்தும் இவர்கள் தங்களுடைய சுகதுக்கங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.

பாதுகாப்புப் படைகளுடன் தொடர்பு கொள்வதற்காக ஜெருசலேத்தின் பழைய நகரமாகிய தொட்சு வாசலை அண்மித்து அமைந்துள்ள திருமதி சாராபென் மோயல் உடைய வீட்டில் றேடியோத் தொடர்பு சாதனங்கள் (வாக்கி டோக்கிகள்) இணைக்கப்பட்டுள்ளது. அயலிலுள்ள மற்றைய வீடுகளைப் போலல்லாது குடியேற்றவாசிகளின் வீடுகளின் பலகணிகளில் மறைப்புக் கொண்டதாயும், வெளிப்படலைகளின் மேற்பக்கம் முட்கம்பி கொண்டதாயும் இருக்கின்றன. திருமதி சாராவின் பிள்ளைகள் வெளியில் செல்லும் போதெல்லாம் அவர்களுடைய பாதுகாப்புக் கருதி அரசாங்க ஊதியம் பெறும் ஆயுதந் தரித்த பாதுகாவலர் ஒருவர் அவர்களுடன் செல்வார். அப்பிள்ளைகள் உள்ளூர் அராபியக் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவதில்லை. இது சிக்கல் நிறைந்ததாயுள்ளது. ஆனால் ''இஸ்ரேலின் நிலப்பரப்பின் எவ்விடத்திலும் யூதர்கள் வசிக்கத் தக்கதாக இருக்க வேண்டும். அராபியர்கள் இதை விளங்கிக் கொண்டு எம்மை ஏற்றுக்கொள்வார்கள்'' என 37 வயதான பென்மோயல் என்னும் யூதப் பெண்மணி கூறுகின்றார்.

யூதக்குடியேற்றத்தைப் பரவச் செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டைக் கொண்டுள்ள ஒரு அரசாங்கத்தின் ஆதரவுடன் பழைய நகரத்திலுள்ள முஸ்லிம்களின் பகுதியில், பலஸ்தீனியர்களுக்குக் கோபமூட்டக்கூடிய வகையில் இஸ்ரேலிய அதிதீவிரவாதிகள் ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்கி வருகிறார்கள். தற்பொழுது யூதர்கள் வாழும் பகுதிக்கு வெளியே 600-க்குமேற்பட்ட யூதக்குடியேற்றவாசிகளின் குடும்பங்கள் வசித்து வருகின்றன. 'டமாஸ் வாசலுக்கு' அருகாமையில் அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டம் முடிவுற்றதும் அவர்களின் எண்ணிக்கை இருமடங்காகிவிடும். இஸ்லமியர்களுடைய மூன்றாவது அதி புனிதத் தன்மை வாய்ந்த வணக்கஸ்தலமான அல் அக்சா மசூதிக்கும் மேற்கத்தைய சுவருக்கும் (Western wall) அண்மையாகவுள்ள இடங்

களையே பல யூதர்கள் தாங்கள் வசிப்பதற்குத் தெரிவு செய்கின்றார்கள். யூதர்களின் தெய்வமான ஹெரோட்சு கோவிலை (*Herodls Temple*) அது முன்னர் இருந்த இடத்தில் இஸ்ரேல் மீண்டும் அமைக்கும் ஒரு நாளைச் சிலர் எதிர்நோக்குகின்றார்கள். ''அவர்கள் நியாயமானவர்களாயிருந்தால் ஏன் காவல்துறை பாதுகாப்புடன் வருகின்றார்கள்'' எனக் கேட்கின்றார் முஸ்லிம்கள் வாழும் பகுதியில் இருக்கும் பலஸ்தீனப் பத்திரிகையாளர் மஜீட் அல் பட்சு அவர்கள்.

*1967*இல் ஜெருசலேத்தை இஸ்ரேல் கைப்பற்றுவதற்கு முன்பே, மிதமிஞ்சிய சனநெருக்கடியில் இருந்து தப்புவதற்காக மத்திய வகுப்பைச் சேர்ந்த அராபியர்கள் தாங்கள் வசித்து வந்த முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலிருந்து வெளியேறத் தொடங்கிவிட்டனர். அதைத்தொடர்ந்து இஸ்ரேல் கடைப்பிடித்து வந்த கொள்கை இவ்விடயங்களைக் கைப்பற்றுவதற்கு இலகுவாயமைந்தது என அராபியர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். வீடுகளைப் பெரிதாகக் கட்டுவதற்கோ அல்லது பழைய வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்கோ நீண்டகாலமாக ஒப்புதல் தர அரசாங்கம் மறுத்துவருகின்றது எனவும் அவர்கள் குறை கூறுகின்றார்கள். இதன் காரணமாக அப்பகுதி சீரழிந்துவிட்டது எனவும் அவர்கள் கூறுகின்றார்கள். அராபியர்கள் வாழ்ந்து வந்த பழைய நகரத்தில், புதிய நகரமொன்றை அமைப்பதற்காக ஓர் அமைதியான இயக்கம் ஆரம்பித்தபோது *1978*இல் இருந்த லிகுட் (*Likud*) அரசாங்கம் அதற்கு ஆதரவளித்தது ஒரு காலத்தில் யூதர்களின் உடைமையாக இருந்தன என்று காரணங்காட்டப்பட்டுச் சில கட்டிடங்கள் பொறுப்பேற்கப்பட்டு. அங்கு இரண்டு யெசிவாஸ்கள் என்னும் வணக்கஸ் தலங்களும் திறக்கப்பட்டுள்ளன தற்பொழுது வீட்டுவசதியமைச்சராகவிருக்கும் ஏரியல் சரோன் ஒரு வசிப்பிடத்தை இங்கு வாங்கியுள்ளார். இவ்வசிப்பிடத்திற்கு எப்போதாவது அவர் வருகை தருகின்றார். ஆனால் இதற்கு எந்நேரமும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பழைய நகரில் எஞ்சியிருந்த அராபியர்களும் கூடுதலாக அகற்றப்பட்டுள்ளனர். நகரின் மேற்குப்பக்கமாக ஜவ்வா வாசலுக்கு (*Jaffa Gate*) வெளியே, யூதர்களுக்கென ஒரு பெரிய புதிய வீடமைப்புத் திட்டத்தையும், ஒரு வர்த்தகத்தொடர்மாடிக் கட்டிடத்தையும் அமைப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிர்

90,000 கூடுதலான குடியேற்ற வாசிகளுக்கு வீடுகளையமைக்க வேண்டுமென்ற திரு. சாரோன் அவர்களுடைய துரித செயல்பாட்டை இது முழுமைப்படுத்துகின்றது. சென்ற ஆண்டுக்கடைசியில் பழைய நகரின் சுவர்களின் வெளிப்புறத்தில் உள்ள சில்வானில் அமைந்துள்ள ஆறு வீடுகளைக் குடியேற்றவாசிகள் கைப்பற்றினார்கள். அவர்கள் அவ்வீடுகளில் இருந்த குடும்பங்களைத் துப்பாக்கி முனையில் கட்டாயமாக வெளியேற்றினார்கள். அதே குடியேற்றவாசிகள் அந்தக் கிராமத்தில் யூதர்களுக்கென 200 வீடுகளை அமைக்கும் திட்டங்களை அறிவித்துள்ளார்கள். பொருளாதார நெருக்கடிக்குள் உள்ளாகி இருக்கும் முஸ்லிம்களிடம் பணம் தரப்பட்டு அவர்கள் சொத்துக்கள் வாங்கப்படுகின்றன.

பணம் மூலம் வாங்க இயலாத போது பழைய சட்டங்கள் மூலம் வீடுகள் எடுக்கப்படுகின்றன. உதாரணமாக அவ்விடத்தில் வசியாத ஒரு பலஸ்தீனியருடைய சொத்தைக் கைப்பற்றுவதற்கு 1950ம் ஆண்டு ஆக்கப்பட்ட சட்டமொன்று இஸ்ரேலுக்கு ஒப்புதல் கொடுக்கிறது. நுணுக்கமாக நோக்கினால், 1948ல் இருந்து 1967 வரை பழைய நகரைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த ஜோர்தான் உட்பட, மற்றைய அரேபிய நாடுகளில் வசிக்கும் எந்தவொரு பலஸ்தீனியனும் இச்சட்டத்தின் கீழ் அடங்குவார். திரு. சாமோனுடைய வீடமைப்பு அமைச்சிலிருந்து குறிப்பிடத்தக்க சட்ட, பொருளாதார உதவிகளையும் பண உதவியையும் குடியேற்றவாசிகள் பெறுகின்றார்கள். சட்டத்தைத் தங்களுக்கேற்றமாதிரி மாற்றுகிறார்கள் என்றும், சட்டத்தை ஏமாற்றுகிறார்கள் என்றும், சட்டத்தை மீறுகிறார்கள் என்றும் அரச அதிகாரிகளுக்குத் தெரியும் எனக் கூறுகின்றார் இஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு டெடிசக்கர் அவர்கள். ஆனால் குடியேற்ற வாசிகளுக்காகப் பேசுகின்ற பெண்ணான ரெகிலா றாப்ஸ் ''இவையெல்லாம் உண்மைக்குப் புறம்பானவை'' எனக் கூறுகின்றார். ''நாங்கள் அராபியர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதில்லை. பழுதான நிலையிலுள்ள வீடுகளுக்குக் கூடுதலான பணம் கொடுக்கிறோம்'' என அவர் மேலும்கூறுகிறார். எப்படியிருந்தாலும் நாம் எமக்கும் மேலாக உள்ள ஒருவருக்கு மறுமொழி கூறவேண்டியுள்ளது எனக் குடியேற்றவாசிகள் கூறுகிறார்கள். ''இஸ்ரேலுக்குரிய நிலப்பரப்பில் எங்கணும் குடியேறும்படி விவிலிய நூலில் எங்களுக்குக் கூறப்படுகின்றது அதுவும் பழைய நகரத்திலேயே முக்கியமாகக் குடியேறும்படி சொல்லப்படுகின்றது'' என றபி ஸ்லோமோ அவினர் கூறுகின்றார்.

முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் வன்முறைகளுக்கு வழிவகுக்கும் என்றும், பலஸ்தீனிய மக்களிடையே கிளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் என்றும் இஸ்ரேல் அதிகாரிகளுக்குத் தெரியும். சென்ற வாரம் மொஸ்கோவில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்ட மத்திய கிழக்குப் பேச்சுவார்த்தைகளை இது மறுபுறத்தில் குந்தகமாக்ககூடும். ஆனால் எப்படி இருந்தாலும் சமாதான முறைபற்றி அரசாங்கம் அக்கறையாக இல்லை. அத்துடன் முஸ்லிம்கள் வாழும் பகுதியில் குழப்பங்கள் ஏற்பட்டால் அதைச் சமாளிப்பதற்கும் அரசு ஆயத்தமாக உள்ளது. மகத்துவமுடையவரான சுலைமான் *(Sulaiman the magnificient)* அவர்களால் கட்டப்பட்ட சுவர்களுக்கு உட்பக்கம் காவலர்களும் படைப்பிரிவினர்களும் நிரம்பியுள்ளனர். அத்துடன் சின்பெற் *(Shin Bet)* றினுடைய இஸ்ரேலிய பாதுகாப்புத் துறையினரால் இப்பகுதி பலமாகப் பாதுகாக்கப்படுகின்றது. தங்களைக் காண வருபவர்கள் கூட அடிக்கடி சோதனை செய்யப்படுகின்றார்கள் என அராபியர்கள் கூறுகின்றார்கள். அதே வேளையில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் பல யூதர்கள் கத்தியினால் குத்தப்பட்டுள்ளனர். இப்பகுதியில் கலவரம் வெடித்தால் அதன் அதிர்வு ஆயிரம் மைல்களுக்கு எதிரொலிக்கும்.

## நீர்மூழ்கிக் கப்பல்

கடலின் மேற்பரப்பின் உள்ளே மூழ்கிச் சென்று தாக்க வல்ல நீர் மூழ்கிக் கப்பல் (Submarine) இங்கிலாந்து நாட்டவரான கோரினலிசு டிரிபெல் (Cornelis Drebbel) என்பவரால் கி. பி. 1624இல் கண்டு பிடிக்கப்பட்டது. இது முதன் முதலில் தேம்சு நதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

# தமிழர் தாயகம்
# எதிர்
# சிங்களவர்களின் தாயகம்

டாக்டர் சாந்தா கே. கேனநாயக்கா
(புவியியல்துறை பேராதெனியா பல்கலைக்கழகம்
ஐலண்ட் 29.2.92)

தமிழர் தாயகம், சிங்களவர்களின் தாயகம் என்ற பதங்களில் உள்ள அரசியல் கோட்பாடுகளின் ஆரம்பம் சமயகாலத்தவையாகும். தம்பதிப சிகலதிபக் கோட்பாடுகள் நீண்ட காலம் எம்மிடையே நிலவியபோதும் 1970களின் கடைசிப் பகுதிவரை அவை எதுவித அரசியல் அர்த்தத்தையும் கொண்டவையாக இருக்கவில்லை. அவை அநேகமாகப் பண்பாட்டு வட்டங்களுக்குள்ளேயே வரையறுக்கப்பட்டிருந்தன. அவற்றின் எல்லைகளும் கூடத் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. சிங்களவர் அல்லாதோர் புத்தசமயிகளல்லாதோரும் இந்த ''சிங்களவர்களின் தீவு'' இலும் ''தம்ம தீவு'' இலும் எங்கு வேண்டுமானாலும் வாழலாம்.

''சிங்களவர்களின் தாயகம்'' என்பது சிங்களவர்களிலும் பார்க்கத் தமிழ் இனத் தேசியவாதிகளினாலேயே கூடுதலாக எடுத்துக் கையாளப்படுகிறது. தமிழர் தாயகம் என்ற கோட்பாடு முன் வைக்கப்பட்ட பின்னரே அதற்கெதிராகப் பின் விளைவாகத்தான் சிங்களவர்களின் தாயகம் என்ற கோட்பாடு உருவாகியது.

தமிழர்களிடையே தேசியவாதம் அரசியலைக் கூர்மையடையச் செய்வதில் சிங்களவர் எவ்வளவு தூரம் காலாக இருந்தார்களோ அவ்விதம் இந்த முறை தமிழர்கள் ''சிங்களவர்களின் தாயகம்'' கோட்பாட்டை உருவாக்கவும் அதை அரசியல்மயப்படுத்தவும் தூண்டுகோலாக இருந்தார்கள்.

''சிங்களவர்களின் தாயகம்'' என்ற பதத்தை நான் இங்கு பாவித்தாலும் அக்கோட்பாட்டின் அடிப்படையே சமகால சிங்கள அரசியல் வழக்கில் ஒரு பொருத்தமற்ற பதமாகும். சிங்களவர்கள் தமது தாயகம் எனக் கருதுவது ஏறக்குறைய சமய சார்பற்ற கருத்தை உள்ளடக்கிய சமயசார்பற்ற சிறிலங்கா என்று அழைக்கப்படும் கோட்பாட்டு நோக்கிலேயாகும்.

எனவே எதிர்காலத்தில் சமயசார்பற்ற சிறிலங்கா தான் ''சிங்களவர்களின் தாயகம்'' என்ற எண்ணம் சிங்களவர்களின் மனதில் இறுக்கமாகப் பதியுமானால், அவ்வித எண்ணத்தை உருவாக்கியதன் முழுப் பொறுப்பையும் சிறிலங்காவின் தமிழர்கள் மட்டுமல்ல ஏனைய சிறுபான்மையினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## பின்னிப்பிணைந்த பிரதேசம்

முதலாவதும் மற்றவற்றிலும் பார்க்க முக்கியத்துவமான வித்தியாசம் ''சிங்களவர்களின் தாயகம்'' ''தமிழர் தாயகத்தை'' முற்றாகத் தன்னுள் அடக்கியுள்ளமையாகும். ' தமிழர் தாயகம்'' சிங்களவர்களின் தாயகத்தைப் பிரித்துக்காட்டுகின்றது. இதன் விளைவு இனப்பிரச்சினைக்கு ஒரு புதிய வடிவத்தை சேர்ப்பதாக அமைகின்றது.

திரு. எச். எல். டி.சில்வா எடுத்துக்காட்டி உள்ளது போல் ''ஒரு குறிப்பிடத்தக்க அளவு தமிழர்களின் எண்ணப்படி பிரச்சினைக்குத தீர்வு எனக்கருதப்படுவதே குறிப்பிட்ட அளவு சிங்களப் பெரும்பான்மைப் பிரிவுகளுக்கு பிரச்சினையாகப்படுகிறது. அதாவது சமஸ்டிக் கோரிக்கைநாட்டின் குறிப்பிடத்தக்க அளவு நிலப்பரப்பைத் தமது தனி ஆதிக்கத்தின் கீழ் ஆட்சிசெய்யவும் தமதாக்கிக் கொள்ளவும் விடுக்கப்படும் கபடமான கோரிக்கை என அவர்கள் நினைக்கிறார்கள்'' (1991:26) ஆகவே எமது பிரச்சினை வேறுமட்டத்துக்கு வந்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் பற்றி குறிப்பிட்டளவு தீர்வுக்கு இருபகுதியினரும் இணக்கங்கண்டாலும் அரசியல் அதிகாரப் பரவலாக்கலை எதற்குக் கொடுப்பது என்ற தீர்வு காணப் படாத பிரச்சினை எஞ்சியிருக்கும். நான் முன்னர் விளக்கியுள்ளது போல் அரசியல் ஆவேசங்களும் உணர்ச்சிவேகங்களும் அடங்கிய பின் பார்த்தால் நிதானமான தளநிலைப்பாடுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதனுடன் கிட்ட இணைந்த அயல் பகுதிகளுமே தமிழர் தாயகமென்று கூறக்கூடியதாக இருக்கிறது-

## தனித்துவமும் உள்ளடக்கமும்

இரண்டாவது வித்தியாசம் தமிழர்கள் அதுவும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் வழிநடாத்தப்படும் தமிழ் இனத்தேசிய

வாதிகள் தமது தாயகத்தை தனித்துவமான தமிழர் பிரதேச மெனக் கருதுகிறார்கள். ஆனால் சிங்களவர்கள் தம் தாயகத்தை மற்றவர்களையும் உள்ளடக்கியதாகக் கருதுகிறார்கள்.

சமய சார்பற்ற அரசியல் முறைகள் கண்டுபிடிக்கப்படு வதற்கு முன்னரே புராதன சிறிலங்காவில் சிங்கள அரசுகளும் மக்களும் தமது இராசதானியையும் கிராமங்களையும் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமென்று வரையறுக்கவில்லை.

தமிழர்களும் முஸ்லிம்களும் தீவின் எல்லாப்பகுதிகளிலும் வாழ்வது இதற்குத்தகுந்த சாட்சியாக அமைகிறது. சமீபகால வரலாற்றில் கூட இந்நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. கிறீஸ்தவ ஆலயங்கள், மசூதிகள், கோவில்கள் ஆகியன பட்டினத்தின் மத்தியில் கட்டப்படுவது சிங்களவர்களின் தாயகத்தில் தனித்துவக் கோட்பாடு இருப்பதைக்காட்டுவதாக அமைய வில்லை.

வெளிக்காட்டாதவாறு மெதுவாக மத்திய மலைப்பகுதியில் உருவாகிவரும் ''மலைநாடு'' அதாவது ''இந்தியத்தமிழரின் தாயக'' த்தை அவர்கள் ''தனித்தமிழர்தாயகம்'' போன்றதொன்று என்று கணிப்பது மற்றவரையும் உள்ளடக்கிய ''சிங்களவர்களின் தாயகத்தை'' மேலும் துண்டாடுவதாக அமைகிறது. உண்மையில் இந்த விதமான பரிணாம வளர்ச்சிகள் காரணமாக தமிழீழச் சகோதரர்களிடமிருந்து இதற் கேற்ற கருத்துக்களையும் தந்திரோபாயங்களையும் கடன்வாங்கி சிங்களவர்களின் நலன்களைப் பாதுகாக்கவேண்டுமென்று சில சிங்களவர்கள் எண்ணத்தொடங்கியுள்ளனர்.

நியாயமான முறையில் நடந்துகொள்வார்களேயானால் ஏனைய இனமக்கள் தம்மிடையே வந்து வசிப்பதை சிங்களவர்கள் தமக்குப்பயமுறுத்தல் என்று கணிப்பதில்லை. முற்றுமுழுதான 100 சதவீதமான சிங்களவர்கள் வாழும் ஓர் உதவி அரசாங்க அதிபர் பிரிவை சிறிலங்காவின் எப்பகுதியிலும் காணமுடியாது எமது நகரங்களிலுள்ள பெயர்ப்பட்டியல்களை ஒருமுறை நோக்கினால் பெரும்தொகையான தமிழர்களும் முஸ்லிம்களும் அங்குவாழ்வதை அவதானிக்கலாம்.

சிங்களத் தலைவர்களின் தமது தாயகத்தைப் பொறுத்த திறந்ததாராள விட்டுக்கொடுக்கும் தேசிய அரசியல் போக்கை சிறுபான்மையினர் குறிப்பாக இந்திய தமிழரும் முஸ்

லிம்களும் தமக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளும் பல சம்பவங்களைப் பற்றி சிறிலங்காவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அறியக்கூடியதாயிருக்கிறது. இச்சம்பவங்களின் விளைவால் சிங் களவர்களின் தாயக்கோட்பாட்டுக் கொள்கை திரும்பவும் மேலும் அரசியல் முனைப்புப்பெற வழங்குகிறது.

இந்தநிலையில் சிங்களவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென சிங்கள பாதுகாப்புச் சங்கம் போன்ற அமைப் புக்கள் தோன்றுவது ஆச்சரியத்துக்கு உரியவிடயமல்ல.

## பெரும்பான்மைக் கோட்பாடு

சில தமிழ் இன தேசியவாதிகள் சிறிலங்காவில் அதிகாரப் பரவலாக்கலுக்கு தகுந்த உதாரணம் இதுதான் என மிகவிருப் போடு எடுத்துக்காட்டும் சுவிற்சலாந்தில் உள்ள "பெரும்பான் மைக்கோட்பாடு" என்ற தத்துவத்தைக்கூட சிங்களவர்கள் நடைமுறைப்படுத்துவதில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். "பெரும்பான்மைக் கோட்பாடு" என்பது சிறுபான் மையினரின் தளநிலை ஒழுங்குமுறைகளுக்கு அமைய வாழ வேண்டுமென்பதாகும். உதாரணமாக சுவிற்சலாந்தில் ஒரு பிரஞ்சு மொழி பேசும் பிராஞ்சுக்காரர் ஒரு ஜேர்மனிய மொழி பேசும் ஜேர்மன் பெரும்பான்மை மாகாணத்துக்குள் குடியேறி னால் அவர் ஜேர்மன் மொழியில் பயிலவேண்டும்.

சிறிலங்காவில் ஒவ்வொரு பெரிய பட்டினத்திலும், நக ரத்திலும் தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் பாடசாலைகளும் ஏன் முஸ்லீம் பாடசாலைகளும் இருக்கின்றன.

தமிழர் தாயகம் தமிழர்களுக்கென வரையறுக்கப்பட்ட தாயகமாகவே தெரிந்து கொள்ளப்படுகிறது. தமிழர்கள் "சிங் களவர்களின் தாயகத்தில்" வாழ்வதற்குத் தயங்குவதில்லை; ஆனால் தமிழ்த்தேசியவாதிகள் இந்நிலையை தமது தாயகத்தில் அனுமதிப்பதில்லை. அதற்கு வரலாற்று ரீதியான முற்காரணங் கள் இருக்கக்கூடும். யாழ்ப்பாணக் குடாநாடு ஏறத்தாள முழு மையாக தமிழர்களின் குடியிருப்பாகும்.

ஒரு சிங்களவரையோ அல்லது ஒரு பௌத்த பிக்கு வையோ கண்டிராத தமிழர்கள் கூட இருக்கிறார்கள் என எனக்குச் சொல்லப்பட்டது.

இரண்டாவது 'தேசவழமை' அல்லது யாழ்ப்பாணத்தில் நடைமுறையிலிருக்கும் காணிச்சட்டங்கள், பிறர் அங்கு காணிகளை விலைக்கு வாங்குவதைத் தடைசெய்கிறது. இது மேலும் தனித்துவத்தைப் பாதுகாக்கிறது. பெரும்பான்மையான சிங்களவர்கள் இதை இன்றுவரை தெரிந்துவைத்திருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் சிங்களவரின் இருப்பு யாழ்ப்பாணத்தின் தூரத்துக்கு ஏற்ப குறைந்த விகிதாசார அளவில் வைக்கப்பட்டுள்ளது என எண்ணுகிறார்கள்.

அவ்விதமிருந்தும், சிங்களவரின் ஒரு சில தேசியவாதிகளின் கருத்துக்களைத் தவிர, பெரும்பான்மையோர் யாழ்ப்பாணத் தமிழரை தமது பாரம்பரிய சட்டங்களை மாற்றும்படி கேட்கவில்லை. இதற்குமாறாக தமீழ் ஈழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தான் (வெளித்தாக்கங்கள் அல்ல) தேசவழமை உட்பட யாழ்ப்பாண பாரம்பரியங்களுக்கு பெருந்தாக்கங்களை உண்டாக்கியுள்ளன.

1977க்குப் பின்னான காலத்தில் தமிழ்த் தேசியவாதிகள் கிழக்கு மாகாணத்துக்கும் தமது தனித்துவத் தாயகக் கொள்கையை விரிவுபடுத்தியிருந்தனர். அதன்படி, இப்பிரதேசத்தையும் யாழ்ப்பாணத்தைப் போன்றதாக ஆக்க விரும்பினார்கள். தமிழ் இனத்தேசியவாதிகள் இப்பிரதேசத்திலுள்ள தமிழர் அல்லாதோரை கிரமமான முறையில் வெளி அகற்றும் வேலையில் ஈடுபட்டார்கள். இவ்வளர்ச்சியைக் கண்ட சிங்களவர்கள் தனித்தமிழ்த்தாயகக் கொள்கையையும் அதனால் ஏற்படக்கூடிய பாரிய விளைவுகளையும் பற்றி தீவிரமாகக் கவனத்துக்கு எடுத்தார்கள்.

இந்தப் பயங்கரப் பின் விளைவுகள் ஒருபக்கமும் அத்துடன் யாழ்ப்பாணத்துக்கப்பால் தமிழர் தாயகத்தை விரிவுபடுத்திச் செய்வதற்கு வரலாற்று ரீதியான உரிமையில்லாமையுமே தனித்தமிழர் தாயகக் கொள்கைக்கு தீவிர கடும் எதிர்ப்புக்குக் காரணமாக இருந்தன.

தமிழர் தாயகத்துக்கும், சிங்களவர்களின் தாயகத்துக்கும் இடையில் உள்ள மற்றுமொரு வித்தியாசம் வளங்களின் உடைமையும் அவைகளைப் பெற்றுக்கொள்ள உள்ளவாய்ப்பும் அவற்றின் மீள்விநியோகம் போன்றவற்றால் ஏற்படுகிறது. தமது தாயகத்திலுள்ள வளங்கள்யாவும் தமது தனி உடைமை எனத் தமிழர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். இதே தர்க்கம் "சிங்கள

வர்களின் தாயகத்''துக்கும் ஏற்புடையதென்பதை அவர்கள் மறுக்கிறார்கள்.

இது, பல தள நிலைகள் அவற்றால் எதிர்காலத்தில் கிடைக்கும் தன்மைகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்து, தமிழ்தேசியவாதிகளால் திட்டமிட்டு முன்வைக்கும் விவாதமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக பெருந்தொகையாக தமிழர்கள் ''சிங்களவர்களின் தாயகத்''தில் வாழ்ந்துகொண்டு அவர்களின் வளங்களுக்கும் உடைமை உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இரண்டாவது 'சிங்களவர்களின் தாயகம்' சிங்களவர்களுக்கே தனி உடைமையானது என்று ஆக்கப்பட்டால் அங்குள்ள தமிழர்கள் நடுத்தெருவில் நிற்கவேண்டிவரும். மூன்றாவது அதிகாரப்பரவலாக்கத் திட்டத்தின் கீழ் தமிழர்களுக்கு 'சிங்களவர்களின் தாயகத்திலிருந்து ஒருவித நன்மையும் பெற முடியாது. ஆகவே தமிழர்களின் கோரிக்கை தங்களது தாயகத்தில் முற்று முழுதான உரிமையையும் அத்துடன் சேர்த்து 'சிங்களவர்களின் தாயகத்'தில் சில உடைமைகளையும் பெறுவதற்குமானதாக அமைகிறது.

சிங்களவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் பொதுவாக சிறிலங்காவிலும் குறிப்பாக 'தமிழர் தாயகத்'துக்கு வெளியிலும் உள்ள வளங்களை தங்களது எனக்கணிக்கவில்லை. நாட்டிலுள்ள நிலங்களையும் ஏனைய வளங்களையும் தமிழர்கள் உடைமையாக்குவதற்கு எதிராக அல்லது அதை வரையறுக்கவோ எதுவித கூட்டு முயற்சியிலும் சிங்களவர்கள் ஈடுபடவில்லை.

ஆனால் வேறுநாடுகளில் சிறுபான்மை மக்கள் அந்நாட்டு வளங்களை அடைவதற்கும் உடைமையாக்கும் சட்டங்கள் மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாக சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், குடிசனமதிப்பீடு மூலம் பெரும்பான்மையாக இருக்கும் கறுப்பர்கள் பல இன ஒடுக்குமுறைச் சட்டங்கள் மூலம் பொருளாதாரப் பின்னடைவுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் தென் ஆபிரிக்கா ஒரு விதி விலக்கு. அதிலும் பார்க்க ஓரளவு குறைவான கடுமைப் போக்குடைய நாடு மலேசியா. அங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். மலேசியா முஸ்லிம்கள் குடிசன மதிப்பீட்டுப்படி பெரும் சிறுபான்மையினராக சீனர்களின் 36 சதவீத சனத்தொகையிலும் பார்க்க 44 சதவீதத்தைக்கொண்ட

ஒரு பெரும்பான்மையினராய் மாத்திரம் இருந்துகொண்டு மண்ணின் மைந்தர்களென்று பூமி புத்திரகோட்பாட்டை அநுசரித்துக்கொண்டு எல்லா மட்டத்திலும் பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். அதனால் மலேசியா பொருளாதாரத்தில் சிறுபான்மையினராய் சீனர்கள் கொண்டிருந்த ஆதிக்க நிலையி கடந்த முப்பது ஆண்டுகளாகப் படிப்படியாக குறைந்து வந்துள்ளது.

இதற்கு மாறாக சிறிலங்காவிலே ஆண்டுக்கணக்கான சிறுபான்மையினர், நிலம் ஏனைய வளங்கள் போன்றவற்றின் மீது கொண்டுள்ள உடைமையின் அளவு அதிகரித்துவந்துள்ளது. உண்மையைக் கூறப்போனால் பொதுவாக நாட்டின் நலனுக்காக தமது நிலங்களை இழந்தவர்கள் யாராவது இருந்தால் அது சிங்களவர்கள்தான்.

முதலில் அவர்களுடைய நிலங்கள் பிரித்தானியர்களால் பெருந்தோட்டங்களுக்காக எடுக்கப்பட்டு இந்தியத்தமிழர் என்ற புதிய இனம் அந்நிலங்களில் இப்போது வாழ்கின்றது. அதன்பின் மகாவலி அபிவிருத்திக்காக தெல்தெனியா, கொத்தமல்லி ஆகிய இடங்களிலிருந்து பெருந்தொகையான சிங்களவர்கள் தமது பரம்பரைச் சொந்த நிலங்களை இழந்துள்ளனர்.

மேலும் ஐக்கிய அமெரிக்காவில் அக்கண்டத்தின் பூர்வீகக் குடிகளான சிவப்பு இந்தியர்கள் உற்பத்தி குன்றிய இதுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் வாழும்படி தள்ளப்பட்டமையோடு ஒப்புநோக்கினால் சிறிலங்காவில் சிறுபான்மையினர் வளமான நிலங்களில் வாழவிட்டமை தெளிவாகப் புலப்படுகிறது. வாழ்க்கை கடினமான வரண்ட வலயங்களுக்கு சிங்களவர்கள் குடியேறுவதை தமிழ் தேசியவாதிகள் நியாயமற்றது என்று கூறி குரல் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழரின் குடியேற்றம் வசதிகள் கூடிய பிரதேசங்களான ஈரவலயத்தை நோக்கியே நடைபெறுகின்றது.

சிறிலங்காவில் தமிழ்தேசியவாதிகள் சுட்டிக்காட்டுவதுபோல் யாழ்பாணம் இத்தீவிலுள்ள எல்லாப் பிரதேசங்களிலும் பார்க்க மிகுந்த வளம் குன்றிய பகுதி என்றாலும் அவர்கள் தங்கள் விருப்பத்தின்படியே அங்கு வாழ்ந்து வருவதும் அது தங்களது பாரம்பரியத் தாயகம் என்பதால் அரசியல் அதிகாரப்பரவலாக்கத்தை வழங்குமாறும் கோருகிறார்கள் இருந்தும் 40 சதவீதத்துக்கும் அதிகமான தமிழர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிட்டனர்.

## முகவுரை

தமிழர்களும் சிங்களவர்களும் தத்தமது தாயகங்களை நோக்கும் விதத்தில் அடிப்படையான வித்தியாசம் இருப்பதை இவைகளெல்லாம் எடுத்துக்காட்டுகின்றன. தாயகக்கோட்பாடு எவ்விதம் நோக்கப்படுகின்றது, எவ்விதம் விளக்கம் அளிக்கப்படுகிறது என்பவற்றில்தான் பிரச்சினை ஏற்படுகின்றது. தாயகக் கோட்பாட்டில் அல்ல. மேற்கூறிய விவாதங்கள் சிங்களவர்களின் தாயகக் கோட்பாடு புதிய சமயசார்பற்ற அரசு என்ற தத்துவத்துக்குக்கிட்ட அமைவதாய் தெரிகிறது. ஆனால் தமிழர்கள் தமது தாயகத்தை விளக்குவது தமக்குள் மாத்திரம் அமையுமொன்றாகவும் புதிய உலகிற்குப் பொருந்தாததாகவும் தெரிகின்றது.

கிடைக்க முடியாததொன்றென்றாலும், தமிழர் எப்பவாவது தனி அரசைப் பெறுவரேயானாலும் அல்லது அதிகாரப்பரவலாக்கத்தை ஏற்று வாழவிரும்பினார்களேயானாலும், இப்பொழுது அவர்கள் கொண்டிருக்கும் தமிழர் தாயகக்கோட்பாட்டின் தனித்தமிழ அடிப்படை நிலையை மீளாய்வு செய்தல். வேண்டும்.

சிங்களவர்கள் சிறிலங்காவை தமது என்பதுடன் இணைத்துக்காட்டுவது போல் தமிழர்கள் யாழ்பாணத்தையும் அதன் அண்மைப் பிரதேசங்களையும் "தமிழர் பண்பாட்டுத் தாயகம்" என்று தம்மை அத்துடன் இணைத்துக்காட்டுவதில் அடிப்படையில் ஒரு பிரச்சினையுமில்லை. ஆகவே தமிழரின் உரிமையான தாயகத்தை முற்றாக மறுப்பது சிங்களவரின் வேலை அல்ல. ஆனால் அவர்களது தாயகம் மற்றவர்களையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டுமென்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி நம்பவைத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு அப்பால் ஓர் அரசியல் ரீதியிலான மற்றவர்களை உள்ளடக்காத சிங்களவர்களின் தாயகத்தை சிங்களவர்கள் தீர்மானிக்க வேண்டிய நிலைக்குச் சம்பவங்கள் கட்டாயப்படுத்தினால் அது சிறிலங்கா தானாகவே உடைந்து

போவதற்கு வழிவகுக்கும். அல்லது சம்பவங்கள் அரசியல் ரீதியாக மற்றவர்களை உள்ளடக்காத ஆனால் முழுச் சிறிலங்காவையும் தன்னுள்கொண்ட "சிங்களவரின் தாயகக்" கொள்கையை சிங்களவர்கள் தீர்மானிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டால், இறுதியில் வெல்வது யாராயிருந்தாலும், புதிய பூசல்களுக்கும், இரத்தம் சிந்தல்களுக்கும் அது வழிவகுக்கும்.

என்னைப் பொறுத்தமட்டில் இவ்விவாதத்தை இவ்வித எச்சரிக்கையுடன் முடித்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே உற்சாகமூட்டும் வகையில் ஒன்றைக் கூறவிரும்புகின்றேன். சிறிலங்கர்களான நாங்கள் கடந்த பல காலமாக நம்பிக்கையீனங்கள், ஒற்றுமையின்மைகள், இரத்தச் சிந்தல்கள் ஆகியவற்றிற்கு உள்ளாகியிருக்கின்றோம். நாம் சரியான எண்ணங்களைக் கொண்டவர்களாக இருந்தால் இவைகளிலிருந்து ஆணித்தரமான நல்ல படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அடுத்த கட்டப் பிணக்குகளும், பூசல்களும் வரும்வரை காத்திராது வந்தபின் இப்போ செய்வதுபோல் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளை ஆராயாமல் சிங்களவர், தமிழர், இந்தியத்தமிழர், முஸ்லிம்கள் ஆகிய சகல இனத்தவரும் கவனமான முறையில் முன்னுக்கு அடி எடுத்து வைப்போமேயானால் எமது வருங்காலச் சந்ததியினருக்கு பிரச்சினையற்ற சிறிலங்காவை விட்டுச் செல்லலாம்.

குறிப்பு: எவ்வளவு மோசமான எண்ணங்களை சிங்களத் தலைவர்களும், அறிவுரைப்பினரும் கொண்டுள்ளனர் என்பதற்கு இக்கட்டுரை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு]

**இடம்பெயருர் தீவுகள்(1971 1985திட்ட மிட்ட ரீதியில் இடம்பெயர்ந்தோர்.)**

| | பாவா | பாலி |
|---|---|---|
| 1986 மக்கள்தொகை | 102,348000 | 5,817,000 |
| மக்கள் தொகை ச. கி. மீற்றர் | 774 | 226 |

குடியேறுக் தீவுகள்.

| சுமத்திரா | கலிமந்தன் | சுலாவதி | இரியன் ஜயா | மற்றவை |
|---|---|---|---|---|
| 1,523000 | 492,000 | 349.000 | 86000 | 47,000 |
| 33,997000 | 8,004,000 | 13457000 | 13.64 000 | 3613000 |
| 72 | 15 | 51 | 3 | 58 |

# போட்டிகள் எத்தனையடி

ஓ... ...
சமுதாயமே
நாங்கள் திருமணம்
எனும் போட்டியில்
வெற்றி பெற
எத்தனை தடவைகள்
தெரியுமா!

முதலில்-
பெண்பார்க்க வரும்
ம(ா)க்களுக்குப்
பிடிக்கவேண்டும்
இது எங்களது
கால் இறுதிப் போட்டி

அடுத்து-
ஆசைக்கு
அளவே யில்லாமல்
கேட்கும்
வரதட்சணை!
இது
அரை இறுதிப் போட்டி!

திருமணப் பந்தலில்
அமர்ந்த பிறகும் - அது
நடக்குமா
என எதிபார்ப்பது
முழு இறுதிப் போட்டி!

தாலி கட்டிய பிறகும் கூட
வெற்றி பெற்றோமா என்று
சரியாகத் தெரியவில்லை!
இது எங்களது
வாழ்க்கைப் போட்டி.

- சுந்தரமுருகன்

ராணி 23 - 02 - 92

# படிக்காமல் பட்டங்கள்

பாவையர்
எங்களுக்கு மட்டும்
படிக்காமலே
பட்டங்கள்!

காதலித்தவனை
கைப்பிடித்தால்
ஓடுகாலி!

கைப்பிடித்தவன்
கைவிட்டால்
வாழவெட்டி!

கட்டில் ஆடியும்
தொட்டில் ஆடாவிட்டால்
மலடி!

கட்டியவன்
மாண்டுபோனால்
விதவை!

காசுக்காக
இணைந்தால்-
விபச்சாரி!

காமப்பசிக்குப்
பலியானால்
களங்கப்பட்டவள்!

அது ஏனோ
பாவையர்
எங்களுக்கு மட்டும்
படிக்காமலே
பட்டங்கள்!

- கனகராஜன்

ராணி 09 - 02 - 92

## இந்தோனேசியா

# மக்கள் இடப்பெயர்ச்சியும் அதன் தாக்கமும்

- சன்ட்ரா பேட்ரன்

(Time 11-11-1991)

(கடந்த 20 ஆண்டுகளில் 65 இலட்சம் மக்களை மீளக் குடியேற்றிய உலகின் மிகப் பெரிய சமூக, பொருளாதார திட்டம் மாறுதலுக்குள்ளாகின்றது)

வாகனங்களுடன் சேர்ந்து இணைக்கப்பட்ட மரக்குற்றிகள், புதிதாகத் திருத்தப்பட்ட இடங்களில் எரிந்து கொண்டிருக்கின்ற கருகிய மரங்கள் குவிக்கப்பட்ட மரக்குற்றிகள் ஆகியவைதான் அந்தச் சிறிய வெள்ளை நிறவீட்டில் இருந்து வெளியே கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்க்கும் பொழுது புலப்படுகின்றன. 36 வயதான திருமதி சுகாமி யுவான்டி தனது சிந்தனையைப் பின் நோக்கிப் பார்க்கிறாள். தான் பிறந்து வளர்ந்த தாய்நாடான கிழக்கு ஜாவா(East Java) வில் இருந்த தீவில், இரண்டு மைல் தூரம் நடந்து மலைச்சரிவுக்குச் சென்று விறகு தேடவேண்டும். அந்த மலைச்சரிவில் இன்னும் சில மரங்களே காட்சியளிக்கின்றன. இங்கு விறகு எங்கும் தரையில் கிடக்கின்றன. அவளுடைய கணவர் வீட்டின் அருகாமையில் காய்ந்து போயிருக்கும் தோட்டத்தில் உள்ள சோளச் செடியை இழுத்து அதன் வேரை உற்றுநோக்கிப் பார்க்கிறார். நாம் இந்த விதையை நமது தாய்நாடான ஜாவாவிலிருந்து கொண்டுவந்தோம். அது செழுமையான பூமி அங்கே இந்தச்செடி எவ்வளவு பயனை அளித்திருக்கும்? ஆனால் அங்கேயுள்ள பிரச்சினை, எமக்குக் காணி இல்லையே என்பதாகும். இந்தோனேசியாவுக்குரிய போர்ணியோ (Borneo) தீவில் உள்ள களிமண்டான் (Kalimandan) மையப்பகுதியிலுள்ள தொழில்பேட்டைகள் நிரம்பிய மரத்தோட்டங்களில் யூவாண்டிஸ் (Juwandis) குடும்பத்தினருக்கு இரண்டு கெக்ரேர் நிலம் இனாமாகக் கொடுக்கப்படும். இந்நிலத்திலுள்ள மரங்களில் இறப்பர் பாலைச் சேகரித்தோ அல்லது ஒட்டுப்பலகைக்குத்தேவையான மரங்களை வெட்டியோ தங்கள் சீவியத்தை இவர்கள் போக்கலாம்.

கடந்த வசந்த காலத்தில் யூவாண்டிஸ் குடும்பத்தினரும் அவர்களுடைய இளைய மகனும், 1968 ஆம் ஆண்டிலிருந்து குடிபெயர்ந்த 13 லட்சம் குடும்பத்தினருடன், பொது உடைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்காத நாடுகளில் ஒன்றான இந்தோனேசியாவின் கொண்ட சமூக பொறியியலில் ஆய்வுத்திட்டமான குடியமர்த்தும் திட்டத்தில் பங்காளிகளாயினர். தங்களுக்குச் சொந்தம் என்று சொல்லக்கூடிய சிறு மூட்டைமுடிச்சுக்களைக் ட்டிக்கொண்டு, வெள்ளத்தினால் அமுக்கப்பட்ட தங்களின் வயல்களைப் பார்த்து விம்மிப் பொருமி, அவற்றிற்கு விடைகூறிக்கொண்டு தாய் நாடான ஜாவாவை விட்டு மலைப்பிரதேசமான கிழக்கு களிமண்டானுக்கு விமானமேறினர். முன்னைய காலத்தில் தேச துக்குத் தேசம் குடிபெயர்ந்து வாழ்ந்துவந்த நமது முன்னோரது செயலை இது ஒத்திருந்தது. இந்தோனேசியா ஒல்லாந்தரின் கீழ் இருந்த காலத்தில் கட்டாயப்படுத்திக் கூலிகளர்க இறப்பர் தோட்டங்களுக்கு ஏற்றிச் செல்வதைப் போலல்லாமல் யூவாண்டிஸ் குடும்பத்தினரின் பயணம் அவர்களுக்கு விரும்பி மேற்கொண்டதாகவிருந்தது அமெரிக்காவுக்கு சுயவிருப்பத்தின் பேரில் பணம் சம்பாதிப்பதற்காகக் குடிபெயர்ந்த வெள்ளைக்காரர்களைப் போல் அல்லாமல் யூவாண்டிஸ் குடும்பத்தினரை அரசாங்கம் நயமாகவும், வசமாகவும், ஆசைவார்த்தைகளை அள்ளிவீசியும், போக்குவரத்துச் செலவுகளை ஏற்றும் குடிபெயர அவர்களை ஊக்குவித்ததால். யூவாண்டிஸ் குடும்பத்தினரின் குடிபெயர்வு அவர்கள் தாமாகவே மனதார விரும்பி ஒப்புக்கொண்ட செயலாகவிருந்தது.

சனத்தொகை கட்டுங்கடங்காமல் போவதைத் தடுக்கும் நோக்குடனேயே ஜகார்த்தா அரசாங்கம் குடிபெயர்தல். குடியமர்தல் திட்டத்தை உருவாக்கியது. இந்தோனேசியாவிற்கு ஒல்லாந்தரிடமிருந்து 1949 இல் விடுதலை கிடைத்தபோது. திட்டமிடல் அதிகாரிகளின் பார்வையில் இந்தோனேசியாவின் எதிர்காலம் இருள்மயமாகத்தோன்றியது ஜாவாவின் சனத்தொகை, உலகத்தின் சனத்தொகையில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. அதுவுமின்றி பிறப்பு விகிதம் உச்சநிலையில் இருப்பதால் ஒவ்வொரு நூற்றாண்டிலும் சனத்தொகை மூன்றுமடங்காக அதிகரித்தது. 1900 இல் 30 மில்லியன் ஆக இருந்த சனத்தொகை இந்த நூற்றாண்டு முடியும்போது 100 மில்லியன்களை எட்டும்போல் தோன்றியது. இந்த நிலையைக் கட்டுப்படுத்தத் தவறுவோமேயானால் ஆயிரக்கணக்கான மக்களுக்குக் காணிகள் இல்லாது போய்விடும். பயிர்ச்செய்கைக்கும்

காணிகள் இல்லாது போய்விடுவதுடன் விறகும் கிடைக்காமல் போய்விடும் எனத் திட்டமிடல் அதிகாரிகள் எச்சரித்தார்கள். 1969 இல் இந்தோனேசியா ஜனாதிபதி சுகார்ட்டோ அவர்களினால் முடுக்கிவிடப்பட்ட திட்டத்தின்படி ஜாவாத்தீவிலிருந்தும் பாலித் (Bali) தீவிலிருந்தும் குடிபெயர்ந்து சனத்தொகை குறைவாகவுள்ள மற்றத் தீவுகளுக்குச் செல்லுமாறு மக்கள் கேட்கப்பட்டனர். இவர்களுக்கு நிலமும், தேவையான ஊக்குவிப்பும் கொடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

இருபது வருடங்களின் பின்னர் இத்திட்டத்தின் பெறுபேறுகளை உற்றுநோக்கும்பொழுது இத்திட்டத்தைத் தீட்டிய வல்லுனர்கள் திகைப்படைந்து போயினர். குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றியளித்தும், அத்துடன் 65 இலட்சம் மக்கள் குடிபெயர்ந்தும் கூட ஜாவாவின் சனத்தொகை 108 மில்லியனை எட்டியது. ஒரு சதுரகிலோ மீற்றருக்கு 825 மக்கள் அடர்த்தியாக வாழ்கிறார்கள் என்பதும் தெரியவந்துள்ளது. இப்படியிருந்தும் பஞ்சமோ, கிளர்ச்சியோ இங்கு ஏற்படாமல் பெரும் வளர்ச்சி காணப்படுகின்றது. வரவு செலவுத் திட்டத்தில் குறைப்பும் சமூக சுற்றாடல் சூழலின் மக்கள் பெருமளவில் இடம்பெயர்வதால் ஏற்படும் தாக்கம் பற்றி அனைத்துலக எதிர்ப்புகள் இருந்தும் கூட இந்தக் குடிபெயர்ப்பு தொடர்ந்து நடக்கின்றது. ஆயிரக்கணக்கில் மக்கள் சுயவிருப்பத்தின் பேரில் குடிபெயர்ந்து தூர இடங்களில் அரசினால் உண்டாக்கப்பட்ட புதுப்புதுக் குடியேற்றத்திட்டங்களுக்குச் செல்கின்றனர். காடுகளும், சேற்றுப் பிரதேசங்களும் பொருளாதார முன்னேற்றமுள்ள இடங்களாக மாறி வருவதால் இத்திட்டம் மீளவும் வளர்ச்சி அடைகின்றது. ஜாவாத் தீவிலுள்ள சனத்தொகையைக் கட்டுப்படுத்துவது தற்போதைய நோக்கமல்ல. அதனைச் சுற்றியமைந்துள்ள தீவுகளின் பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தேவையான மக்களை அனுப்புவதுதான் இன்றையதேவை என்கின்றார் சனத்தொகை சுற்றாடல் என்பனவற்றுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் எமில் சலீம் அவர்கள்.

ஜாவாவிலுள்ள விவசாயிகளை அடர்த்தியான சனத்தொகையற்ற தீவுகளுக்குக் குடிபெயரவைத்து வறுமையை ஒழிப்பதற்காகவே இத்திட்டம் ஆரம்பத்தில் செயல்படுத்தப்பட்டது. அரசின் ஊக்குவிப்பும் பணமும்தான் மக்களை அவர்களது பிறந்த இடங்களிலிருந்து குடிபெயரச் செய்தது. போக்குவரத்துச் செலவுகள் அபரிமிதமாக வளர்ந்துள்ளன. அத்துடன் 13,000 தீவுக

ளில் 200 க்கு மேற்பட்ட இனமக்கள் வாழ்கின்றார்கள். குடி பெயர்ந்து செல்வதானால் பழகாத பண்பாட்டுடன் வாழநேரிடும் என மக்கள் நினைத்தார்கள். அமெரிக்காவில் குடியேறுபவர்கள் சகாயவிலைக்கு நிலங்களை வாங்க முடியும். ஆனால் இங்கே நிலமெல்லாம் அரசுடைமை. அத்துடன் சுதேசிகள் அங்கு விவசாயம் செய்கின்றனர். இந்த இன்னல்களை நோக்கும் போது ஜாவாவில் வசதியாக வாழ முடியும் வரை அங்கேயே வாழ்ந்தார்கள். ஒரு விவசாயியின் காணி சராசரி அரை ஹெக்ரராகக் குறைந்தும், காணி இல்லாதோரின் தொகை 1980 ஆம் ஆண்டில் 23 வீதமாக இருந்தும் மக்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்க நீர்ப்பாசனம், உரவகைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியும், மலை உச்சியைப் பயன்படுத்தியும் வாழவிரும்பினார்களே அல்லாமல் குடிபெயர விரும்பவில்லை.




புதுக்குடியேற்றங்களிலுள்ள மக்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் வளம்பெற்றவையாக இருக்கவில்லை. ஜாவாவில் முன்னேற்றமாக விவசாய உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகளினால் கூட இங்கே உற்பத்தியைப் பெருக்கமுடியவில்லை. நாங்கள் பல தவறுகளை விட்டிருக்கின்றோம் என்கிறார். குடியேற்றத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்னாளில் அறிவுரை வழங்கியவ

ரும், இந்தோனேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனத்தின் தற்போதைய தலைவருமான திரு. எம். எஸ். சுல்கானேன் அவர்கள் எண்ணெய் வளத்தினால் பெறப்பட்ட அதிக வருவாயினால், 1970ஆம் ஆண்டில் குடியேற்றத்திற்கு ஏற்ற இடங்களின் வரைபடங்களை எடுப்பதறகு உயர் தொழில் நுட்பங்களை அரசு பயன்படுத்தியது. அமெரிக்கச் செய்மதியினால் எடுக்கப்பட்ட இந்தோனேசியாவுக்குச் சொந்தமான நியூ கினியின் அரைப்பகுதியான (*New Guinea*) இரியன் ஜயா (*Irian Jaya*) பிரதேசக் காடுகளின் படங்களை ஆராய்வதில் திரு. சுல்கானேன் ஈடுபட்டு இருந்தவர். அமெரிக்க செய்மதி மூலம் பெறப்பட்ட படங்களிலிருந்து 60-80 சென்ரிமீற்றர் விட்டமுள்ள மரங்கள் உள்ள பிரதேசங்கள் என்று கணிக்கப்பட்ட இடங்களுக்கு. அம்மரங்களை வெட்டுவதற்குப் பாரிய நிலச்சமன் பொறிகளை (*Bulldozers*) அரசாங்கம் பெருஞ்செலவில் கப்பல் மூலம் அனுப்பிவைத்தது. இந்தப் பாரிய நிலச்சமன் பொறிகள் வந்தடைந்த பின்னர் தான், இம்மரங்களின் விட்டம் கணித்ததிலும் அரைவாசியாக இருந்ததை ஒப்பந்தக்காரர்கள் கண்டுபிடித்தனர். இவ்வாகனங்களைத் திருப்பி அனுப்ப காலம் தாமதமாகிவிட்டது. இதனால் இவைகளையே மரங்களை வெட்டுவதற்கு பாவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இவ்வாகனங்கள் பாரியவை. இவற்றைப் பயன்படுத்திய போது, மேற்பரப்பிலுள்ள வளமிக்க மண்ணையும் இவை அகற்றி விட்டன இதனால் ஏமாற்றமடைந்த சுல்கானேன் இக்குடியேற்றத் திட்டத்தை வன்மையாகக் கண்டிப்பவர்களில் முக்கியமானவராகத் திகழ்ந்தார்.

மற்றவர்கள் குறைகூறுவதற்குச் செவிமடுக்காமல் ஜாவாவின் சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் குடியேற்றத்திட்ட அமைப்பாளர்கள் மேலும் மேலும் காடுகளை அழிப்பதற்கும், கட்டிடங்களைக் கட்டுவதற்கும், மக்களைக் குடிபெயரச் செய்வதற்கும் பாரிய திட்டங்களை உருவாக்கினார்கள். 1969ம் ஆண்டில்ஜனாதிபதி சுகார்ட்டோவின் காலத்தில்தொடங்கிய குடியேற்றத்திட்டத்தினால் வருஷத்திற்கு 10, 000கும் குறைவான குடும்பங்களே குடிபெயர்ந்தனர் ஆனால் 1985ம் ஆண்டில் இந்தக் குடியேற்றம் 1,50,000 ஆகப் பெருகியது. தவறான முகாமைத்துவம், ஊழல், விலைவாசி உயர்வு ஆகிய காரணங்களால் ஒரு குடும்பத்துக்குக் குடிபெயர்வதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை 500 டாலர்களிலிருந்து7000 டாலர்களாக உயர்ந்தது. ஒரு கட்டத்தில் இத்திட்டத்துக்கு வரவு செலவுத்திட்டத்தில் 10 வீதம் உபயோகிக்கப்பட்டது.

ஜாவாவுக்கு அண்மையில் அமைந்துள்ள சுமத்திராத்தீவில் இக்குடியேற்றம் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. சுமத்திராத்தீவின் தென்மாகாணமான லம்பூங் ( Lumpuug ) இன் பூர்வீகக் குடிகளான சுமத்திரன் அல்லாதாரின் எண்ணிக்கை 70 வீதமாக உயர்ந்தது. உஷ்ணவலயக் காடுகளின் அவல நிலை பற்றி அனைத்துலக சமூகம் கவலைபடையத் தொடங்கியது. புதுக் குடியேற்றங்களை உருவாக்குவதற்காக இந்தோனேசியாவில் வருடத்திற்கு 9000-12000ம் சதுர கிலோ மீற்றர் காடுகள் அழிக்கப் படுவதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் சுட்டிக்காட்டின.

இயற்கை வளங்களை மாற்றுவதற்கு எடுத்துக்காட்டுவதற்கு உதாரணமாக 1982ல் இந்தோனேசியப் படையினர் தென் சுமத்திராக் குடியேற்றத் திட்டத்திலிருந்து 120 காட்டு யானைகளை விரட்டினர் முன்னர் இந்தப் பிரதேசம் யானைகளின் பாதுகாப்பு வலயமாக விளங்கியது.

சுமத்திராத்தீவில் குடியேற்றத்திட்டங்களினால் ஏற்படும் பிரச்சினைகளைப் போக்குவதற்கு 1922 ல் இருந்து அத்தீவில் குடியேற்றத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில்லை என அரசாங்கம் முடிவெடுத்தது ஆனால் ஜாவாவில் எஞ்சியிருப் போரை சனத்தொகை குறைந்த ஈராயன் ஜயாவில் குடியேற்ற அரசாங்கம் முடிவுசெய்தது. சூழல், சுற்றாடல் பாதுகாப்பு இயக்கத்தினர் இத்திட்டத்தை எதிர்த்ததோடல்லாமல் சர்வதேச மனித உரிமைபேணும் குழுக்களும் இதனை எதிர்த்தன. ஈரியன் ஜயாவின் சனத்தொகையில் காற்பங்கினர் வெளியாராகும். இத்துடன் 1,38000 குடும்பங்களைக் குடியமர்த்துவதற்கு அமைச்சு எண்ணியது. ஈரியன் ஜயாவின் பழங்குடி மக்களின் கற்கால பண்பாட்டையும், ஜாவாவின் வளர்ச்சியடைந்த பண்பாட்டையும் ஒன்றிணைக்கும் பொழுது அங்கே இருந்து வந்த எதிர்ப்பு மேலும் வளர ஏதுவாகும். இந்தோனேசியாவில் உள்ள முற்போக்குவாதிகளும், வெளியார்களும் அரசாங்கம் சுற்றாடலிலுள்ள தீவுகளை ஜாவா மயப்படுத்த முனைகின்றதென்றும், ஆனபடியால் இந்தக் குடியேற்றத்திட்டங்களை உடனடியாகக் குறைக்கவேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கோரினர். அத்துடன் இந்தோனேசியாவுக்கு வழங்கும் உதவிகளையும் நிறுத்துமாறு உலக வங்கியையும் கோரினர். இதே நேரத்தில் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தில் குடியேற்றத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் பணத்தைக் குறைக்க எண்ணியுள்ளது.

உலகத்தின் மசகு நெய் உற்பத்தியில் 14-வது இடத்தை வகிக்கும் இந்தோனேசியா, நில நெய்யின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதனால் குடியேற்றத்திட்டங்களுக்கு ஒதுக்கும்தொகையை 1986 / 87 இல் அரைவாசியாகக் குறைத்தது. ஆனால். இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற குடியேற்றத்திட்டத்தால் மனிதவள ஆற்றல் ஜாவாவில் மிதமிஞ்சிப் போகாமல் 15% குறைக்கப்படுவதற்குத் துணைபுரிந்தது. நிலநெய் வளத்தினால் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றம் நீர்ப்பாசனம் வீதிகள், மின்சாரம் ஆகியவற்றுக்கு அதிகளவு பணத்தைச் செலவு செய்ய வழிவகுத்தது. இதுஜாவாத்தீவு கைத்தொழில் மயமாக்க வழி வகுத்தது. 1980ன் மத்தியில் அரசாங்கம் கட்டுப்பாடுகளை நீக்கியதை அடுத்து தனியார் மூதலீடுகள் அதிகரித்தன. இதனால் விவசாயம் அல்லாத தொழில்வாய்ப்புக்கள் ஆயிரக்கணக்கில் ஏற்பட்டன. இத்துடன் புதிய நல்லரகத் தானியங்களாலும். 1960ன் பிற்பகுதியில் இருந்து 1970ன் முற்பகுதிவரை நீர்ப்பாசன வசதிகளுக்கு இடப்பட்ட தாராளமான முதலீடுகளாலும் பசுமைப்புரட்சி' ஏற்பட்டது. இது விவசாய உற்பத்தி மேம்பட வழிவகுத்தது 1984 / 85இல் பயிர்களை அழிக்கும் ஊதாநிற வெட்டுக்கிளியை எதிர்க்கக்கூடிய புதிய உயர்ரக நெல் இனம் விவசாயத்துக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இந்த நெல்லைப் பயிரிடுவதனால் விவசாயிகளுக்கு இரண்டுமடங்கு உற்பத்தி கிடைக்கக்கூடியதாகவிருந்தது. இப்படியான பொருளாதார வளர்ச்சியினால் இந்தோனேசியாவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோரின் தொகை 1978க்கும் 1985க்கும் இடையில் 42% வீதத்திலிருந்து 30 மில்லியன்களாகக் குறைந்தது. இதில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஜாவாவில் வாழ்பவர்கள் ஆவர்.

சென்ற 25 வருடகாலத்தில் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றம் காரணமாக ஜாவா எவ்வளவு மக்களைச் சுமக்கும் என்ற கேள்விக்கே இனி இடமில்லை என்கிறார் குடியேற்றத் திட்ட அமைச்சின் பிரதம செயலாளர் திரு. இளாட் ஏ. மௌலானி அவர்கள். சுற்றாடல் சூழல் குறித்த பிரச்சினைகள் தவிர வேறு எந்தவித வரையறுக்கப்பட்ட பிரச்சினைகளும் எமக்கில்லை. முன்னைய காலத்தில் ஜாவாவில் கிராமங்கள் வறுமையை எடுத்துக்காட்டுவனவாக இருந்தன. ஆனால் தற்போது பசுமைப்புரட்சியினால் செழிப்பும் வளர்ச்சியும் எங்கும் காட்சியளிக்கின்றன என்கிறார் கட ஜா மாதா பல்கலைக்கழகத்தில் கிராமிய பிரதேச வளர்ச்சியின் மத்திய ஆராய்ச்சி நிலைய இயக்குனரான திரு

முப்பாற்றோ அவர்கள். வெளியே உழைப்பதைப்போல் இங்கேயும் உழைக்க வழிகள் இருக்கும்போது ஏன் குடிபெயரவேண்டுமென்று ஜாவாக் குடிமக்கள் கேட்கிறார்கள்.

இனிவருங்காலத்தில் இரண்டு கெக்ரர் வளமற்ற காணியிலும் பார்க்கக் கூடுதலான உதவிகள் கிடைத்தால் தான் மக்களைக் குடிபெயர ஊக்குவிக்கலாம் என்பது தெளிவாகியுள்ளது. இதையறிந்து குடியேற்றத்திட்ட அமைச்சை விமர்சிப்பவர்களின் கருத்தையேற்று இத்திட்டத்தை மீளப் பரிசீலனை செய்து ஒரு புதிய திட்டத்தை உருவாக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. புதிய விவசாயக்குடியேற்றத் திட்டத்தை உருவாக்காது, ஏற்கனவே இருக்கும் குடியேற்றத்திட்டத்திலுள்ள குடியேற்றவாதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி, அவர்களைத் தங்கள் நிலங்களில் மரங்களை நாட்டுவதற்கு ஊக்குவிக்கவேண்டும். எங்களுக்குள்ள தற்போதைய பிரச்சினை குடியேற்றமல்ல. மக்களின் பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குவதே எமது பிரச்சினை என்கிறார் மௌலானி. நீங்கள் அதிகாரிகளாக இயங்காமல் பொருளாதார முதலீட்டாளர்கள் போன்று இயங்கவேண்டும் என்று தனது அதிகாரிகளுக்கு மேலும் கூறியுள்ளார் திரு. மௌலானி அவர்கள். இதன் விளைவாகச் சிறு சிறு வர்த்தக முதலீடுகள் உண்டாகின. அதாவது பாம் ஜெய், இறப்பர், கோப்பித்தோட்டங்கள் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடங்கள், மீன் வளர்ப்பு, கடல் பாசி சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியன தோன்றின.

இப்படிப்பட்ட தொடர்புள்ள குடியேற்றத் திட்டங்கள் கட்டிடத் தொழிலாளியான 35 வயதுடைய பட்லன் போன்றோருக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. பட்லன் சென்ற வருடம் தான் தனது மனைவியுடனும், மூன்று பிள்ளைகளுடனும் ஜாவாவிலிருந்து குடிபெயர்ந்து சுமத்திராவிலுள்ள சுங்கைபாசர் என்னும் இடத்திலுள்ள அரசினால் நடாத்தப்படும் பாம் நெய் உற்பத்தித் தொழிற்சாலைக்கு வந்தான். இப்படிப்பட்ட பரீட்சார்த்தமான குடிபெயர்ந்தவர்களுக்கான திட்டங்களில் இதுவும் ஒன். இந்தத் தோட்டங்களின் மைய அமைப் ஒப்பந்த வேலையாட்களும், 3000 குடும்பங்கள் அடங்கிய குடியேற்றவாசிகளும் இருந்தனர் இரண்டு கெக்ரர் நிலப்பரப்புள்ள தங்கள் காணிகளில் உள்ள மரங்களில் பாம் நெய் உற்பத்திசெய்வதோடல்லாமல், உள்ளூர் வாசிகளும் ஜாவாவிலிருந்து குடிபெயர்ந்து வந்த குடியேற்ற வாசிகளும் கூலிக்கு வேலை செய்தனர். சொந்தமாகக்

காணி வைத்திருக்க வசதியற்று வறுமையில் இருந்த பட்லன் தனது சொந்த ஊரான ஜொக்ஜகர்த்தாவில் கட்டிடவேலை செய்து மாதமொன்றுக்கு 45 டாலருக்கு மேல் உழைக்க முடிய வில்லை. ஆனால் சுமத்திராவில் 145 டாலர்கள் உழைக்கின் றான். விவசாய உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் குடியேற்ற வாசி களிலும் பார்க்க மூன்றுமடங்கு ஊதியத்தைப் பெறுகின்றன். நான் கனவுகண்ட வாழ்க்கை இப்பொழுது இங்கே தான் மலர்ந் திருக்கிறது என்கிறான் பட்லன்

பொருளாதார வளர்ச்சியைப் பார்த்து மக்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகக் குடிபெயர்வதற்குக் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அதிகாரப் பூர்வமாக அனுப்பும் ஒவ்வொரு குடியேற்றவாசியுடன் அதிகாரப்பூர்வமற்ற 2.5 குடியேற்றவாசி தனது சொந்தச் செலவில் செலகின்றான் என உலக வங்கி கணித்துள்ளது. 1991/92இல் 70,000 குடும் பங்களைக் குடியமர்த்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அதி காரபூர்வமற்ற வழியில் சுற்றிவரவுள்ள தீவுகளுக்கு வேலை தேடி வந்த குடியேற்றவாசிகளைக் கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் உத்தேசித்துள்ளது. தொழில் எங்குள் ளதோ அங்கு மக்கள் பின்தொடருகின்றார்கள் என்கின்றார். இந்தோனேசிய பல்கலைக்கழகத்தின் பொருளாதார நிபுணர் இவான் ஜயா அஸீஸ் அவர்கள் அடுத்துவரும் பத்தாண்டுகளில் சுயவிருப்பின்பேரில் வரும் தொழிலாளிகள் தனியார் முதலீடு களில் வேலை தேடிவருபவர்களாகவே இருப்பர். அரச முதலீடு களில் அல்ல என்றும் அவர் மேலும் கூறுகின்றார். குடியேற் திட்டங்களை ஏற்படுத்தும் திட்டத்திலிருந்து அரசாங்கம் எவ் வளவு விரைவாக விலகிக் கொள்கின்றதோ அதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது.

# 1962ம் ஆண்டு நடாத்தப்பட்ட “ஒபறேசன் கோல்ட்வாச்டு” (Operation Holdfast) என்னும் சதி

-ஜமந்த சோமசுந்தரம் - (*Island* **26-1-92**)

1962 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ம் திகதி வெள்ளிக் கிழமை காலை தன்னைச் சந்திக்கும்படி உதவிக் காவல்துறை மா அதிபரான திரு. சி. சி. திசநாயக்கா, கொழும்புக் காவல்துறை அதிபரான திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா அவர்களைக் கேட்டுக் கொண்டார். தனக்கு எதிராக நடாத்தப்பட்ட வழக்கின் விசாரணையின் போது நாட்டில் உறுதிப்பாட்டை உருவாக்குவதற்கு ஏதுவாக முக்கியமான அரசியல் வாதிகள் பலரைக் கைது செய்யும்படி மேலிடத்திலிருந்து தனக்கு உத்தரவு கிடைத்திருந்ததாக திரு. ஜங்கின் திசநாயக்கா கூறியுள்ளார்.

இலங்கை கவசப்படையணியைச் சேர்ந்த மேஜர் வீரசேன ராசபக்சாவும், மேஜர் விக்டர் யோசப்பும், இலங்கைப் பீரங்கிப் படையைச் சேர்ந்த மில்ரன் வைற்றும் உதவிக் காவல்துறை அதிபர் கொலின் வன்றீசனும், தொண்டர் படைத் துணைத் தளபதி எப். சி. த. சேரத்தின் இல்லத்தில் தங்கள் அன்றைய இரவு உணவை வைத்துக்கொண்டனர். அதன்பின் இவர்கள் பம்பலப்பிட்டியிலுள்ள மெல்போர்ண் சாலையூடாகக் கடற்கரைக்குச் சென்றனர். திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டுமென அங்கு கூடியிருந்தவர்களுக்குத் திரு. டெறித் த சேரம் கூறினார்.

இதேவேளை கொழும்பிலுள்ள மூன்று தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த இலங்கைப் படைத்துறை இரகசிய செய்திப்பரிவர்த்தனை (தொண்டர்படை) அறிவிக்கும் குழுவின் தளபதி கேணல் பசில் யேசுதாசன் மருதானையிலுள்ள மத்திய தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திற்கும், கவ்லொக்ரவுணில் உள்ள தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திற்கும் சென்று பார்வை இட்டார்.

27 ம் திகதி காலை 9.15 மணிக்குக் காவல்துறைத் தலைமையகத்திற்கு உதவிக் காவல்துறை அதிபர் பெடே யோன்

பிள்ளை அவர்களை அழைத்த திரு. ஜங்கின் திசநாயக்கா, தான் அன்று அரசாங்கத்தைக் கைப்பற்ற இருப்பதாகவும், காவல்துறை வானொலி தொடர்பு வாகனங்களையும், ஆயுதம் தாங்கியவர்களைக் கொண்ட, உந்துருளிகளையும், காவல்துறைப் போக்குவரத்துப் பகுதி செயலகத்தில் அன்றிரவு 11.00 மணிக்கு ஆயத்தமாக வைத்திருக்கும்படி பணித்தார்.

முன்னாள் கடற்படைத்தளபதி றியர் அட்மிரல் றொயிஸ் த மெல், படைத்தளபதி கேணல் மொறிஸ் த மெல், மூன்றாவது பீரங்கிப்படைத் தளபதி கேணல் டபிள்யூ எஸ். ஆபிரகாம்ஸ், மேஜர் பசில் லோயலா, மின்னியல், இயந்திரவியல் பொறியியலாளர் பகுதியைச் சேர்ந்த தளபதி நோயல் மத்தியூஸ், மேஜர் ராசபக்ச, கப்டன் வைத், கப்டன் ஜே ஏ. ஆர். பீலிக்ஸ் ஆகியோர் அன்று மாலை பம்பலப்பிட்டியிலுள்ள எலிபாங் வீதியிலுள்ள திரு பசில் பேசுதாசனுடையவீட்டில் சந்தித்தநன்பின்னர், கின்றோஸ் சாலைக் கடற்கரைக்குச் சென்று, சதித்திட்டத்தைப் பற்றிய பேச்சுக்களின் போது சங்கேத மொழியாக ''யத்துற'' என்னும் வார்த்தையை உபயோகிக்கவேண்டும் எனவும். சதித்திட்டத்தின் பெயர் ''கோல்ட் வாச்டு'' என இருக்குமெனவும் தீர்மானித்தார்கள்.

28 ம் திகதி ஞாயிறு காலை 1-00 மணிக்கு சதி ஆரம்பிக்குமெனவும் இலங்கைத் தொலைபேசி பரிவர்த்தனைச் செயலகத்தை லெப்டினன்ட் கேணல் மத்தியூஸ் கண்காணிப்பாரெனவும், இராணி மாளிகையையும், கிரிலப்பனைப் பாலத்தையும் கவனிப்பதற்காகத் தலா நான்கு கவசவாகனங்களை மேஜர் ராசபக்ச அனுப்ப வேண்டுமெனவும் ஏரிக்கரைப் பத்திரிகைக்காரியாலயத்தை கப்டன் பீலிக்ஸ் கண்காணிப்பார் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், சதியில் சம்பந்தப்பட்ட மற்றவர்களுக்குத் தெரியாமல் அம்பலாங்கொடை சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் தனது மாமனாருமான திரு. பீ. த. எஸ் குலரத்தினாவுடன் திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா அன்று காலை தொடர்பு கொண்டதன் காரணமாக, திரு. பீ. த. எஸ் குலரத்தினா அன்று மாலை 3.00 மணிக்கு கொழும்பு வந்து சேர்ந்தார். திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா கூறிய யாவற்றையும் கேட்டறிந்துகொண்ட திரு குலரத்தினா அன்று மாலை 5.00 மணிக்கு ஒறியன் கிளப் (Orion Club) புக்குள் சென்று அன்றைய காவல்துறை மா அதிபரான திரு. மொறிஸ் அபயக்கோனிடம் இச் சதிபற்றித் தெரியப்படுத்

PUBLIC
...பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

திய பின், அன்றைய பாதுகாப்பு அமைச்சின் பாராளுமன்றச் செயலாளரான திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவுக்கும் இதைத் தெரியப்படுத்தச் சொன்னார். அன்று மாலை 7.15 மணிக்கு அலரிமாளிகைக்கு அழைக்கப்பட்ட காவல்துறை மா அதிபர் வழமைக்கு மாறானவர்களிடமிருந்து வரும் கட்டளைகளை ஏற்கக்கூடாதென எல்லா காவல்துறை நிலையங்களுக்கும் பணிப்புரை வழங்கினார். அலரி மாளிகையைப் பாதுகாக்க மூன்று கவசவாகனங்களை அனுப்பும்படி மேஜர் ராசபக்சாவுக்கு காவல் படையின் தளபதி கேணல் சேபால ஆட்டிகலை அன்று நடு இரவில் பணித்தபின், 2ம் திகதி அதிகாலை 1.0 மணிக்கு பிறென் துப்பாக்கிகள் ஏந்திய 300 துருப்புக்கள் திரு. ஜங்கின் திசநாயக்கா வசிக்கும் லோங்டன் சாலையிலுள்ள அவர் வீட்டைச் சுற்றிவளைக்க ஏற்பாடு செய்தார். இப்படியே ''கோல்ட் வாச்டு'' என்ற சதி நடவடிக்கை முறியடிக்கப்பட்டது

அரசிற்கு எதிராகப் போர் தொடுத்தார்கள் எனக் குற்றஞ் சுமத்தப்பட்ட 24 பேர்களுள் 10 பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள். இக்குற்றவாளிகளான நிர்வாக சேவையைச் சேர்ந்த டக்கிளஸ் லியனகே, மற்றும் கேணல் மொறிஸ் தமெல், கேணல் டெறிக் த சேரம், ஜங்கின் திசநாயக்கா, முன்னாள் துணைகாவல் துறை மா அதிபர் சிட்னி த சொயிசா றோயிஸ் தமெல், லெப்ரினன்ட் கேணல் நோயல் மத்தியூஸ், கேணல் பசில் யேசுதாசன், உதவிக் காவல்துறை அதிகாரிகளான ரோணி விஜயசிங்க, மற்றும் லயனல் ஜெரசிங்க காவல்துறை அதிபர் எல்ஸ்ரர் பெரேரா ஆகியோருக்கு பத்து வருடச் சிறைத்தண்டனையையும், அவர்கள் சொத்துக்கள் யாவற்றையும் பறிமுதல் செய்யும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

வெற்றிபெறாத ஒரு வெறும் இராணுவ சதி நடவடிக்கையாக 'கோல்ட் வாச்டு' சதி நடவடிக்கையைக் கருதமுடியாது இலங்கையின் அண்மைக்காலச் சரித்திரத்தில் அது பெரும் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருந்த வேளையில் நடாத்தப்பட்ட அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகவே இதைக் கொள்ள வேண்டும்.

## சமயசார்பற்ற அரசமுறை

தன்னாட்சி அதிகாரங்கொண்ட ஒரு அரசை உருவாக்க வேண்டுமென்று விருப்புக்கொண்ட திரு. டி. எஸ். சேனநாயக்கா, இலங்கையிலுள்ள எல்லாச் சமூகங்களையும் பிரதிபலிக்கத்தக்க

தான அரசியல் முறை ஒன்றை உருவாக்க விரும்பினார். லங்கா சமசமாசக்கட்சி போன்ற எதிர்க்கட்சிகள் தீவிர மதச்சார்பற்ற, பக்கச்சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடித்தமையாலேயே ஐக்கிய தேசியக்கட்சி தன்னை ஒரு தேசிய மதச்சார்பற்ற, அமைப்பாக அதன் முதல் பத்து ஆண்டுகால வரலாற்றில் காட்டிக்கொள்ள முடிந்தது. இலங்கையிலுள்ள இந்தியப் பூர்வீக மக்களாகிய தோட்டத் தொழிலாளர்களுடைய வாக்குரிமையை இல்லாது செய்ததுபோன்ற சிறுபான்மையினருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டபோதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி அதை ஒரு இனத்தின் பிரச்சினையாகக் காட்டிக்கொள்ளாது ஒரு வர்க்கத்தின் பிரச்சினையாகவே காட்டிக்கொண்டது.

நிருவாகத்தில் மேல்மட்டத்தினருக்கும் மத்தியதரத்தினருக்குமிடையே தொடர்ச்சியான ஒற்றுமை 1956 வரை நீடித்துக்கொண்டிருந்தது. அதே நேரத்தில் மேல்நாட்டுப் பண்பாட்டைபின்பற்றிய ஆங்கிலம் கற்ற நகரப்புற மக்களுக்கும், கிராமப்புறங்களில் வசித்த சிங்களம் அல்லது தமிழ் மாத்திரம் கற்ற மக்களுக்குமிடையே விரிசல் ஏற்பட்டுக்கொண்டு வந்தது. பாடசாலைகளில் ஒன்றாக கல்விகற்றதன் காரணமாக இனத்துவேசமற்ற மதச்சார்பற்ற சூழ்நிலை காரணமாகவும் 50ம் ஆண்டுக்குபிற்பகுதியில் தோன்றிய இனவாத உணர்வுகள் அப்போது தோன்றவில்லை.

சமய சார்பற்ற எல்லோருக்கும் இலங்கையரென்ற தேசிய வாதம் வளர்ந்துகொண்டிருந்த அதேவேளையில் மதக்கோட்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் ஒரு அரசியலும் உருவாகிக்கொண்டு வந்தது. இந்தச் சமயவாதிகளுக்கு 1873ம் ஆண்டு வண. மிக்கெற்றுவத்த குணானந்த அவர்களால் பாணந்துறையில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் உந்துகோளாக அமைந்தது. அத்துடன் 1880ம் ஆண்டில் கேணல் ஹென்றி ஒல்கொட் அவர்களின் வருகையும், திரு. தர்மபாலா அவர்களின் மதுவுக்கு எதிரான பிரச்சாரங்களும் உத்வேகம் கொடுத்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தால் உத்வேகம் அடைந்திருந்தவர்களும், 1940 களில் சாந்திநிகேதனில் கல்விகற்றவர்களுமான வணக்கத்துக்குரிய வல்பொல ராகுல மற்றும் உடகென்தவல சரணங்கார போன்றோர் 1947ம் ஆண்டு இலங்கையில் நடாத்தப்பட்ட முதலாவது பொதுத்தேர்தல் காலத்தில் வித்தியாலங்காரப் பிரிவேனாவுக்கு வந்து சேர்ந்தனர்.

1950ம் ஆண்டு டிசம்பர் மாத ஆரம்பக் காலத்தில் தன்னைச் சந்தித்த புத்தபிக்குகளின் தூதுக்குழுக்களிடம் அரசாங்கம் சமய

சம்பந்தமான விடயங்களில் தலையிடாதென திரு. டீ. எஸ். சேனனாயக்கா கூறியுள்ளார். பௌத்த சாசன ஆணைக்குழு வொன்றை அமைக்கும்படியும், புத்த சமயத்துக்கு அரசாங்கம் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸில் இது நடந்த அடுத்தவருடமே அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுத்தது. இந்த இரு கோரிக்கையும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த மூத்த நிருவாகசேவை அதிகாரியான திரு. என். கியூ. டயஸ் அவர்களும், வண. கென்பிற்றிகெதற ஞான சீக அவர்களும் கிராமங்கள் தோறும் பௌத்த சாசன சபைகளை உருவாக்கிபொதுமக்களின் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய விடயங்களான புத்த சமயத்தவர்களால் நடாத்தப்படும் பாடசாலைகளின் நிலை போன்ற விடயங்களை இவை மூலம் எழுப்பிவந்தனர். அத்துடன் மருத்துவமனைகளில் கடமையாற்றி வந்த கத்தோலிக்கக் கன்னியாஸ்திரிகளுக்கு எதிராகவும், அரச மொழி சம்பந்தமாகவும் அரசாங்கத்துக்கெதிராகப் பிரச்சாரங்களை மேற்கொண்டுவந்தனர். அத்துடன் திரு. எல். எச். மேத்தானந்தா அவர்களால் உருவாக்கப்பட்ட தேர்தல் தொகுதி வாரியான அமைப்புக்களான சங்க சபைகளின் ஒத்துழைப்புடன் 1956 ம் ஆண்டு எக்சத்பிக்கு பெரமுன என்ற முன்னணியை அவர்கள் உருவாக்கினார்கள்.

புத்தசமய முற்போக்காளர்களின் அரசியல் வேட்கைகளை நிறைவேற்றத் திரு. எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்கா எண்ணியிருந்தாராயினும் 1956 ம் ஆண்டில் எக்சத் பிக்கு பெரமுனவின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள அவர் சம்மதித்தார். மகாஜன எக்சத் பெரமுன அரசாங்கம் பதவியிலிருந்த வேளையில் எல்லோருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற பண்டாரநாயக்காவின் நோக்கம் அக்கட்சிக்குள் இருந்த மத சார்புடைய வலதுசாரி அணி ஒன்றினால் முறியடிக்கப்பட்டது. இந்த நெருக்கடி வேளையில் திரு. பண்டாரநாயக்கா கொலைசெய்யப்பட்டார்.

## நெருக்கடி மிக்க அரசியல்

1956 ம் ஆண்டுக்குப்பின் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு அரசியல் நடவடிக்கைகளும் நாட்டின் உறுதிப்பாட்டைச் சீர்குலைப்பனவாக இருப்பதாக முற்போக்கு அரசியலாளர்கள் கருதினர். 1960 ம் ஆண்டு திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவி ஏற்றதன் பின்பே இந்த நிலை தீவிரமடைந்ததாகவும் அவர்கள் கருதினர். சமூகங்களுக்கிடையே அரச கரும

மொழிக்கொள்கையின் காரணமாக உருவாக்கப்பட்ட வேறுபாடுகளும், 1956 ம், 1958 ம் ஆண்டுகளில் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களும், 1961 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரை உபயோகப்படுத்தியதும், புத்தபிக்குகளின் தீவிரவாத அரசியல் பங்களிப்பும், சமய சார்புடைய பாடசாலைகளை அரசு எடுத்ததும், தங்கள் தீய நோக்கங்களை நிறைவேற்றப் பொதுமக்களுக்கு கட்டுப்பாடு சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைச் சீர்குலைக்க இடம் கொடுத்ததும் தொழிற்சங்கங்களுக்கிடையே ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அவைகளால் நடாத்தப்பட்ட வேலை நிறுத்தங்களும், தொழிற்சங்கங்களின் நடவடிக்கை மூலம் மார்க்சிச வாதிகள் அரசாங்கத்தைக் கைப்பற்றி விடுவார்களென எழுந்த அச்சமும், இடது சாரிக்கட்சிகளுடன் அன்றைய அரசாங்கம் கூட்டுச் சேர்ந்ததும், தேசியமயமாக்கக் காரணமாகத் தனியார் துறைக்கு எழுந்த பாதுகாப்பின்மையும், நெருக்கடி காலச் சட்டத்தை கால வரையின்றி நீடித்ததன் காரணமாக ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலும் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள இராணுவத்தைப் பயன்படுத்தியதும், பத்திரிகைகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றதும், திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவர்களின் எதேச்சாதிகாரப் போக்கும் ஆகிய இவைகளே அரசாங்கத்தைக்கைப்பற்ற சதிப்புரட்சியில் ஈடுபட்டவர்களுக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

அரசாங்கம் கடைப்பிடித்து வந்த தவறான கொள்கைகளால் ஏற்படவிருக்கும் பயங்கரமான விளைவுகளை இராணுவத்தினரும், காவல்துறை பிரிவினரும் நன்கறிந்திருந்தனர். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள தமிழர்களைச் சிங்களக் குண்டர்களிடமிருந்து பாதுகாக்க மகாதேசாதிபதி அவர்கள் இராணுவத்தை 19௦8 ம் ஆண்டு அழைக்க வேண்டியிருந்தது. திரு. தார்சி வித்தாச்சி தான் எழுதிய 'எமர்சென்சி 58' என்ற நூலில் (நெருக்கடி காலச்சட்டம் 58) மேஜர் டெறிக் தசேரம் இரத்மலானையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தொழிலாளர்களை எப்படிச் சமாளிக்க வேண்டியிருந்தது என்றும், நீர்ப்பாசன இலாகாத் தொழிலாளர்களையும், பதவிய குடியேற்ற வாசிகளையும் மேஜர் எம். ஓ. குணரத்தினா எப்படி அடித்து விரட்டினார். என்றும் எழுதியிருந்தார். இச் சதிப்புரட்சியில் ஈடுபட்டவர்களில் ஒருவர் பதினைந்து நிமிடங்கள் பிந்திவந்தமையால், பாணந்துறையில் உயிருடன் எரிக்கப்பட்ட இரண்டு இந்துமதக்குருக்கள்களை அவரால் காப்பாற்ற

முடியவில்லை. இப்படியான சம்பவங்கள் தொடருவதை விரை விலே நிறுத்தவேண்டுமென இச்சம்பவம் அவருக்கு உணர்த்தியது.

இப்படியான குழப்பக்காரக் கும்பல்களை வழிநடத்திய புத்த பிக்குகள் விடயத்தில் கவனமாக இருக்கவேண்டுமென இவர் களுக்கு 195 ம் ஆண்டு அறிவுறுத்தப்பட்டதாக இந்தச்சதியில் சம்பந்தப்பட்ட இன்னொருவர் கூறினார். அரசாங்கம் மதச்சார் பற்ற ஒன்றாக இருக்கவேண்டும் என்பதையே அவர் கொள்கை யாகக் கொண்டிருந்தார்.

மதத் தலைவர்களால் வழிநடத்தப்படும் அரசாங்கம் ஒன் றின் பகுதியாக தாங்கள் மாறிவருவதாகக் காவல்படை மற்றும் இராணுவத்திலுள்ள அதிகாரிகள் அஞ்சினர். துணைக் காவல் துறை மா அதிபரான திரு. ஜங்கின் திசநாயக்காவை பார்த்த பண்டா "ஜங்கின் ஜல்கின் நீ மட்டும் புத்தசமயத்தைச் சார்ந்த ஒருவராக இருந்திருந்தால் உன்னை காவல்துறை மா அதிபராக ஆக்கியிருக்கலாம் எனக் கூறினார்" கொயகம புத்த சமயத்தவர் ஒருவர் காவல்துறை மா அதிபராக இருப்பதையே மக்கள் விரும் புகிறார்கள் எனவும் திரு. பண்டாரநாயக்கா அவருக்குக் கூறி யிருந்தார்.

சகிக்க முடியாத ஒரு காலகட்டத்துக்கு தாங்கள் வந்துள் ளதை அதிகாரிகள் 1961 ல் உணர்ந்தனர் மதசார்பான பாட சாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதை றோமன் கத்தோ லிக்கத் தேவாலயங்கள் எதிர்த்தபோது அதையடக்க முதன் முதலாக இராணுவம் பயன்படுத்தப்பட்டது. சிங்களமொழியை, அரச கரும மொழியாக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை யில் தமிழரசுக்கட்சியால் வடக்கில் நடாத்தப்பட்ட சத்தியாக் கிரகத்தின் போது இதன் பின் இரர்ணுவம் பயன்படுத்தப்பட் டது.

வடக்குக்கு இந்தச் சத்தியாக்கிரகத்தின் போது கடமைக்கு அனுப்பப்பட்டவரும் இந்தச்சதியில் சம்பந்தப்பட்டவருமான ஒரு அதிகாரி சத்தியாக்கிரகம் அமைதியாக நடந்துகொண்டிருந்த தைக் கண்டதும், அரசாங்கம் வன்முறையைக் கையாள்வதைத் தவிர்க்க வேண்டுமென்று ஆலோசனை கூறினார். ஆனால் மந்திரிசபைக் கூட்டமொன்றில் இவர் கலந்து கொண்டபோது, தமிழ் மக்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என அதில் பங்குபற்றியவர்கள் வலியுறுத்தியதைக் கண்டார். அவர்கள் வலி யுறுத்தியதற்கு அமைய 3 வது பீரங்கிப்படை அணியை யாழ்ப்

பாணத்துக்கு அனுப்ப அரசாங்கம் பணித்தது. இந்தப்படை அணியின் தளபதி கேணல் ஆபிரகாமும், அவரது உதவியாளர் மேஜர் லோயலாவும் இந்தப்படையணியுடன் கோட்டைப் புகையிரத நிலையத்தில் இருந்து பயணத்தை மேற்கொள்ளவிருந்த வேளையில் தமிழர்கள் என்ற காரணத்தால் இவர்கள் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. இவர்களுக்குப் பதிலாக காலாட்படை அணியின் தளபதியும், தீவிர சிங்கள பௌத்தருமான கேணல் றிச்சாட் உடுகம அனுப்பப்பட்டார்.

இராணுவத்தினரிடையே பௌத்த சித்தாந்தத்தை உருவாக்குபவர் எனக்கருதப்பட்ட கேணல் உடுகம ஒரு பௌத்த சங்கத்தை இராணுவத்தில் உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தார். இவருடைய சங்கத்தில் சேர விரும்பாத அதிகாரிகள் இவரை வெறுத்தனர். இவருடைய இனத்துவேசப் போக்கைக் கண்ட அவர்கள் இவரை இழிசொற்களால் பேசி வந்தனர். அதே நேரத்தில் இராணுவத் தளபதி பதவிக்கு இவர் உருவாக்கப்பட்டு வந்ததால் அவர்கள் அச்சமுமுற்றிருந்தனர். யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளைச் சரிவரச் செய்து முடிக்கவும், நடவடிக்கை எடுக்கப் பின்நிற்கும் அதிகாரிகளை கண்டிக்கவும் பாதுகாப்பு அமைச்சின் அன்றைய நிரந்தரச் செயலாளர் என். கியூ. டயஸ் இவர்களுடன் சென்றது மட்டுமல்ல பல வேளைகளில் இவரே கட்டளைகளைப் பிறப்பித்தார்.

சிங்கள பௌத்த எழுச்சிக்குத் தலைமை தாங்குபவர்களில் ஒருவராக திரு. பீலிக்சுடயசு இருந்தார். திரு. பீலிக்சுடயசு அவர்களுடைய சர்வாதிகாரப் போக்கின் காரணமாகவே தாங்கள் அரசாங்கத்தைக் கைப்பற்ற இருந்ததாக இவர்கள் நீதி விசாரணையின் போது கூறியுள்ளார்கள். படையணிகளைத் தான் நினைத்தது போல் நகர்த்துமளவுக்கு அவர் இராணுவ விடயங்களில் தலையிட்டிருந்தார்.

திரு. பீலிக்சுடயசு பண்டாரநாயக்கா மீது இராணுவ அதிகாரிகள் கடும் வெறுப்புற்றிருந்ததாக இந்தச் சதியைப் பற்றிய தனது ஆய்வில் திரு. டோனால்ட் கொறோவிற்ஸ் எழுதியுள்ளார். இவரைப் போல் ஒருவரைத்தாங்கள் முன்னெப்பொழுதும் சந்தித்திருக்கவில்லையென்றும், கொடூரமானவன், இழிவானவன், வீண்பெருமை கொண்டவன், வஞ்சம் தீர்ப்பவன், தற்புகழ்ச்சிக்காரன், இரக்கமற்றவன், நேர்மையற்றவன், பைத்தியக்காரன் என இவருடைய குணாதிசயத்தைப் பற்றி அதிகாரிகள் வர்ணித்துள்ளதாகவும் அவர் தனது புத்தகத்தில் எழுதியுள்ளார்.

## சதித்திட்டம்

கள்ளக்குடியேற்றத்திற்கெதிராகவும் தமிழ் மக்களால் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகத்துக்கு எதிராகவும் நடவடிக்கையை மேற்கொள்ள இராணுவத்தினரை அனுப்பிய பகுதியிலேயே சதிப் புரட்சிக்கான எண்ணம் உருவாகியது. மன்னாரில் அரச அதிகாரப் பதவி வகித்த காலத்தில் திரு டக்ளஸ் லியனகே அவர்கள் மட்டக் களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் பீரங்கிப் படையணியைச் சேர்ந்த அதிகாரிகளுடனும், கவசப்படையணியைச் சேர்ந்த அதிகாரிகளுடனும், தொடர்பு கொண்டிருந்தும் 1962ம் ஆண்டு டிசெம்பர் மாதம் காவல்துறை பயிற்சிக்கலாசாலையைச் சேர்ந்த உதவி காவல்துறை அதிபர் திரு. வீ. கே. ஆறுமுகம் போன்ற அதிகாரிகளுக்கு நாடு எதிர்கொள்ளவிருக்கும் அபாயம்பற்றி அவர் கூறிவந்துள்ளார்.

இராணுவத்தில் இச்சதித்திட்டம் பீரங்கிப்படைப் பிரிவில் உருவாகி பணிப்புரை ஒழுங்கு கீழ்க்காணும் வகையில் சென்றது.

கேணல் த சேரம் அவர்கள் கேணல் த மெல் அவர்களுக்கு வழங்கும் பணிப்புரை கேணல் ஆபிரகாம்ஸ் அவர்களுக்கு கேணல் த மெல் அவர்களால் வழங்கப்பட்டு அதன்பின் மற்றைய இராணுவ அதிகாரிகளுக்கு கேணல் ஆபிரகாம்ஸ் அவர்களால் வழங்கப்பட்டது. கொழும்பு மாநகர காவல்துறைப் படைப்பிரிவு திரு ஜங்கின் திசநாயக்கா தலைமையிலும், மாகாணங்களிலுள்ள காவல்துறை அதிகாரிகளுக்குத் திரு சிட்னி சொயிசாவின் தலைமையிலும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

மேல் மட்டத்திலுள்ள சிங்களக் குடும்பத்தைச் சேர்ந்தவரும், ஆக்ஸ்பர்ட் பல்கலைக் கழக துடுப்பெடுத்தாட்ட விளையாட்டு வீரரும், வழக்கறிஞரும், புத்தசமயத்தவருமான திரு டெரிக் த சேரம் அவர்கள் இனபேதம் அற்றவராக இருந்ததுடன் இராணுவத்தில் உயர்வாக மதிக்கப்பட்ட ஒருவராயும் இருந்ததுடன் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்தார். கைதிகளை சிறை வைக்கவிருக்கும் காலிமுகத்திடலுக்கு இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் டீ எபரி அபேசிங்க போன்ற முக்கிய அதிகாரிகளை இவர் 1961 ம் ஆண்டு ஜனவரிமாதம் அழைத்து வந்தார். அச்சதிசம்பந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளின் பொறுப்புகள் பம்பலப்பிட்டியில் நடாத்தப்பட்ட கூட்டங்களில் ஒவ்வொரு அதிகாரிகளுக்கும் ஒப்படைக்கப்பட்டன.

திரு ஜங்கின் திசநாயக்கா காவல்துறை சேவையில் ஒரு மூத்த அதிகாரியாக இருந்தது மாத்திரமன்றி, அந்தச் சேவைக்கு

உள்ளேயும் வெளியேயும் பெரிதும் மதிக்கப்பட்டிருந்தார். கொழும்பிலுள்ள பல முக்கிய காவல்துறை அதிகாரிகள் இவர் மூலம் இந்தச்சதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். உதவிக் காவல்துறை அதிபர் கொலின் வன்றிசன் அவர்களுடன் குற்றப்பிரிவு காவல் துறை அதிகாரி டபிள்யூ. எல். ஜெபநேசன், எம். பி. டெடிகம, காவல்துறை அதிபர் சி. பி ஆன்ட், உதவிக் காவல்துறை அதிபர் செறி விஜேசிங்க, உதவிக் காவல்துறை அதிபர் ஜம்போ ஜய திலக, உதவி காவல்துறை அதிபர் பி. ஆர். செனவிரத்தின ஆகியோர் 1-61 ம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ம் திகதி அரசியல் வாதிகளைத் தடுத்து வைத்திருப்பது பற்றியும், காவல்துறை வானொலிக் கட்டுப்பாட்டு நிலையம், மற்றும் புதிய தலைமைச் செயலகம், நாரண்பிட்டியிலுள்ள வானொலி ஆய்வுகூடம் ஆகியனவற்றைப் பாதுகாப்பது பற்றியும், அறிவுறுத்தப்பட்டனர்.

முன்னாள் உதவிக் காவல்துறை மா அதிபரான திரு சிட்னி த சொயிசா ஒரு சிலரைத் தவிர மற்ற முக்கியமான காவல்துறை உத்தியோகத்தர்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். 25ம் திகதி இவர் மாகாணங்களிலுள்ள காவல்துறை நிலையங்களுக்குச் சென்று, மாத்தறை காவல்துறை அதிபர் டேவிட் தம்பையா, காவல்துறை அதிபர் புனோசியர், உதவிக் காவல்துறை அதிபர் ஓற் கழுத்துறைக் காவல்துறை பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த உதவிக் காவல்துறை அதிபா திரு. வீ கே. ஆறுமுகம் ஆகியோரைச் சந்தித்தார்.

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், பாராளுமன்றக்காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் நாட்டில் சர்வாதிகார ஆட்சியை உருவாக்குவதற்கு வழி வகுக்கிறார்கள் எனக்கருதியமையாலேயே இவர்களுக்கு எதிராகச் சதிப்புரட்சியை நடாத்த திட்டமிடப்பட்டது. திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க வெளிப்படையாகவே சிறு அளவு ஆதல் சர்வாதிகாரம் இருக்கவேண்டுமெனக் கூறியுள்ளார். நாட்டில் அன்று நிலவிய நெருக்கடிகளின் காரணமாக இடதுசாரியினர் சர்வாதிகார ஆட்சியொன்றை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இருந்தமையால் இடதுசாரிகளை மையமாக வைத்தும் சதிப்புரட்சியாளர்கள் புரட்சியை நடாத்தத் திட்டமிட்டனர். இதன் காரணமாகவே திருவாளர்கள் என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, பீற்றர் கெனமன், எம். ஜீ. மெண்டிஸ், எஸ். பி. அமரசிங்கம் போன்ற இடதுசாரிகளையும் கைதுசெய்யக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்கள் பிரிவுக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்தபோது அவர்கள் குற்றவாளிகள் அல்லர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டதுடன் இந்த வழக்கும் முடிவுற்றது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் என்ன சூழ்நிலையில் இந்தச் சதிப்புரட்சியை நடாத்தத் திட்டமிடப்பட்டதோ அதே நெருக்கடியான சூழ்நிலை தற்பொழுதும் நிலவுவதுடன், அடுத்த சந்ததியினரும் இதனால் பாதிக்கப்படவிருக்கின்றனர்.

இந்த நாட்டில் பல சமூகங்களைக் கொண்ட மதச்சார்பற்ற அரசாங்கமா? அல்லது இனரீதியான மதச்சார்புள்ள அரசாங்கமா? அமையவேண்டுமென்பதே முக்கியமானதாகவிருக்கின்றது. இராணுவத்தின் இயல்பும், அமைப்பும், அரசாங்க விவகாரங்களில் அவர்கள் வகிக்கும் பங்கும், அரசாங்கத்துக்கு எதிராகவுள்ள சட்டரீதியான தீவிரவாத அணியினரை இவர்கள் கையாளும் முறையும் இரண்டாவது பிரிவினையாகவிருக்கின்றது.

''ஒபரேசன் கோல்டுவாச்டு'' என்ற சதிப்புரட்சியில் ஈடுபட்டதன் மூலம் தங்களுடைய உயிர்களுக்கும், பதவிகளுக்கும் ஆபத்தைத் தேடிக்கொண்டவர்களின் தற்கொடை உணர்வை எவரும் எக்காலத்திலும் கணக்கில் எடுக்கவில்லை. இருப்பினும் அவர்கள் எழுபதுகளிலும், எண்பதுகளிலும் புதுப்பொலிவுபெற்று உன்னத நிலைக்கு உயர்ந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| C. C. Dissanayake | — | Deputy Inspector General of Police |
| Stanley Senanayake | — | Superintendent of police Colombo |
| Major Weerasena Rajapakse | — | Ceylon Armoured Corp |
| Major Victor Joseph | — | CAC |
| Major Wilton White | — | Ceylon Artillery |
| Colin Vandendriesan | — | Assistant Superintendent of Police |
| Colonel F. C. de Saram | — | Deputy Commandant Ceylon Volunteer Force. |
| Colonel Basil Jesudason | — | Commander Ceylon Signa Corp (Volunteers) |
| Bede Johnpulle | — | ASP to police Head quarters |
| Rear Adm Royce de mel | — | Former Navy Commander |
| Colonel Maurice de Mel | — | Chief of Staff of the Army |
| Colonel W. S. Abraham | — | Commander 3rd Field Artillery Regiment. |
| Major Basil Loyala | — | C A |
| Lt. Col. Noel Mathysz | — | Commander Ceylon Electrical and Mechanical Engineers |
| Colonel Sepala Attygalle | — | Commander Ceylon Armoured Corp |
| Lt, Colonel D.F. T.Abeysinghe | — | Ceylon Army ordinance Corp |

# வங்காள விரிகுடாவில் வளர்ந்துவரும் பதட்ட நிலை

ஏசியாவீக் 17-01-1992

தெற்கு பங்களாதேசின் கொக்ஸ் பசார் (Cox's Bazar) மாவட்டத்திலுள்ள நாவ் (Naaf) ஆற்றின் கரையோரங்களில் பல குடும்பங்கள் குழுமியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அவர்கள் திறந்த வெளியில் உறங்குகின்றார்கள். அவர்களின் ஆடைகள் கந்தலாக இருக்கின்றன. இந்த உலகத்தில் தங்களுக்குச் சொந்தமென்று அவர்கள் கூறக்கூடிய அவர்களுடைய உடமைகள் யாவும் அவர்களைச் சுற்றியுள்ளன. மேற்கு பர்மாவின் அரகன் (Arakan) மாநிலத்திலிருந்து பங்களாதேசுக்குத் தப்பி போடிவரும் போது தங்கள் உடமைகளில் எவற்றைச் சுமந்து கொண்டு வரக்கூடியதாக இருந்ததோ, அப்படிச் சுமந்து வரப்பட்ட பொருட்களே இவைகள். இவர்களைத் தற்காலிகமாகத் தங்கவைப்பதற்காகப் பாடசாலைகள், பள்ளிவாசல்கள் மற்றும் அரசாங்க கட்டிடங்கள் இவர்களுடைய வசிப்பிடங்களாக மாற்றப்பட்டு அவற்றில் பெரும் எண்ணிக்கையானமக்கள் நிரம்பியுள்ளனர். பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்களால்தாங்கள் துன்புறுத்தப்படுவதாகக் கூறிக்கொண்டு புத்தசமயத்தவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட அரகன் மாநிலத்திலிருந்து சுமார் 5ப,00ப முஸ்லிம்ரொக்கின்கியாசு (Rohingyas) இன மக்கள் கால் நடையாக இங்கு வந்துள்ளனர். மேலும் பலர் தினமும் வந்து கொண்டிருக்கிறார்கள்.

அரகன் மாநிலத்துக்கு ஆயிரக்கணக்கான படையினரைப் பர்மிய அரசாங்கம் சென்றவருடம் அனுப்பியதிலிருந்து இந்த வெளியேற்றம் ஆரம்பமானது. இந்தப் படைக்குவிப்பு பர்மாவின் 270 கிலோ மீற்றர் நீளமான எல்லையில் பதட்டத்தை ஏற்படுத்தியதுடன் அபாயகரமான ஒரு சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. ரெசுபரா (Rezupara) வில் அமைந்துள்ள எல்லைப்புறக் காவலரண் மீது பர்மியத் துருப்புக்கள் டிசம்பர் 21ம் திகதி மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக பங்களாதேசின் எல்லைக் காவற்படையைச் சேர்ந்த ஒரு படைவீரர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமுற்றுமுள்ளனர். பர்மிய அரசாங்கம் தனது படையை இந்த எல்லையில் குவித்துக் கொண்டிருந்ததன் காரணமாக பங்களாதேசு அரசாங்கமும் ஜனவரி 05 ம் திகதி தனது படைகளைத் தயார் நிலையில் இருக்கும்படி பணித்தது.

பர்மா, பங்களாதேசு ஆகிய இரு பகுதியினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கின்றார்களேயானாலும் அவை பயனளிப்பதாகத் தெரியவில்லை. பங்களாதேசு எல்லைப்புறத்திலுள்ள பட்டணமான ரெக்னாவுக்கு (Teknaf) 12 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அரகனில் உள்ள மயுங்டோ (Maungdow) வில் முதலாவது சந்திப்பு டிசம்பர் 31ம் திகதி நடைபெற்றது. பர்மிய இராணுவத்தால் பங்களாதேசு காவற்படை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தவறாகச் செய்யப்பட்ட தாக்குதலெனப் பர்மிய அரசாங்கம் கூறியதாகத் தெரிகின்றது. பர்மிய கிளர்ச்சியாளர்களையே தங்கள் படை தேடுவதாக அது அறிவித்தது. இப்பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையேயுள்ள மூன்று போக்குவரத்துப் பாதைகள் மீண்டும் திறக்கப்பட்டன. எல்லையின் இரு பக்கங்களிலும் இராணுவத்தினரை நகர்த்துவதில் இந்தச் சந்திப்பு ஒருவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

சென்ற சில வாரங்களில் பர்மிய இராணுவம் பெரும் எண்ணிக்கையான படையணிகளை இந்தப் பிரதேசத்துக்குள் நகர்த்தியுள்ளதாக அரகனிலிருந்து வரும் பங்களாதேசின் புலனாய்வு அறிக்கை கூறுகின்றது. மேலும் கவசவாகனங்களை நகர்த்தியுள்ளதாகவும், உலங்கு வானூர்திகள் தரையிறங்கத் தக்கதாகத் தளங்களை இந்த எல்லைகள் தோறும் அமைத்து அரகன் மாநிலத்தின் தலைநகரமான சிற்வே (sittwe) என்னும் துறைமுகப் பட்டினத்துக்கு (முன்பு அகயபு (Akayab) என அழைக்கப்பட்டது) அப்பால் கடற்படைக் கப்பல்கள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன. அபாயகரமான ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருகின்றது.

30,000க்கு மேற்பட்ட படைவீரர்கள் பங்களாதேசின் எல்லையில் குவிக்கப்பட்டிருப்பதாக ரெக்நாவ்வில் இருக்கும் ஒரு மூத்த எல்லைக்காவல் அதிகாரி கூறுகின்றார். ஏவுகணை செலுத்திகள் பெரும் பீரங்கிகள், கவசவாகனங்கள் படையினரை சுமக்கும் வாகனங்களைப் பர்மிய படைகள் கொண்டுள்ளதாகவும் அவர்கள் 37 மற்றும் 57 மீ. மீ. விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இருப்பதாகவும், இவைகளுக்கு உதவ சிற்வேயில் ஏழு எல் 7 ரக போர் விமானங்களும் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் மேலும் கூறுகின்றார்.

தென்கிழக்கு பங்களாதேசில் நிலைகொண்டிருக்கும் பர்மிய கிளர்ச்சிக்காரர்களின் படைகளே தங்கள் கவலைக்கு காரணமாக

இருப்பதாகவும், அதைப்பற்றி பங்களாதேசு அதிகாரிகள் பாரா முகமாக இருப்பதாகவும், பர்மிய அரசாங்கம் கூறுகின்றது. ரொக்கிங்கியாஸ் தீவிரவாதிகள் இரு பிரதான பிரிவுகளாகச் செயல்படுகின்றனர். அவையாவன மிதவாத போக்குடைய அரகன் ரொக்கிங்கியா இஸ்லாமிய முன்னணியும் (Arakan Rohingya Islamic Front) தீவிரப் போக்குடைய இஸ்லாமிய அடிப்படைவாத ரொக்கிங்கியா ஒற்றுமை இயக்கமும் (Islamic Fundamentalist Rohingya Solidarity Organisation) ஆகும். அண்மையில் ரொக்கிங்கியா கிளர்ச்சியாளர்கள் 15 பர்மிய எல்லைக் காவலர்களை கொன்றதாக உறுதிப்படுத்தாத அறிக்கை ஒன்று கூறுகின்றது இச்சம்பவம் உண்மையாக நடந்திருக்குமாயின், பர்மியப் படைகள் ரொக்கிங்கியாக் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராகச் செயல்படுவதற்கு காரணம் இருக்கின்றது.

பர்மிய இராணுவ அரசாங்கத்தின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் சபை (State law ond order restoration Council) அந்தநாட்டில் நிலவும் அரசியல் பொருளாதார பிரச்சினைகளிலிருந்து அந்நாட்டு மக்களை திசைதிருப்புவதை நோக்கமாகக் கொண்டே இஸ்லாமியருக்கு எதிரான நடவடிக்கைகளில் அது அரகனில் ஈடுபட்டுவருவதாகச் சிலர் கருதுகிறார்கள். இம்மாதிரியான வழிமுறைகளை பர்மிய அரசாங்கம் கையாள்வது இதுதான் முதல் தடவையல்ல. 1978 ம் ஆண்டில் இவ்விதமான ஓர் நடவடிக்கையை நாகா மின் (Nagamin) அல்லது ட்றாகன் சிங் (Dragan King) என்னும் பெயரில் பர்மிய அரசாங்கம் மேற்கொண்டது. இந்த நடவடிக்கையின் காரணமாக 2 00 000 க்கும் அதிகமான இஸ்லாமியர்கள் அரகனிலிருந்து பங்களாதேசுக்கு துரத்தப்பட்டார்கள் இவர்களில் நூற்றுக்கணக்கானோர் இறந்தபோதிலும் இறுதியில் பெரும்பாலானோர் நாடுதிரும்பினர்.

ரொக்கிங்கியா இஸ்லாமிய சிறுபான்மை இனத்தைத் தாக்குவதன் மூலம் தங்களுடைய சொந்த மக்களது ஆதரவைப் பெருமளவு பெறலாம் என பர்மிய அரசாங்கம் கருதுவதாக ரொக்கிங்கியா ஒற்றுமை இயக்கத்தின் தலைவர் மொகமட் யூனுஸ் (Mohamud Yunus.) கூறுகின்றார். அரகன் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது விட்டால் தங்களது நாடு ஒரு இஸ்லாமிய நாடாக மாறிவிடும் என்ற அச்சம் காரணமாகவே பௌத்தர்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட பர்மாவில் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வு இருந்து வருகிறது என்று ஒரு அவதானி கூறுகின்றார். அரகன் பர்மாவிலிருந்து தனிநாடாகப் பிரிந்து செல்லாது அதனுடன் இணைந்திருக்கவேண்டும் என்ற நோக்கம் கார

ணமாகவே இஸ்லாமிய எதிர்ப்புணர்ச்சி தூண்டப்படுவதுடன் மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக இனவாத வழிமுறைகளையும் பர்மிய இராணுவ அரசு மேற்கொண்டு வருகின்றது.

பர்மாவின் அரசியல் எப்படி இருந்த போதிலும் இதனால் கூடுதலாகப் பாதிக்கப்படுவது பங்களாதேசு ஆகும். அரகனிலிருந்து சென்ற ரொக்கிங்கியாஸ் மக்களை இந்தியாவும் ஏற்றுள்ளது. மேகாலயா மற்றும் மணிப்பூர் ஆகிய இந்திய மாநிலங்களுக்கு 400 மக்கள் சென்றிருக்கிறார்கள். இதனால் அரசியல் ரீதியான பின்விளைவுகள் ஏற்படும் என்பதால் நாங்கள் அவர்களுக்கு அரசியல் தஞ்சம் கொடுக்கமாட்டோம். நாங்கள் அவர்களை வெறுமனே அகதிகளாகவே கவனிப்போம் என புதுடில்லியிலுள்ள வெளிவிவகார அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

பொருளாதாரத்தில் நலிவுற்றிருக்கும் பங்களாதேசால் பர்மாவிலிருந்து பெருந்தொகையினராக வரும் ஏதிலிகளுக்கு உறையுளும், உணவும் கொடுக்க இயலாது கொக்ஸ்பசாரிலுள்ள மக்களால் இயன்றளவு உதவி இவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த போதிலும் வளர்ந்த நாடுகளிலிருந்து உதவி கிடைக்காததின் காரணமாக சிறிதளவே இவர்களால் உதவ முடிகின்றது.

வாரத்துக்கு 150 மக்கள் வீதம் ஏதிலிகள் வருவதாக உள்ளூர் அதிகாரிகள் கணிப்பிட்டுள்ளனர். இந்த நிலை தொடருமாயின் இந்த ஏதிலிகளின் எண்ணிக்கை 100,000 மாக உயருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதைப் பார்த்துக்கொண்டு வெறுமனே தாங்கள் பாராமுகமாக இருக்க முடியாது என பங்களாதேசு வெளிநாட்டமைச்சு அங்குள்ள பர்மிய தூதரான சோ மின்றி அவர்களுக்குக் கூறியுள்ளது.

அரகனை விட்டு வெளியேறிய முஸ்லிம்களில் அப்துல் கபூரும் ஒருவர். அவர் தனது குடும்பத்தையும், எதைத் தங்களால் கொண்டு செல்லமுடியுமோ அவைகளையும் கொண்டு சென்றார். அவர் இப்பொழுது உதவிவரும் மட்டும் நாவ் ஆற்றங்கரையில் இருக்கிறார். 'இப்படியான ஒரு நிச்சயமற்ற நிலையில் நாம் எவ்வளவு காலம் வாழ்வது' என அவர் கேட்கின்றார். இருப்பினும் அவர் மற்றவர்களைவிட அதிஷ்டசாலியாகவிருக்கின்றார். பங்களாதேசுக்கு வருவது மிகவும் அபாயகரமான ஒரு விடயம். இந்த மக்களினுடைய இன்னல்களிலும் துன்பங்களிலும் பங்குபற்றாது உலகம் பாராமுகமாக இருப்பதாக இங்கு வருகைதந்த ஒரு இராசதந்திரி கூறுகின்றார்.

# தாங்கள் அரசியல் கைதிகளை வைத்திருப்பதாகப் புலிகள் கூறுகிறார்கள்

தாரகி - ஐலண்ட் 8-3-1992

புலிகள் இப்போது முதல் தடவையாக தங்களிடம் மறியல் அமைப்பொன்றும், அரசியல் கைதிகளும் இருக்கின்றார்கள் என ஒத்துக்கொண்டுள்ளனர் தங்களது வேவுபார்த்தல், நீதி, குற்ற வியல் அமைப்புகளை சட்டபூர்வமாக்கும் முறையில் கவனமாக திட்டமிட்ட நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். தங்களது ஆதிக்கத்தை வடக்கில் வளர்க்கவும், அமைக்கவும் அவர்கள் எடுத்துள்ள தந்திரோபாயத்தின் புதிய முக்கிய ஏற்பாடாக இது அமைகிறது தமது பரீட்சார்த்த அரச அமைப்பை எவ்விதம் அவர்கள் சட்டபூர்வமானதாக செய்யப்போகிறார்கள்?

1990 இல் தொடங்கிய இரண்டாவது ஈழப்போரின் பின்னர் புலிகள் சர்வதேசிய மனித உரிமை அமைப்புகளால் விமர்சிக்கப் பட்டுள்ளார்கள். புலிகள் 1987 க்கு முன் வடக்கிலும் கிழக்கிலும் நூற்றுக்கணக்கான சிங்கள மக்களைக் கொன்றும் சின்னாபின்னப்படுத்தியும் இருந்தபோதும் சர்வதேச ரீதியில் இந்திய ஆதரவு இருந்தமையால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கோ அல்லது தில்லியினால் ஆதரவளிக்கப்பட்ட வேறு குழு மீதோ பாரதூரமான மனித உரிமை மீறல் தாக்குதல்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. சிறிலங்கா அரசே தனிமைப்படுத்தப்பட்டு ஈற்றில் முழுக்குற்றவாளியுமாகக் காண்பிக்கப்பட்டது.

இந்திய அமைதிப்படையினருடன் புலிகள் முரண்பட்டபின் நிலைமை மாறிற்று. போரில் ஈடுபடாதவரை கொலை செய்தல் பற்றி உள்ளுக்குள்ளும் வெளியிலும் அதிக விமர்சனத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளாக்கியது. இந்தியா அரசியல் பூகோளத்தேவைகளுக்கு உபயோகித்துவிட்டுப் பின் தேவையற்ற போது தமிழ் குழுக்களை, குறிப்பாக புலிகளை, அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படமுடியாத பயங்கரவாதிகள் எனப் படம் பிடித்துக்காட்ட முயன்று வருகின்றது.

அரசுடனான தேன் நிலவுக் காலத்தில் அவர்கள் கிரமமான முறையில் தகவல் அறியவும் இந்திய ஆதரவுக் குழுக்கள் ஏதே

னும் தோன்றக் கூடிய சாத்தியக்கூறு கடுகளவாவது உண்டா என்பதை அவதானிக்கவும் வேலைப் பின்னல் ஒன்றை உருவாக்கினார்கள்.

ஈ. பி ஆர். எல் எவ் ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்தோர் கைது செய்யப்படுவதும் தடுத்து வைக்கப்படுவதும் அதிகரித்தது. கிளிநொச்சியிலுள்ள துணுக்காயில் பெரிய மறியல்சாலை இருப்பது பற்றி கொழும்புக்கு அறிக்கைகள் கிடைத்தன. தடுத்து வைத்தல் சித்திரவதை செய்தல்கள் பற்றி விபரமான இரு தகவல்கள் கொழும்பில் வெளியிடப்பட்டன (ஒரு தகவல் சமீபத்தில் ஈ. பி. ஆர். எல் எவ். பினால் வெளியிடப்பட்டது)

யூ. ரி. எச் ஆர் (முன்னாள் யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சிறிதரன் டாக்டர் ராஜனி கூல் ஆகியவர்களின்) புலிகளின் கடுமையான மனித உரிமை மீறல்களை (கவரக்கூடிய வகையில்) விபரித்து பல சிறிய புத்தகங்களை கொழும்பில் வெளியிட்டது

சமீபத்தில் முன்னைய புளொட் உறுப்பினர்களான நோபேட், செல்வி. தில்லை உட்பட மற்றும் பலர் கைது செய்யப்பட்டமை தமக்கு எதிராக வரக்கூடிய சாத்தியககூறு படைத்தவர்களை யிட்டு புலிகள் கையாளும் முறைகள் அவர்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றது சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிக்கைகளில கிழக்கில் தொடரும் முஸ்லிம்களுக்கெதிரான புலிகளின் கொலைத்தாக்குதல்களும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

19 7 க்கு முன்னரும், குற்றமற்ற குடிமக்கள் கொலைசெய்யப்படுவதும், அவர்கள் தடுத்து வைக்கப்படுவதும், சித்திரவதைப் படுத்தப்படுவதும் பேச்சுச் சுதந்திரம், பிரசுரச் சுதந்திரம், ஒன்று கூடல் சுதந்திரம் ஆகியன அடக்கப்பட்டதும் வடக்கில் தமிழ்க்குழுக்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இடங்களில் இடம் பெற்றன.

இக்குழுக்களுக்கு எதிரான தொடர்ச்சியான கண்டனங்கள் ஆயுதம் தாங்கிய இயக்கங்களுக்குள்ளிருந்தும் வெளிவந்தது. தீப்பொறி, ரெப்பிளா (TREPLA) போன்ற சிதறுபட்ட குழுக்கள் இந்திய ஆதரவு கொண்ட ஆயுதந்தாங்கிய தமிழ்க் குழுக்களின் பயங்கர இரத்த வெறியாட்டங்களை விமரிசித்தன ஆனால் அந்த நேரம் வடக்கில் தமிழ்க் குழுக்களின் மனித உரிமை மீறல்கள் பற்றிப் பேசப்படவில்லை ஆனால் இந்தியா புலிகளின் கடும்

எதிரியாகிய பின்னர் அவர்களை அடக்கி பயங்கரவாதிகளாகக் காட்டத் தீர்மானிக்கப்பட்ட பின் சர்வதேச மனித உரிமை அரங்கில் நிலைமை மாற்றம் அடைந்தது. இப்போது உள்ளூரில் சர்வதேச மட்டத்திலும் மனித உரிமை மீறல் அமைப்புகளின் கண்களில் சிறிலங்காவில் இரண்டு மனித உரிமை மீறல்காரர்கள் இருக்கிறார்கள் ஒன்று அரசு மற்றது புலிகள்.

198 க்கு முன்னர் கண்மூடித்தனமாக கைதுசெய்தல், தங்களுக்குத் தெரியாது என்று கூறி தடுத்து வைத்திருத்தல், சித்திரவதை ஆகியவற்றுடன் உடனடியாக ஆட்களைத் தீர்த்துக் கட்டுதல் போன்றவைகளுக்கு அரசே முழுப் பொறுப்பாளி எனக்காட்டப்பட்டது. புதிய அரசு பற்றிய கருத்தில் மக்களுக்கு நீதி வழங்கப்படும் போது இயற்கை நீதி அடிப்படைக் கோட்பாடுகள் பேணப்படக்கூடிய விதத்தில் அரசமைப்புக்கள் இருக்கவேண்டுமென்பதால் மேற்கூறியவைகள் மனித உரிமை மீறல்களெனக் கணிக்கப்படுகின்றன ஆகவே ஒரு அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் அது தனது மக்களைப் பொறுத்தபட்டில் அதன் குற்றவியல் நீதித்துறை அமைப்புக்களைத் தவறாகப் பாவித்ததாகவோ அல்லது அவற்றை மீறிவிட்டதாகவோ அல்லது அவற்றை அடக்கிவிட்டதாகவோ தான் விளக்கம் கொடுக்கப்படும்.

குற்றத்துக்கும் மனித உரிமை மீறலுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் முன்னையது அரசுசாராத வாதிப் பிரதிவாதிகளோடு தொடர்பானது. பின்னையது அரசுகளுடன் சம்பந்தப்பட்டது ஒரு நாட்டில் அந்நாட்டின் குற்றவியல் நீதித்துறை அமைப்புகளால் சீர்திருத்தம் மூலமும் தண்டனை வழங்குவது மூலமும் குற்றத்தைத் தடுப்பதற்கு எத்தனிக்கப்படுகிறது. மனித உரிமைகள் மீறல்களைத்தடுப்பது ஆரம்பத்தில் அரசின் நீதித்துறை குற்றவியல் அமைப்புகளுக்கு சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலமும் எத்தனிக்கப்படுகின்றது.

மனிதாபிமான வழிமுறையாக மாத்திரமன்றி ... லும் கூடிய வகையில் மனித உரிமை விடயங்கள் பரிமாணவளர்ச்சி பெற்றிருக்கும் உலக அரங்கில் குறிப்பாக புதிய உலக ஒழுங்கில் ஒரு நாடு தனது நாட்டின் கட்டமைப்பில் கொண்டுவரப்பட்டுள்ள சீர்திருத்தங்கள், மீறல்களுக்கு எதிர்த்த ... க்களுக்குப் பதிலாக அமைக்கப்பட்ட புதிய மாற்றமைப்புகள் போன்றவற்றை எடுத்துக்காட்டியும் சர்வதேச அமைப்புகள் கூறிய சிபார்சுகளை முற்றாகவோ பகுதியாகவோ ஏற்றுக்கொண்டும் தன்னை சர்வ

தேச அமைப்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் நடந்து கொள்ளும்.

முழுச் சிபார்சுகளையும் நடைமுறைப்படுத்த முடியாமைக்கான காரணங்களையும் அரசு எடுத்து விளக்கும் (அனேகமான இடங்களில் பூகோள அரசியல் நிலவரங்கள் காரணமாக சீர் திருத்தத்தில் தாமதங்களை பல காரணங்கள் காட்டி நியாயப் படுத்தமுடியும்)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் ஆட்கள் காணாமற்போவது பற்றிய இயக்குனர் குழுவின் சிபார்சுகள் குறித்து 48 வது அமர்வின் போது பெப்ரவரி 27 ல் அரசு இதைத் தான் செய்தது (பிறட்மன் வீரக்கோனின் வாக்குமூலம்)

நிகழ்ச்சியில் ஏற்பட்ட முக்கிய மாற்றம் என்னவென்றால் இந்த அறிக்கையிலும் 1991 ம் ஜனவரி மாச சிறிலங்கா மன்னிப்புச் சபையின் அறிக்கையிலும் மனித உரிமை மீறல்காரராகக் காட்டப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலியினரும் தமது பக்கத்து விவாதத்தை சரியாக ஒரு அரசு தன்வாதங்களை எவ் விதம் முன்வைக்குமோ அது போல், தமது பகுதிகளில் நீதித் துறைக் குற்றவியல்துறை ஆகியவற்றின் அமைப்பு அமைப்பதன் மூலம் மனிதஉரிமை மீறல்களைச் சீர்திருத்தப்படுவதாகக் கூறியுள்ளனர். அதுவுமல்லாமல் அரச பிரதிநிதிக்குழு விளக்கியது போல் தமது சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கும் புதிய அமைப்புக்களை உருவாக்குவதற்கும் உள்ள கடினமான சூழ் நிலைகளையும் எடுத்து விளக்கியுள்ளனர்.

கமிசனின் தலைவர் முன்னிலையில் தூதுவர் நெவில் யயவீரா தனது கருத்தை முன்வைசத ஆறுநாட்களின் பின்னர் பெப்ரவரி 18 ல் தமிழீழ விடுதலைப் புலியினரின லண்டனில் உள்ள சர்வ தேசச் செயலகம் தனது அறிக்கையை விடுத்துள்ளது.

சிறிலங்கா மன்னிப்புச்சபையின் .991 செப்ரம்பர்மாத 1992 ஜனவரி மாத அறிக்கைகளையும், ஜெனிவாவில் நடந்துகொண்டிருக்கும் ஐ நா மனித உரிமைகள் கமிசனின் ஆட்கள் காணாமற் போவது பற்றிய இயக்குனர் குழுவின் சமீபத்திய அறிக்கையையும் இன்னும் அரசுசார்பற்ற அமைப்புக்களினது அறிக்கைகளில் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகளிலும் அவற்றிலும் பார்க்க குறைந்த அளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலும் நடைபெறுவதாகக் கூறும் மனித உரிமை மீறல்கள் பற்றி கூறி

யுள்ளவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் கவனத்துக்கு எடுத்துள்ளது. என்று அவ்வறிக்கை கூறுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களில் நடைபெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களைப் பொறுத்தளவில், தமிழீழ விடுதலைப் புலிகள் தம் கட்டுப்பாட்டுக்குள் வடக்கிலும் கிழக்கிலும் பிரதேசங்களை வைத்திருப்பது உண்மையானாலும் அத்தகைய பகுதிகளின் அளவும் கட்டுப்பாட்டின் தன்மையும் வடக்கில் எல்லா இடத்திலும் ஒரு விதமானதாக இல்லை என்பதை முதலில் கூறிக்கொள்ள விரும்புவதாகக் கூறியுள்ளார்கள்.

அவ்விதமுள்ள கடினமான சூழ்நிலையிலும் கூட தமிழீழ விடுதலைப் புலிகள் அநேகமான பிரதேசங்களில் உறுதியான குடியியல் நிர்வாகத்தை அமைப்பதில் வெற்றிகண்டுள்ளதோடு விவசாயம், மீன்பிடி, சிறுகைத் தொழில் நடவடிக்கைகளுக்குத் தேவையான அமைப்புகளை வழங்குவதிலும் உதவி உள்ளனர். கல்வி, பண்பாட்டு நடவடிக்கைகளும் கவனிக்கப்பட்டுள்ளன போதுமான அளவு சட்ட ஒழுங்கு அமுலபடுத்தப் படுவதற்கான அமைப்புக்களும் உண்டாக்கப்பட்டுள்ளது. மறியல் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மறியல்சாலை பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கும் மனித உரிமை மீறல் அமைப்புக்கள் மனிதாபிமான அமைப்புகள் ஆகியவற்றிற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. உள்ளூர் சட்டம் சர்வதேச சட்டங்களுக்கு அமைவான சூழலில் கைதிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் மனிதாபிமானமான முறையில் நடத்தப்படுவார்கள்.

கடந்த வருட ஜூன் மாதத்திலிருந்து தமிழீழ காவல்துறை ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது. அதற்கு தலைமைக் காவல் துறை அதிகாரி தலைமை வகிக்கிறார். தமிழர் தாயகத்தில் சட்ட ஒழுங்குகளுக்கு திரு நடேசன் பொறுப்பாக இருக்கிறார். காவல் துறை ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. தமிழீழ காவல் துறையின் பிரதான நிலையம் யாழ்ப்பாணத்திலும், சுன்னாகம், சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் கிளை காவல்துறை நிலையங்களும் உள்ளன. தனிப்பட்டவர்களால் செய்யப்படும் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. போக்குவரத்துக் கட்டுப்பாடு காவல் துறையினரின் வழமையான கடமைகளில் ஒன்றாக இருக்கிறது. தமிழர் தாயகத்தில் சட்டப்படியான ஆட்சி பேணப்படும்.

தண்டனை வழங்கும் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் இயற்கை நீதிக்கோட்பாடுகளுக்கு அமைவாக நடத்தப்படவேண்டுமென்பதற்குத் தேவையான பாதுகாப்புக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்துள்ளனர். நிரந்தரமான நீதிமன்றங்களும், நீதி பரிபாலிப்பதற்குத் தேவையான விசாரணை மன்றங்களும், நிறுவப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளன ஒரு குற்றத்தைச் செய்வதற்காக கைது செய்யப்பட்ட ஒருவர் சர்வதேச நீதித்தரத்தில் நியாயமான முறையில் விசாரணைக்கு உள்ளாகும் தகுதியுடையவராவார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு தனிநபர் அல்லது குழுவின் குற்றத்தை குறிக்காது, பிழையாக அல்லது முறைகேடாக இயங்கும் அரச அமைப்புக்களையே குறிப்பதால் தான் புலிகள் இந்தவகையில் பதில் வழங்க முடிந்தது.

சிறிலங்காவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மனித உரிமைகளை மீறுகிறார்கள் என்று குற்றஞ்சாட்ட எடுக்கப்பட்ட அவசரமும் உற்சாகமும் புலிகளுக்குச் சாதகமான நிலையையும் குற்றஞ்சாட்டியவர்களுக்கு பாதகமான நிலையையும் உருவாக்கியுள்ளது அதன் உண்மை இதுதான். நீங்கள் புலிகளை மனித உரிமை மீறுபவர்களெனக் கூறினால் மேற்கூறிய காரணங்களினால் அவர்களுடைய நிர்வாக அமைப்புக்கள் சட்டபூர்வமாக்கப்படுகின்றன.

அவ்விதம் சட்ட பூர்வமாக்க விரும்பாவிடில் அவர்களின் மனித உரிமை மீறல்களைப் பற்றி பேசாதிருக்கவேண்டும் அவ்விதம் பேசாதுவிட்டால் மனிதஉரிமை மீறுப்புகள் ஒன்றும் குற்றஞ்சாட்டவில்லை என்ற காரணத்தால் அவர்களது அமைப்புக்கள் சட்ட ஒழுங்குமுறையானவையாக நியாயப்படுத்தப்படும்.

இந்த இக்கட்டான நிலை தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நிலைப்பாட்டில் ஒன்றைத் தெளிவாக்குகின்றது அதாவது அதை அடக்குவது வடக்கோடு நின்றுவிடக்கூடிய போரோடு சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப நடவடிக்கை மாத்திரம் அல்ல, சர்வதேச அரங்குகளில் இந்தியாவின் முயற்சிகளுக்கிடையேயும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உலக அங்கீகாரத்திற்கான நடைமுறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதாகும்.

# யாழ்ப்பாணக் குடாநாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதற்கான சமரை நடாத்த இராணுவத்தினர் தயார் நிலையில் உள்ளனர்

றோகன் குணசேகரா - சண்டே ஐலன்ட் 2-2-92

இராணுவத்தினரால் உளவியல் ரீதியிலான சமர் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட நிலையில் (Psyops Boys) யாழ்ப்பாணக் குடாநாட்டை விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்பதற்கான சமர் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. முக்கியமாக ரீ 5 (T55) ரக பிரதம சமர் டாங்கிகளும் அதற்குதவியாக இயந்திரமயப்படுத்தப்பட்ட காலாட்படையினரை ஏற்றிச் செல்லும் ரீ 85 (T 85) சுழற்பட்டி ரக காலாட்படை சண்டை வாகனங்களும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் புலிகள் அமைத்துள்ள பதுங்குகுழிகளை அழிப்பதற்கு உபயோகப்படுத்தப்படவிருப்பதுடன், நடுத்தூரம் செல்லும் 130 மி. மீ. ஆர்ட்டிலறி ஏவுகணைகளும் (ஆர்ட்டிலறி குண்டுத் தடைவேலி) குண்டுவீச்சு விமானங்களும் இத்தச் சமரில் ஈடுபடுத்தப்பட இருக்கும் அதேவேளையில், கப்பல் மூலம் கொண்டுவரப்படவுள்ள காலாட்படையினர் படகுகள் மூலமும் (Landing Crafts) ஆழமற்ற கடற்பரப்பில் செல்லும் ஜெற் நீர் உந்து விசைப்படகுகள் (Water Jet Propelled) மூலமும் கரைக்கு அலை அலையாகக் கொண்டுவரப்படவுள்ளனர்.

விடுதலைப்புலிகளுடைய வானொலித் தொடர்புச் சாதனங்களின் செய்திப்பரிவர்த்தனைகள் அனைத்தையும் மின்னியக்கச் சாதனங்கள் மூலம் அதி உயர் சத்த அலைகளை எழுப்பிச் சீர்குலைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அவர்களின் பதுங்குகுழிகளை தகர்த்து அழிக்கும் பொறுப்பு புதிய டாங்கிப் படைப்பிரிவிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

குறிப்பிட்ட நாளில் நடக்கும் என்றிருக்கும் இந்தச் சமர் ஒருவேளை மக்களை மடையர்களாக்குவதற்கென்ற முன்னுக்கு நடாத்தப்படலாம் அல்லது பின் போடவும்படலாம் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணத் தாக்குதலை இலங்

கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் முடிந்தவுடனேயே மேற்கொள்ளுவது பார்ப்பவர்களுக்கு நன்றாக இருக்காது. தாங்கள் புதிதாக வாங்கிய புதிய ஆயுதங்களைப் பாவிக்கக்கூடிய ஆற்றலைப் பெறுவதற்கும் படையினருக்குப் போதிய நேரம் வேண்டும், வாங்கியவுடனேயே ரீ 55 (T55) ரக போர் டாங்கி (Tanks) களைப் போருக்குக் கொண்டு செல்ல முடியாது. இந்த டாங்கிகளை இயக்குபவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், அவர்கள் இவற்றைப் பாவிப்பதற்கு ஆற்றல் பெறுவதற்கும் போதிய நேரம் வேண்டும். இவற்றை அரைகுறையாகச் செய்வதனால் தோல்வியைச் சந்திக்க நேரிடலாம். இது ஒருபுறமிருக்க போரை ஆரம்பிக்க முன்னரே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளிலுள்ள மனித உரிமை அமைப்புக்கள் இதை அறிந்து விடுவார்கள் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் உண்மையான சம்பவங்களை அறியும் நோக்கில் இங்கு வந்த கனடிய தூதுக்குழு சென்றவாரம் விடுத்த அறிக்கையை உற்று நோக்குகையில், அது ஆதாரபூர்வமான ஒன்றாகில், அது இலங்கையில் நடைபெற்றுவரும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு இப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இலங்கை அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் கனடா நிர்ப்பந்திக்கக்கூடுமெனத் தெரிகின்றது. கனடா தனது நோக்கத்தை நிறைவேற்ற விடுதலைப் புலிகள் கனடாவில் வலுக்கட்டாயமாகப் பணம் சேகரிப்பதற்கு எதிராகவும், இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கும் உதவிகளுக்கு ஒன்றில் நிபந்தனைகளை விதிக்கவோ அல்லது உதவிகளைக் குறைக்கவோ நடவடிக்கை மேற்கொள்ளவும் இடமுண்டு. (1989 ம் ஆண்டு விடுதலைப் புலிகள் கனடாவிலுள்ள சிறைச்சாலை ஒன்றை உலங்குவானூர்தி மூலம் சென்று உடைக்க முயன்றதாகவும், இதன் காரணமாகவே கனடாவின் எல்லையைக்கடந்து அங்கு அகதிகளாக வருவதைக் கனடா கட்டுப்படுத்தியுள்ளதாகவும் அறியமுடிகின்றது).

இப்பிரச்சினை சம்பந்தமான சண்டையில் ஈடுபட்டிருக்கும் அரச படைகளும், விடுதலைப்புலிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கனடிய தூதுக்குழு குற்றஞ்சாட்டியுள்ள அதே வேளையில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக் காண்பதில் அக்கறை காட்டவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளது.

சென்றவாரம் ஏறாவூருக்கு அருகே தன்னைச் சந்தித்த கனடியத் தூதுக்குழுவுக்கு, விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டத்தலைவர் திரு. கரிகாலன் அவர்கள் கொடுத்த செவ்வியின் விளக்கம் இந்தப் பிரச்சினையை மதிப்பீடு செய்ய உதவுகின்றது. விடுதலைப்புலிகளோ அல்லது பாதுகாப்புப் படையினரோ இந்தப் போரில் வெற்றிபெற முடியாதென்பதைத் திரு. கரிகாலன் கூறியுள்ளார். சென்ற பத்து ஆண்டு காலமாக ஒருவரையொருவர் வெற்றிகொள்ள முடியாதிருப்பது போன்ற நிலைமையைத்தான் புதிய இராணுவ நடவடிக்கைகள் தோற்றுவிக்கும் என அவர் சிந்திப்பதாகத் தெரிகிறது.

ஆகக்கூடியளவில் விடுதலைப்புலிகளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்ற முடியும். இப்படி நடைபெற்றால் அவர்கள் காடுகளுக்குச் சென்று கரந்தடிப் போரில் ஈடுபடுவதுடன் தெற்கிலுள்ள பொருளாதார இலக்குகளை மையமாக வைத்துத் தாக்குவார்கள். அத்துடன் மலைநாட்டுப் பகுதிகளிலும் அவர்கள் தங்களது நடவடிக்கைகளை விரிவாக்கி அரச படையினரின் செயற்பாடுகளை மேலும் பரவலாக விரிவாக்கிக் கொண்டு போகப்பண்ணும் நடவடிக்கைகளை மேற்கொள்வர் என எண்ணவும் இடமுண்டு.

சென்ற பத்து ஆண்டு காலமாக இராணுவத்தினர் விடுதலைப்புலிகளுடன் போரில் ஈடுபட்டுப் பயிற்சியைப் பெற்றுவருவதுடன் தங்களுடைய எண்ணிக்கையையும் 'அதிகரித்துக்கொண்டு வருகின்றார்களானாலும் இந்த அதிகரிப்பு போதாததாகவே இருக்கின்றது. இதன் காரணமாக மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்குட்படுத்தப்பட்டு வாழ்க்கையில் விரக்தியடைந்த நிலையில் நெருக்குதல்களுக்கு நடுவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சில படையினருக்கு ஆண்டு முழுவதும் விடுமுறை கிடைப்பதில்லை. எதிர்பாராத தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் படையினரும் அவர்களது உபகரணங்களும் விசேடமாக விமானங்களும் வடக்கிலிருந்து கிழக்குக்கும் கிழக்கிலிருந்து வடக்குக்கும் அடிக்கடி செல்லவேண்டியுள்ளது.

காலாட்படையினர் விமானப்படையினரின் உதவியை நாடும் போதெல்லாம் விமான ஓட்டிகள் இரவும் பகலும் விமானங்களிலேயே இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். விமானங்கள் எளிதான முறையிலும், விரைவாகவும் தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதால், அவையே விடுத

86649
92283 c.c

லைப்புலிகளுக்கு தற்போது பெரும் அச்சுறுத்தலைக் கொடுப்ப தாக இருக்கின்றன, சென்ற வருடக்கடைசியில் இந்தியப் படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப்புலிகளின் கப்பலில் இருந்த ஒரு குறிப்பில் இருந்து இலங்கை விமானப்படையின் விமானங்களைச் சுட்டு வீழ்த்தக்கூடியதான சம் 7 (SAM 7) தரையிலிருந்து ஆகாயத்திற்குப் பாயும் ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் வாங்கி இருக்கக்கூடும் என சில இராணுவப் பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

ரீ 55 (T 55)ரக டாங்கியின் அறிமுகம் ஈழப்போர் தொழில் நுட்ப ரீதியில் எவ்வளவு தீவிரம் அடைந்திருக்கிறது என்பதைக் காட்டும் அளவுகோலாகும். ('ரீ55', குறிப்பிட்ட சில வட்டாரங்களில் விபரிக்கப்படுவதுபோல் ஓர் இலகு ரக டாங்கியாக அல்லாமல் சந்தர்ப்பவசமாக அதுவே பிரதான சமர் டாங்கியாக இருக்கிறது). இந்த டாங்கிகள் பராமரிப்பதற்கும், இயக்குவதற்கும் இலகுவானவை. இந்தியா, பாகிஸ்தான், மத்தியகிழக்கு, அங்கோலா, வியட்னாம் ஆகிய நாடுகளில் நடந்த யுத்தங்களில் பாவிக்கப்பட்ட இந்த ரக டாங்கிகள் நீர்மட்ட சுவாசக்கருவி உடன்பொருத்தப்பட்டு ஆழமான ஆறுகளிலும் செல்லக்கூடியயவையாகவும் தாழ்வான வெளிப்புற அமைப்பும் (Low Silhouette) கொண்டவையாகவே இருக்கின்றன.

இரவுவேளைகளிலும் போரில் பாவிக்கக்கூடிய இந்த டாங்கிகள் அணு, இரசாயன மற்றும் நுண்நோய்க்கிருமிப் போர் முறைகளுக்கும் (NBC) தாக்குப் பிடிக்கக்கூடிய சக்தியும் வாய்ந்தவை.

சமீப காலம்வரை இராணுவத்தினரது முக்கிய டாங்கியாக இருந்துவந்த சலாடின் (Saladin) டாங்கியிலுள்ள பீரங்கிக் குழலை விட இதன் 100 மி. மீ. டிD10 (100M. M. D10) பீரங்கிக்குழல் மிகவும் பெரிதானதும், ஆகக்கூடிய அளவில் 2000 மீற்றர்வரை தாக்கமான சூட்டிற்கும், 14,600 மீற்றர்வரை ஆகக்கூடிய மறைமுக சூட்டிற்கான வீச்செல்லைகள் கொண்டதுமாகும். இந்தப் பீரங்கிப் படைப்பிரிவில் பணியாற்றியவர்கள் எப்போதும் பெரிய கலிபர் துப்பாக்கியையே விரும்புவார்கள் என இராணுவ வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். (சலாடின் டாங்கியின் பிரதான பீரங்கிக்குழலை உற்பத்திசெய்த பிரித்தானிய நிறுவனமான றோயல் ஓர்ட்னன்ஸ் (Royal Ordnance) ரீ 55 ரக டாங்கியின் பீரங்கிக்குழலை 105 மி மீ ஆகக்கூட்டி அதன் செயல் திறனை அதிகரித்துள்ளது )

இந்த டாங்கியிலும் குறைபாடுகளுண்டு இதனுடைய பீரங்கிக்குழலைத் தாழ்த்திப் பிரயோகிக்கும் அளவு போதாதென்று சொல்லப்படுகின்றது. சுடும் சக்தியைக் கட்டுப்படுத்தும் இலகுவான கருவி அமைப்பு பீரங்கிக்குழலின் சூட்டுவீச்செல்லையைக் கட்டுப்படுத்துவதுடன், நீண்ட தூரப்பயணத்திற்கு உதவும் வகையில் டாங்கியின் வெளியில் அமைந்துள்ள எண்ணெய்த் தாங்கியும் தீப்பற்றும் அபாயம் கொண்டதாகும்.

இந்தப் பிரதான சமர் டாங்கிகள் (MBT's) யாவும் இராணுவ கவசப்போர்முறைப் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளில் ஏற்கனவே ஈடுபடுத்தப்பட்ட போதிலும் சென்றவருடம் சீனாவிடமிருந்து பெறப்பட்ட ரீ 85 (T 85) சுழல்பட்டி ரக மற்றும் ரீ 86 (T 86) ரக காலாட்படை சண்டை வாகனங்கள் போதியளவு இன்னும் வந்துசேராமையால், டாங்கிகளும் இயந்திரமயப்படுத்தப்பட்ட காலாட்படைகளும் இணைந்து கொடுக்கக்கூடிய பலனைக் கொடுக்க மாட்டாதென டாங்கிகளுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகள் அச்சமுறுகிறார்கள்.

சுழல்பட்டியா அல்லது றப்பர் சக்கரமா நகர்ப்புறப்படை நகர்த்தலுக்கு இலகுவான வாகனங்கள் என்று அலசி ஆராய்ந்த பின்பே இராணுவம் சுழல்பட்டி வாகனங்கள் வாங்குவதற்குத் தீர்மானித்தது. 1990 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அமைக்கப்பட்ட இராணுவ தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு, மலேசியாவினாலும், சிங்கப்பூரினாலும் வழங்கப்படவிருந்த பீரங்கி வாகனங்களைப் பரிசீலனை செய்த பின்னரே ரீ 85 (T 85) ரக சுழல் பட்டி அமைப்பு வாகனங்களையும், ரீ 86 (T 86) ரக சக்கர வாகனங்களையும் சீன ஆயுத உற்பத்தி நிறுவனமான நொறிங்கே NORINCO விடமிருந்து வாங்குவதற்குத் தீர்மானித்தது.

இதைத்தொடர்ந்தே சுழல்பட்டி ரக கட்டளை வாகனம் ஒன்றுடன், ரீ 85 ரக மீட்புக்கான ரி 85 சுழல்பட்டி ரக வாகனங்களையும், கவச வாகனங்களையும், ரீ 86 ரக காலாட்படைச் சண்டை (IFV'S) ச் சில்லு வாகனங்களையும் வாங்க அரசாங்கம் பணித்தது. இந்த நிறுவனத்திலிருந்து வெடிமருந்துகளையும் வேறு வாகனங்களையும் வாங்குவதற்கு இந்த வியர்பார ஒப்பந்தம் இடமளிக்கிறது.

இலங்கைக்குத் தான் வழங்கவிருந்த வாகனங்களையும் மற்றும் வசதிகளையும் பார்வையிடுவதற்காக இராணுவக் குழுவொன்றைச் சீனாவுக்கு வருமாறு நொறிங்கே நிறுவனம் அழைப்பு விடுத்திருந்தது, எதன் காரணமாகவோ இந்த அழைப்பை

இலங்கை ஏற்கவில்லை. இந்த அழைப்பை ஏற்றிருந்தால் புதிய தும், பரிசோதிக்கப்படாததுமான இந்த வாகனங்களை வாங்கு வதைத் தவிர்த்திருக்கலாம் என மூத்த இராணுவ அதிகாரி கூறுகின்றார்.

சென்ற வருடக் கடைசியில் இந்த வாகனங்கள் இங்கு வந்த பின் பார்த்த போது, இவ்வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள் பற்றி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாமல் இருந்ததை அவதானித்த தன் பின்பே பிரச்சினை எழத்தொடங்கியது. இந்த வாகனங்களை மதிப்பீடு செய்த இராணுவ கவச பிரிகேட், இவ்வாகனங்கள் மிகவும் குறைந்த தரத்திலுள்ளவை எனவும், இவை சண்டையில் பாவிக்க முடியாதவை எனவும் கூறியுள்ளது. மீட்பிற்கான வாக னங்களும் கொடுபடவில்லை. பெரும் விலை கொடுத்துப் பெற்ற இவ்வானங்கள் உதிரிப்பாகங்களின்றியும், மீட்பு வாகனங்கள் இன்றியும் வடக்கிலும் கிழக்கிலும் எடுக்கப்படவேண்டியஇராணுவ நடவடிக்கைகளில் பாவிக்க இயலாதிருப்பதாக ஒரு இராணுவ அதி காரி கூறியுள்ளார்.

கவசப்படைத் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த உத்தியோ கத்தர்கள் இந்த வாகனங்கள் வாங்கப்பட்டதையிட்டுக் குறை கூறுகின்றார்கள். இந்த வாகனங்களை ஆராய்ந்து பார்த்த பீரங் கிப்படைப் பிரிவுத் தலைவர் சமர்ப்பித்த அறிக்கை, இந்த வாக னங்களின் நிலை திகிலையூட்டுவதாக இருக்கின்றது எனக்கூறுகின் றது. உதிரிப்பாகங்களை சீனாவிடமிருந்து உடனடியாக வாங் காது விடின் இவ்வாகனங்கள் பாவனைக்குதவாதவையாக இருக் கும். சீனாவின் மக்கள் விடுதலைப்படையால் (PLA) இந்த வாக னங்கள் பாவிக்கப்பட்டவையா என்பதைத்தானும் ஆராய்ந்து பாராமலே இந்த வாகனங்கள் வாங்கப்பட்டதாக அறியமுடி கின்றது.

இந்த வாகனங்கள் பற்றிய பயிற்சியைச் சீனா அளிக்குமா எனச் சென்ற வருடம் நவம்பர் மாதம் இலங்கை இராணுவத் தலைமைப்பீடத்திற்கு விஜயஞ் செய்த சீன மக்கள் விடுதலைப் படையின் தலைவரைக் கேட்டதற்கு, அவர் இவை புதிய ரக வாகனங்கள் எனவும், இவை சீனாவிலேயே பாவனைக்கு விடப் படவில்லை எனவும் கூறியுள்ளார்.

தங்களால் மேற்கொள்ளப்படவிருக்கும் சமர் நடவடிக்கைகள் இந்த காலாட்படைச் சண்டை (IFV) வாகனங்கள் இல்லாததன் காரணமாகப் பாதிக்கப்படலாமென இராணுவ அதிகாரிகள் கவலை யுறுகின்றார்கள்.

# வான் வெளியில் முடிவடையாத கதை

## அது 1986-ம் வருடம்....

சோவியத் யூனியன் 'மிர்' (Mir) என்ற பெயரில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைத்து வான்வெளிக்கு அனுப்பியது. அப்போதிலிருந்தே முந்நூற்று ஐம்பது கிலோ மீட்டர் உயரத்தில் ஒரு நாளைக்கு பதினாறு தடவை பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. 'மிர்'!

சாதாரணமாய் பன்னிரண்டு விண்வெளி வீரர்கள் இருக்கக் கூடிய அந்தப் பரிசோதனைக் கலத்தில் இப்போது இருப்பவர்கள் இரண்டே பேர்! அவர்களும் விபரீதமான ஒரு சூழ்நிலையில் திகிலடித்துப் போயிருக்கிறார்கள்.

செர்ஜி கிரிகலேவ் கதைதான் அதில் ரொம்ப பரிதாபம். நாற்பது நாட்கள் மட்டும் இருந்துவிட்டுத் திரும்புகிற எண்ணத்தில் தான் வான்வெளிக்குப்போனார் கிரிகலேவ். அந்தச் சமயத்தில் தான் 'மிர்' மெள்ள பழுதாகத் தொடங்கியது. வான் வெளி ஆராய்ச்சிகள் தவிர, கலத்தில் உள்ள கோளாறுகளையும் கிரிகலேவுக்குச் சரிப்படுத்தத்தெரியும். அதனால் அவரை அங்கேயே நிறுத்தி வைத்துக் கொண்டார்கள். ஒரு கட்டத்தில் கோளாறு அதிகமானபோது, அவரது துணைக்கு அலெக்சாண்டர் வோல்காவ் என்பவரை மட்டும் விட்டுவிட்டு, மற்ற எல்லோரும் பூமிக்குத் திரும்பிவிட்டார்கள்.

எவ்வளவோ முயன்று பார்த்தார் கிரிகலேவ்... ஆனால், 'மிர்' மேலும் மேலும் கட்டுப்பாடு இழந்து கொண்டே வந்தது. "இதை உடனே சரிப்படுத்த முடியாது உள்ளே இருக்கிற இருவரும் கலத்தைக் கைவிட்டு உடனே பூமிக்குத் திரும்பிவிடுவது நல்லது" என்று சோவியத் அறிவியலாளர் சொல்லத் தொடங்கினார்கள். அப்படிச் செய்து, உள்ளே இருக்கிற இரண்டுபேரை பூமிக்குக் கூட்டிவர, தனியாக ஒரு விண்கலத்தைச் செலுத்த வேண்டும். அதற்கு பெருமளவில் செலவாகும்!

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் சோவியத் ஒன்றியம் பல துண்டுகளாகச் சிதறி, தனித்தனி நாடுகளாகிவிட்டது.

அந்த வரலாற்றுப் புகழ் பெற்ற குழப்பத்தில் வான்கலம் பற்றியும், அதில் உள்ள இரண்டு பேரைப் பற்றியும் எல்லோருமே சில நாட்கள் மறந்தே விட்டார்கள். வான்கலத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் வீரர்கள் இருவருக்கும் சோவியத் ஒன்றியத்திற்கு நேர்ந்த கதி பற்றி அரைகுறையாகத் தகவல்கள் போய்ச் சேர்ந்தபோது அவர்கள் பயம் மேலும் கூடியது. அவர்களை மேலே அனுப்பிய (சோவியத்) நாடே இப்போது இல்லை!

தொடர்ந்து ஒன்பது திங்கள் வான்வெளியிலேயே இருந்ததால் கிரிகலேவ் மனரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தார். இப்போது உடல் ரீதியாகவும் மோசமான நிலைக்குப் போய்விட்டார்.

"அவரை உடனடியாக பூமிக்குக் கொண்டுவந்து சிகிச்சை தரவேண்டியது மிக அவசியம்" என்று பல ருசிய மருத்துவர்கள் பதட்டத்தோடு கருத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பூமியில் நடக்கிற இந்தக் குழப்பம் பற்றியெல்லாம் எதுவும் தெரியாமல் "ஏன் தன்னை யாரும் வந்து கூட்டிச் செல்லவில்லை" என்று யோசித்தபடி பூமியைச் சுற்றிக்கொண்டே இருக்கிறார் கிரிகலேவ்.

— மௌர்யா.

# கோடீஸ்வரர்கள் வரிசையில் எதிர்பாராத வெற்றி

ஆசியாக் கண்டத்திலுள்ள வர்த்தக முதலீட்டாளர்கள் எல்லோரும் ஈஸ்வர் நாகப்பன் பக்கம் இன்று தங்கள் பார்வையைச் செலுத்துகிறார்கள். யார் இந்த நாகப்பன். 1985 ம் ஆண்டு கோலாலம்பூரில் முன்னுக்கு வரவேண்டும் என்ற அவாவில் துடிதுடித்துக் கொண்டிருக்கும் ஒரு இளம் சட்டத்தரணி தான் இந்த நாகப்பன். இன்று தென்கிழக்கு ஆசியாவின் முடிசூடா சொக்கலேட் மன்னன். மலேசியாவிலுள்ள கொக்கோத் தோட்டங்களின் உரிமையாளன். அத்துடன் ஆசியாக் கண்டத்திலுள்ள கரும்புச் சாகுபடிசெய்யும் தோட்டங்களினதும், வியாபார நிலையங்களினதும் தன்நிகரில்லா உரிமையாளன். இவர் வான் கவுட்டன் (Van Houten) நெஸ்ரில் (Nestle) ஆகிய கம்பனிகளுக்காக சொக்கலேட் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார். அத்துடன் பர்ஸ்கின் (Baskin) றொபின்சு (Robbins) ஐஸ்கிறீமிற்கும், தன்னுடைய கன்டோசு (Kandos) சொக்கலேட்டுக்கும் விற்பனை முகவராக விளங்குகின்றார். அவருடைய கூட்டு வியாபார தொழிலகம் இன்று சிங்கப்பூரிலுள்ள லா - சொக்கலேட்டியர் (Le- chocolatier) என்ற தொடர் வியாபார நிலையங்களையும், அவுஸ்திரேலியா, கொங்கொங் ஆகிய இடங்களிலுள்ள விற்பனை, விநியோக நிலையங்களையும் உள்ளடக்கியுள்ளது. இத்தொழிலகத்தின் வருட விற்பனை பத்துக்கோடி டாலருக்கு மேலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளியில் பிறந்த இந்த 42 வயதினர் புதுப் புதுச் சந்தைகளில் தனது பார்வையைச் செலுத்துகிறார். நல்லரக உணவுகளை விற்பனை செய்வதற்காக பிறநாடுகளில் உள்ள சந்தைகளில் தனது பார்வையைச் செலுத்துகிறார். சிங்கப்பூரில் தனது உத்திகள் வருடக்கணக்கில் பயனளித்ததால், தற்போது மலேசியாவில் வான் கவுட்டனுக்காக உற்பத்தியைத் தொடங்கியுள்ளார். மலேசியாவில் தனது முன்னாள் எதிரியை முறியடித்து வியாபாரத்தைக் கைப்பற்றியுள்ளார். கன்டோஸ் கம்பனியின் 15% வீத முதலீட்டுடன், அவர் அந்தநாட்டிலுள்ள சொக்கலேட் சந்தையின் முதலீட்டில் அரைவாசியைக் கைப்பற்ற உத்தேசித்துள்ளார்.

இந்தோனேசியாவில் சுமத்திரா தீவிலுள்ள மெடன் (medon) என்ற இடத்தில் 120 லட்சம் டொலரை கொக்கோ பயிர்ச்

செய்கைக்கும், பதப்படுத்தலுக்குமாக முதலீடு செய்துள்ளார். ஆங்கே தொழில் ஊக்குவிப்புக்களையும், பெரிய அளவில் வர்த்தகப் பெருக்கங்களையும் மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளார். ஆனால் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் முன்னேற்றத் தொழிற்பாடுகளை வைத்திருக்க உத்தேசித்துள்ளார். சிறுபானங்களிலும் சிற்றுண்டி வர்த்தகங்களிலும் எனக்கு விருப்பம் உண்டு என்று கூறுகின்றார். ஆனால் அவருடைய 3000 கெக்ரர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைவிருத்திக்கு பெரிய அளவில் எந்த ஒரு திட்டமும் வகுக்கப்படவில்லை. சொக்கலேட் உற்பத்தி, விநியோகம், சில்லறை வியாபாரம் ஆகியவற்றில் கூடிய பண வகுல் உண்டு என்கிறார்.

முன்னேற்றப்பாதையில் வீறுநடைபோடும் ஆசியாவில் சிற்றுண்டிவகைகளுக்கும், சொக்கலேட் வகைகளுக்கும் தேவைகள் அதிகரிக்கும் என்கிறார் இந்த மலேசியஇந்திய அரசியல்வாதியின் மகனான ஈஸ்வர். கிழக்காசியாவின் 4% -8% வீத வருடாந்தப் பொருளாதார வளர்ச்சியிலும் பார்க்க, மதிப்புள்ள சாப்பாட்டு வகைகளின் விற்பனை கூடுதலாக உள்ளது. சுவெற்செலாந்தின் நெஸ்ரில் பிரான்சின் பி. எஸ். என்., காட்பறி சுவெப்ஸ் ஆகிய கம்பனிகள் மற்ற இடங்களை விட இங்கே தான் முதலீடுகளை ஊக்குவிக்கின்றன. சிற்றுண்டிவகைகள், விலையுயர்ந்த சாப்பாட்டுப் பொதிகள் ஆகியவற்றில் முதலீடு செய்வது தலைசிறந்தது என்று கூறும் ஈஸ்வர், தரம் எங்கே உள்ளதோ அங்கே மக்கள் பணத்தை அள்ளி வீசுவார்கள் என்றும் கூறுகின்றார்.


இனிமையாகப் பேசும் சுபாவமுடைய ஈஸ்வர் சொக்கலேட் வர்த்தகத்துறைக்குள் தற்செயலாக வந்தவர். 1980 களில் லண்டனிலுள்ள ஆர்புத்நொட் லதாம் என்ற கம்பனிக்கு வர்த்தக வங்கியாளராகக் கடமையாற்றும் பொழுது சிறிலங்காவின் உபாலி விஜயவர்த்தனாவைச் சந்தித்தார். உபாலி சிறிலங்காவின் சொக்கலேட் வர்த்தகத்தில் முக்கிய புள்ளி உபாலியின் வர்த்தக பேரரசு ஒரு காலத்தில் தென்கிழக்காசியாவை உள்ளடக்கி இருந்தது 1947ல் இவர் லண்டனிலுள்ள கிறான்ட் சென்றல் முதலீட்டுக் கம்பனியை (Arbuthnot) ஆர்புத்நொட்டிடமிருந்து பெரும் எதிர்ப்பின் மத்தியில் கைப்பற்றினார். ஒரு ஆண்டின் பின் உபாலியின் தேயிலை றப்பர் தோட்டங்கள் சிறிலங்கா அரசினால் எடுக்கப்பட்டன. நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்த உபாலி, வழக்கு இணக்கமாகத் தீர்க்கப்படு முன்னர் 19₀3ல் விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டார்.

நட்ட ஈடு ஒன்று மாத்திரம் வழங்கப்படாமல், மற்றைய மூலதனங்கள் யாவற்றையும் இழந்து பெறுமதியற்ற நிலையில் கிறாண்ட் மத்திய முதலீட்டுக் கம்பனி இருந்தது. சூதில் பணத்தை இடுவது போல் ஈஸ்வர் இக்கம்பனியை வாங்கினார். 1985 ம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கம் நட்டஈடு கொடுக்கச் சம்மதித்தது ஓர் இரவு சிறிலங்காவிற்குப் பறந்து வந்து, மறுநாட் காலை 34 லட்சம் டாலர்களுக்கான காசோலையை வாங்கிக் கொண்டு சில மணித்தியாலங்களில் திரும்பினர். அடுத்த வருடம் கொக்கோ, தென்னை, ஆகியவை பயிரிடப்படும் சிறு தோட்டங்களை வாங்கினார். அத்துடன் ஒரு காலத்தில் உபாலியின் சொத்தாகவிருந்து நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த மலேசியாவிலுள்ள சொக்கலேட் தொழிற்சாலையையும் வாங்கினார். ''அன்று நான் எங்கே செல்கிறேன் என்று நினைக்காமல் இவற்றைச் செய்தேன்'' என்று கூறுகிறார் ஈஸ்வர். ஆனால் இன்று அத்தொழிற்சாலையின் வருட விற்பனை 90 லட்சம் டாலராகும் முதலீடுகளைப் புகுத்துவது ''கிறான்ட் சென்றல்'' கம்பனியை இந்தப் பகுதி உணவு உற்பத்தித் தொடர் நிலையமாக மாற்றுவதற்கான முதல் படி என்று கூறுகிறார். ''புறுடென்சியல்'' திருவாக இயக்குனர் திமோத்திசியா அவர்கள் இது சரியானவர்கள் நடாத்தும் ஒரு சரியான வர்த்தக நிறுவனம் எனக் கூறுகின்றார். கொன்சலிடேற்றட் நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்ரீவ் சிமோல் அவர்கள். தன்னுடைய எல்லா முதலீடுகளையும் ஒருங்கிணைத்து அவற்றிற்கு ஒரு தொடர் சில்லறை விற்பனை நிலையங்களை உண்டாக்க உத்தேசித்துள்ளார் ஈஸ்வர். அதேவேளை தன்னுடைய 'கன்டோஸ்' விற்பனையை விருத்தி செய்வதுடன் மாற்றுக் கம்பனிகளுடனும் பேரம் பேசி வருகின்றார். பெரிய முதலீடுகளிலிருந்து ஒதுங்கிக்கொண்டு தற்போது தன்னிடம் உள்ளனவற்றை நன்றாக நடாத்தப் பார்த்துக் கொள்கிறார். ''செயல், தரம் இவைகள் தான் முக்கியம்,'' என்கிறார் இந்த சொக்கலேட் மன்னர் ஈஸ்வர்.

ஏசியாவீக் - 17. 1 . 92

# பர்மிய உள்நாட்டுப்போர்

-ஜேம்ஸ் வால்ஷ்- (ரைம்ஸ் 17-2-92)




இராணுவ ஆட்சியாளர் கரந்தடிப்படையினருக்கு எதிரான போரை தீவிரப்படுத்தி உள்ளனர். இந்நடவடிக்கையினால் எல்லைகளில்அமைதியின்மை ஏற்படுகின்றது.

காரென் (Karen) கரந்தடிப்படையினர் அந்தக் குன்றை ''சிலீப்பிங் டோக் றொக்'' (Sleeping Dog Rock) என்றழைக்கின்றனர். அதாவது தூங்கும் நாய்க்குன்று எனப்பொருள்படும்.

ஆனால் பர்மிய இராணுவ ஆட்சியாளர்கள் இக் குன்றை நிம்மதியாக இருக்கவிட விரும்பவில்லை. தாய்லாந்து (Thailand) எல்லையிலுள்ள இந்த மலையின் மேற்குப்பக்கமாக ஏறி இம்மலையைக் கைப்பற்றும் நோக்குடன் அரச படையினர் சென்றவார முற்பகுதியில் நடவடிக்கையில் இறங்கினர். காரென் சுதந்திரப் படையினரின் தலைமையகம் மானெப்புளோ (Manerplaw)வில் உள்ளது. இந்த மலை உச்சியைக் கைப்பற்றினால் காரென்களின் தலைமையகத்துக்குப் போகும் வழி சுலபமாகிவிடும். இதனால் காரென் சுதந்திரப் படையினரையும் அவர்களைப் போன்ற பிற கிளர்ச்சி அமைப்புகளையும் அழிக்க முடியும். இக்கிளர்ச்சியாளர்கள் எல்லோரும் ஆசியாவிலுள்ள அடக்குமுறை ஆட்சியாளர்களின் அரசுகளில் ஒன்றான பர்மிய அரசை வீழ்த்துவதைத் தங்கள் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அரச படைகளின் முன்னேற்றம் தடைப்பட்ட போதும் றங்கூன் அரசின் தாக்குதல்கள் பர்மாவில் உள்ள கிளர்ச்சியாளர்களை கடுமையாகப் பாதித்துள்ளது. இதனால் புத்ததர்மத்தைக் கடைப்பிடிக்கும் நாட்டிலிருந்து ஏதிலிகள் பர்மாவின் அயல்நாடுகளுக்குத் தப்பி ஓடுகின்றனர். பர்மிய அரசின் கெடுபிடிகள் எல்லைக்கப்பாலும் பரவுவதால் அயல் நாடுகள் பயமடைகின்றன.

சென்ற திங்கள் பர்மிய இராணுவ ஆட்சிக்குழுவினர், கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களை முற்றாக முறியடிக்கும் நோக்குடன் புதியரக ஆயுதங்களுடன் படைப்பலத்தையும் கூட்டியுள்ளனர். கிழக்கில் மானெப்புளோ பக்கமாக தாக்கும் அதேவேளையில் வடக்கில் நாகர் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளிலும் இரண்டு பர்மிய பட்டாலியன் படை அணியைச் சேர்ந்த படையினர் தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதன் காரணமாக 1600 நாகர் பழங்குடி மலைவாழ் மக்கள் ஏதிலிகளாகி இந்தியாவுக்குள் புகுந்துள்ளனர். மேற்கில் கடற்கரைப் பிரதேசமான அரக்கனிலிருந்து (Arakan) 75,000 றொகின்யா (Rohingya) முஸ்லிம்கள் 55 00 அரசபடையினரின் கொடுமைகளால் ஏதிலிகளாக்கப்பட்டு பங்களாதேசத்திற்குள் சென்றுள்ளனர். கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை அத்துடன் மதத்துவேசம் ஆகியவற்றில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர் என்று ஏதிலிகள் கூறுகின்றனர்.

இராணுவம் திட்டமிட்டு நாட்டில் இனத்துவேசத்தைப் பரப்புகின்றது என்கிறார் பர்மிய இனவாரியான கிளர்ச்சிகளைப் பற்றி நன்கறிந்த பிரித்தானிய நிபுணரான மார்ட்டின் சிமித் (Martin Smith) அவர்கள். 1988 ல் நடந்த அதிரடிப் புரட்சியின்

பின் இராணுவத்தின் புலனாய்வுத்துறைத் தலைவர் மேஜர் ஜெனரல் கின் நியூன்ட் (Khin Nyunt), இரண்டு ஆண்டில் கிளர்ச்சியாளர்களை ஒழித்துக்கட்டுவேன் என்று அறை கூவல் விடுத்தார். சென்ற ஆண்டு அரசபடையினருக்கு சிறு முன்னேற்றங் கள் காணப்பட்ட போதிலும், அரச படையினருக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. இத் தாக்குதல் நடவடிக்கைகளில் காரென் கிளர்ச்சியாளர்கள் முன்னணியில் திகழ்வதோடல்லாமல் பர்மாவின் மத்தியிலுள்ள ஐராவதி (Irrawady) ஆற்றின் கழிமுகப் பகுதியையும் தாக்கி னர். தங்கள் நாட்டை மியான்மார் (Myanmar) என அழைக் கும்படி கோரும் இந்தப் பர்மிய இராணுவத் தலைவர்கள் தங்க ளைச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் சபை (SLORC) எனக் கூறிக்கொள்கின்றனர். அத்துடன் தங்கள் எதிர்ப்பாளர்களை பழிவாங்கும் நோக்குடன் தங்கள் திட்டங் களைத் தீட்டுகின்றனர். இந்த அரசு தங்களை மதிக்குமாறு கோருகின்றது. கிளர்ச்சியாளர்களை அடக்குவதன் மூலம் இந்த மதிப்பைப் பெற நினைக்கின்றது என்கிறார். றங்கூனிலிருந்து முன்னாள் அமெரிக்கத் தூதுவர் பேர்ட்டன் லெவின் அவர்கள்.

இவர்களால் அயல்நாடுகளிலிருந்து மதிப்பைப் பெறமுடியாமல் உள்ளது ஒரு பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள ஆயுதங்கள், தாங்கிகள், கண்காணிப்புப் படகுகள், ஜெற்போர் வானூர்திகள் ஆகியவற்றைச் சீனா றங்கூனுக்குக் கொடுத்துதவுகின்றது. இந் தச் சீன பர்மிய உறவை இந்தியா சந்தேகக் கண்ணுடன் பார்க் கின்றது இத்தருணத்தில் பர்மிய இராணுவத்தினர் பங்களாதேச நாட்டின் எல்லைப்புறக் காவல் அரணைத் தாக்கி ஆயுதங்க ளைக் கவர்ந்து சென்றதோடல்லாமல், பங்களாதேசத்தின் இரா ணுவ வீரர் ஒருவரையும் கொன்றுள்ளனர். இது தற்செயலாக அடையாளங்காண முடியாத சூழ்நிலையில் ஏற்பட்ட சம்பவம் என்று பர்மிய இராணுவ ஆட்சிபீடம் கூறியபோதிலும், பங்களா தேச அரசு இன்னும் இப்படி எத்தனை நடவடிக்கைகள் நடக் கப் போகின்றது என அங்கலாய்க்கின்றது. றங்கூன் அரசு தனது தென்கிழக்காசிய அயலவர்களுடன் நல்லுறவைப் பேணி வந்தா லும் தற்போது எல்லைமீறி நடக்கும் நடவடிக்கைகளினால் பர் மாவின் மேற்குப் பக்கத்தில் உள்ள உபகண்டத்தில் ஏதிலிகளின் வருகையினால் பதட்டம் ஏற்படுகின்றது

சென்றவாரம் பர்மிய இராணுவத்தினர் காரென் கிளர்ச்சி களின் முக்கியமான இரண்டு முகாம்களைக் கைப்பற்றியதோடல் லாமல் லோங்காய் (Longkai) இலுள்ள நாகாகிளர்ச்சியாளர்களின்

இராணுவத்தலைமையகத்தையும் கைப்பற்றியுள்ளனர். இப்படி இராணுவம் முன்னேறியிருந்த வேளையில் இந்திய ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன் அவர்களிடம் புதிய பர்மியத் தூதுவர் தனது பதவிப்பத்திரங்களைக் கையளித்தபோது, பர்மாவின் மனித உரிமை மீறல்களையிட்டு கவலை தெரிவித்தார். அத்துடன் பர்மாவில் விரைவாக சனநாயகம் வளர சுமுகமான சூழ்நிலை உருவாகவேண்டுமென்று இந்தியா விரும்புவதாகத் தெரிவித்தார். ஜனாதிபதி வெங்கட்ராமன் மேலும் ஒரு படி போய் நோபல்பரிசுபெற்ற திருமதி ஆங்சான் சூ கீ யின் தனித்துவமான தலைமைத்துவத்துக்கும், அவருக்கு அமைதிவழிப் போராட்டத்தில் உள்ள நம்பிக்கைக்கும் புகழாரம் சூட்டினார் 1988 ல் ஜனநாயகம் பர்மாவில் வளரவேண்டுமென்ற மக்களின் எழுச்சி ஆர்ப்பாட்டங்களுக்கு சூ. கீ. தலைமை வகித்துள்ளார் இந்த ஆர்ப்பாட்டங்களை அடக்க இராணுவ ஆட்சி எடுத்த தீவிர நடவடிக்கைகளின்போது 3000 பொதுமக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். 1989 ம் ஆண்டு தொடக்கம் திருமதி சூ. கி. வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவ ஆட்சியாளர்கள் தற்போது தங்கள் கவனத்தை சிறுபான்மை இனத்தவர்கள் பக்கம் திசை திருப்பி உள்ளனர். பர்மாவில் சிறுபான்மை இனத்தவர்களுக்கெதிரான கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுவது காலம் காலமாக நடந்துவரும் நிகழ்ச்சியாகும். நீ. வின் (Newin) பர்மாவின் சர்வாதிகாரியாக 1962 ல் இருந்த பொழுது 300 000 இந்தியர்களை ஏதிலிகளாக இந்தியாவுக்குக் குடிபெயரச் செய்தார். அத்துடன் சிறுபான்மையினரான சீனர்களுக்கெதிராகக் கலவரங்களை உருவாக்குவதில் ஈடுபட்டார். அரக்கனில் 1978 ம் ஆண்டு நடந்த அடக்குமுறைகளினால் 300,000 முஸ்லீம்கள் பங்களாதேசத்திற்கு ஏதிலிகளாகச் சென்றனர். இந்நடவடிக்கை மீண்டும் முனைப்புடன் தொடங்கப் போகின்றது என்பது புலனாகின்றது வரலாற்றுப் புகழ் பெற்ற அரக்கன் பண்டைய காலத்தில் தனி அரசாக இருந்தது. புத்தசமயத்தவர்கள் பெரும்பான்மையினராகவுள்ள பர்மாவில் அரக்கன் மாநிலம் ஒன்றில் தான் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். சென்ற டிசம்பரில் சிறுகச் சிறுக பங்களாதேச நாட்டுக்கு வந்த அரக்கன் முஸ்லிம் ஏதிலிகள் தற்போது வாரத்துக்கு 3000 ஆக உயர்ந்துள்ளனர். இவர்களின் வருகை ஏற்கனவே வியாதியினால் பீடிக்கப்பட்டுள்ள கோக்சுபசார் (Cox's Bazaar), பண்டர்பன் (Bandarban) ஏதிலி முகாம்களை நிரப்பி வழியச் செய்கின்றது.

ஏதிலிகளின் கதைகளைக்கேட்டு கண்ணீர் விடாதவர்கள் யாருமில்லை. தனது கண்முன்னே மகளையும், மனைவியையும் இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கினார்கள் என்கின்றார். எல்லைப்புறநகரமான ரெக்நாவ் என்ற இடத்தில் இருந்து ஏதிலியாக வந்த 55 வயதான அமிர் குசேன் இது மாத்திரமின்றி எனது 16 வயது மகனைத் தங்கள் முகாமுக்குக் கொண்டு சென்றனர். அவன் திரும்பி வரவேயில்லை என்று அவர் மேலும் கூறினார். இப்படிப்பட்ட சம்பவங்களை முஸ்லிம் பெண்களும் கூறுகின்றனர். பர்மிய இராணுவத்தினர் எட்டுப் பண்டகசாலைகளில் 2000 றொகிங்யா முஸ்லிம் இளைஞர்களை அடைத்து வைத்தபோது 700 பேர் மூச்சுத்திணறி இறந்துள்ளனர் என்று பங்களாதேச செய்தித்தாள் ஒன்று தெரிவிக்கின்றது.

இந்த வன்செயல்கள் காரணமாக பர்மிய - பங்களாதேச உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதுடன், டாக்காவையும் இது குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது உலகில் ஏதிலிகளாலும், மக்கள்தொகையாலும், வறுமையினாலும் அல்லலுற்றிருக்கும் பங்களதேசும் இந்த அதிகளவிலான ஏதிலிகளை வைத்துப் பேணமுடியாமல் திணறுகின்றது 1978ம் ஆண்டு வெள்ளத்தினால் ஏற்பட்ட அழிவுகளினால் ஏதிலிகளாக்கப்பட்ட மக்கள் தொகையினரிலும் பார்க்க இப்பொழுது பர்மாவிலிருந்து வரும் ஏதிலிகளின் தொகை அதிகரிக்கும் போல் தோன்றுகின்றது முன்னர் பங்களாதேசத்தில் ஏதிலியாக இருந்து ஒரு ஆண்டின் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டவர் குசேன் ''இந்தமுறை என்னைத் திருப்பி அனுப்பமுற்பட்டால், நான் இங்கு பட்டினியால் சாகநேரிட்டாலும் அங்கு சென்று சாப் பொறியில் விழத்தயாரில்லை,'' என்கிறார் அவர் திரும்பி வரும் தனது பிரசைகளை ஏற்கத்தயார் என்று கூறும் பர்மிய அரசாங்கம், அதே வேளை நாட்டை விட்டு வெளியேறும் முஸ்லிம் மக்களின் அடையாள அட்டைகளைப் பறித்து அவர்கள் திரும்பிவந்து தமது குடியுரிமையை உறுதிப்படுத்த முடியாத நிலையை உருவாக்குகின்றது.

இந்த ஏதிலிகள் நாடற்ற நாடோடிகளா? டாக்கா நினைப்பது மாதிரி நடந்தால் அப்படி நேரமாட்டாது. ஏதிலிகளின் விருப்பத்திற்கு மாறாக அவர்களைத் திருப்பி அனுப்பமாட்டோம் என்கிறார் பங்காளதேச வெளியுறவு அமைச்சர் மொஸ்தாபிசூர் ரகுமான். ஆனால் இது நீண்டகாலப் பிரச்சினையாக உருவாகிவிடும் என்ற காரணத்தால் ஐக்கிய நாடுகள் சபை ஏதிலிகள் முகாம்களை அமைப்பதைத் தடுத்துள்ளனர் இதனால் அனேகமான ஏதிலிகள் பாதுகாப்பற்ற வெட்டவெளியில் இருப்பதால்

அவர்கள் பஞ்சம், பசி, பட்டினி, குளிர் ஆகியவற்றால் இறக்க நேரிடுகின்றது.

பர்மாவின் வடமேற்கில் வசிக்கும் நாகா இனப் பழங்குடி மக்களும் இப்படி ஈவிரக்கமின்றி துன்புறுத்தப்படுகின்றனர். இதுவரை காலம் ஏறத்தாழ 500பேரைக்கொண்ட நாகா கிளர்ச்சியாளர்களை தங்கள் மலைப் பிரதேசத்தில் செயல்படப் பார்த்துக்கொண்டு அக்கறை இல்லாமல் பர்மிய இராணுவம் இருந்தது. இந்த நாகர்கள் இங்கிருந்துகொண்டு இந்திய இராணு வத்தினருக்கெதிராக நாகலாந்தில் தமது தாக்குதல் நடவடிக்கை களை மேற்கொண்டனர். ஆனால் கடந்த டிசெம்பர் திங்களில் இரும் பெரும் பர்மியப்படைப்பிரிவு துவக்குகள் பூட்டிய உலங்கு வானூர்தி சகிதம் மலைச் சரிவுகளில் தனது நடவடிக்கையை முடுக்கிவிட்டது. இந்நடவடிக்கையின் போது நாகா கிளர்ச்சி யாளர்களின் இருமுகாம்களைக் கைப்பற்றியதோடு அவர்களின் தலைமையகமான லோங்காய்மீது எறிகணைத்தாக்குதல்களையும் நடத்தியது. ஜனவரி 31ம் திகதி லோங்காயைக் கைப்பற்றிய தோடல்லாமல் நாகக்கிளர்ச்சியாளர்களின் அரசியல் தலைமை யகமான சியாங் நோக்னு (Chiang Noknu) வை இறுதியாகத் தாக்கத் தொடங்கியுள்ளது.

இந்நடவடிக்கைகள் வடக்கிலுள்ள பலம் வாய்ந்த கச்சின் (Kachin) புரட்சி இராணுவத்துடன் மோதுவதற்கு எடுக்கப்பட்ட தென இந்திய இராணுவ அதிகாரிகள் நம்புகின்றனர். இந் நடவடிக்கை மூலம் இரத்தினக்கல், காட்டு மரங்கள் அடங்கிய பிரதேசங்களைத் தங்கள் கைவசம் கொண்டு வர பர்மிய இரா ணுவம் நினைக்கின்றது. பர்மிய இராணுவத்தினர் அரக்கனில் மேற்கொண்ட ஈவிரக்கமற்ற செயல்களைப் போல் இங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இப்படிப்பட்ட சம்பவங் களையே நாகா ஏதிலிகளும் கூறுகின்றனர்.


எல்லாப் பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகள் மேற் கொள்வது இராணுவ ரீதியில் நல்ல பலனை அளிக்காது. ஆனால் இப்படி நடவடிக்கை எடுப்பதனால் வெவ்வேறு பகுதிகளிலுள்ள இராணுவத் தளபதிகளை சுறுசுறுப்பாக இயங்கச் செய்யலாம் என்று எண்ணுகின்றனர். அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவிலிருந்தும் இந்நடவடிக்கைகள் மூலம் இராணுவத் தளபதிகளின் கவனத்தைத் திசைதிருப்பலாம். தற் பொழுது பர்மாவில் அதிருப்தி அதிகமாக நிலவுகின்றது, என் கின்றார். புதுடில்லியில் வசிக்கும் சனநாயகவாதியும் ஏதிலியு

மான ரீன் சுவே என்பவர். இந்திய அரசாங்கம் இது விடயத்தில் கவலையடைந்ததாகத் தெரியவில்லை. இந்தப் பர்மிய நடவடிக்கையினால் அசாம் (Assam) கிளர்ச்சியாளர்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் நாகர்களிடம் இருந்து கிடைப்பது தடைப்பட்டுள்ளன என்று வடக்கிலுள்ள இந்திய இராணுவத் தளபதிகள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இந்தியாவின் இபபடிப்பட்ட இரட்டை வேடம் பர்மாவின் ஆட்சியாளர்களுக்கு உதவுவதோடு பர்மிய மக்களின் நிலையை கவலைக்கிடமாக்கியுள்ளது. சூ கீயின் ஆதரவாளர்கள் தார்மீக ஆதரவு மூலம் சனநாயகத்தைக் கொண்டுவர உத்தேசிக்கின்றனர். இராணுவ ஆட்சியாளர்களின் தடை காரணமாக 1990 ம் ஆண்டு தங்களுக்குக் கிடைத்த சனநாயக ரீதியான வெற்றியை அனுபவிக்கமுடியாதவர்களுக்கு தார்மீக ஆதரவுமட்டும் போதாது. மானெப்புளோ பர்மிய இராணுவ ஆட்சியாளரின் கைகளில் வீழ்ச்சியடைந்ததால் சூ கீ அவர்களின் நாடுகடந்த அரசாங்கமும் மறைந்துவிடும். இது உலகத்தின் கவனத்தை ஈர்க்காமலேயே நடந்துவிடக்கூடும்.

# எல்லோரையும் கொல்லவேண்டும்

-ஸ்ரீவ். லீ. வைன- (நியூஸ்வீக் 24 - 2 - 1992)




சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னர் நாகொர்னோ-காராபாக் (Nagorno Karabakh) சமர் உக்கிரமடைகிறது. ஆர்மினியரோ - அஜர்பைஜானியரோ விட்டுக்கொடுக்கத் தயாரில்லை.

மாலிபெலி (Malibeli) யின் சண்டை முடிவடைந்த மறு நாட்காலை கொள்ளைக் கும்பல்கள் நாகொர்னோ காராபாக் கிராமத்துக்கு தங்கள் அயலவர்களாக முன்பிருந்தவர்கள் விட்டுச் சென்ற ஏதாவது விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளை யடிக்கும் நோக்கில் வந்திறங்கினர். இருநாட்கள் நடந்த சண்டை யில் ஆர்மேனிய இனப்படைவீரர்கள் அக்கிராமத்திலிருந்த அநேக மான வீடுகளை எரித்துவிட்டனர். அப்படியிருந்தும் இந்த அஜர் பைஜான் மக்கள் விட்டுச்சென்ற வீடுகளிலிருந்து சில பொருட் கள் கிடைத்தன. ஒரு அதிஷ்டசாலியான சுத்திகரிப்புத் தொழி லாளிக்கு நான்கு சாப்பாட்டு அறை நாற்காலிகள் கிடைத்தன. இன்னொருவருக்கு ஒரு கோழிக்குஞ்சு கிடைத்தது. 42 வயதான

மீசா அவற்றேசியன் நல்ல நிலையில் உள்ள இருமெத்தைகளைக் கைப்பற்றினார். சிறுநேரம் ஓய்வெடுக்கும் போது அவர் நாங்கள் செய்வது சரி என நினைக்கிறீரா? என்று தன்னைத் தானே வின வினார் விரைவாகவும் அழுத்தமாகவும் தனது கேள்விக்குத் தானே பதிலிறுத்தார் மற்றவர்கள் செய்வதை நாமும் செய் கின்றோம் என்றவர், அஜர்பைஜானியர் இதைத்தான் எப் போதும் செய்தார்கள். ஆகையால் நாம் செய்வது சரி என்றார்.

ஆர்மேனியர்களும், அஜர்பைஜானியர்களும் பல பிரச்சினை களைத் தங்களுக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. முன் னாள் சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகளான ஆர்மேனியாவும், அஜர்பைஜானும நான்கு வருடங்களாக இனரீதியான வன்முறை களில் ஈடுபட்டு வருகின்றன. இந்த இனத்துவேச வனமுறைகளில் நூற்றுக்கணக்கில் அஜர்பைஜான் முஸ்லிம்களும், ஆர்மேனியக் கிறிஸ்தவர்களும் இறந்துள்ளனர் அத்துடன் இவ்வன்முறைகள் ஆயிரக்கணக்கில் இருநாட்டு மக்களையும் இடம்பெயர வைத்துள் ளது. அஜர்பைஜானால் முற்றுகைச் சூழப்பட்டுள்ள 1700 சதுர மைல் பரப்பைக் கொண்ட ந கொர்னோ காராபாக் பகுதியை அஜர்பைஜான் கைவிடவேண்டுமென்று ஆர்மேனியர்கள் வலியு றுத்துகின்றனர். (நாகொர்னோ காராபாக் பகுதிக்கும் ஆர்மேனி யாவுக்கும் அதிநெருங்கிய தூரம் ஏழுமைல்கள் ஆகும்) இந்த மலைப்பிரதேசத்தில் வாழும் 2 00,000 மக்களில் சுமார் 90% வீதமானவர்கள் ஆர்மேனிய மக்களாகும். ஆர்மேனியாவின் பிடி வாதமான கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் தனது கோரிக்கையை நிலைநாட்டும் வகையிலும் அஜர்பைஜான் தனது துருப்புக்களை நாகொர்னோ காராபாக்கிற்கு அனுப்பி வைத்துள்ளது. சென்ற திங்கள் நாகொர்னோ காராபாக் சுதந் திரப் பிரகடனம் செய்தது. இச்சுதந்திரப் பிரகடனத்தை இது வரை எந்தவெளிநாடும் ஏற்கவில்லை. ஆர்மேனியா கூட இந்தச் சுதந்திரப் பிரகடனத்தை ஏற்று அந்த நாட்டை ஏற்றுக்கொள்ள வில்லை.

ஆனால் ஆர்மேனியா தார்மீக ஆதரவையும், எவ்வளவு கொடுக்கின்றார் என்ற எண்ணிக்கை தெரியாத அளவு சகல விதமான பொருட்களையும் கொடுத்து அஜர்பைஜானுக்கு எதி ரான சண்டையை ஊக்குவிக்கிறது. தங்கள் நட்புநாடு தங்களுக் குத் துருப்புக்கள், ஆயுதங்கள், உணவு வகைகள் ஆகியவற்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் ஆனால் அவை போதாதிருப்பதாக வும் பிரிவினைவாதிகள் கூறுகின்றனர். அஜர்பைஜான் பீரங்கிப் படைப்பிரிவினர் மூன்று மாதங்களுக்கு முன் நாகொர்னோ காராபாக்கின் மலை உச்சியில் உள்ள தலைநகரமான ஷ்ரீபனா

கேட் (Stepanakert) மீது எறிகணைத்தாக்குதலை நடத்தினர். நவம்பர் மாதத்தில் நடத்திய எறிகணைத் தாக்குதலின் போது, எறிகணையொன்று ஆரம்பப்பாடசாலை ஒன்றின் நூலகத்தில் விழுந்து வெடித்தது. தற்போது அங்குள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக நடந்து வந்த எறிகணைத்தாக்குதலினால் ஸ்ரீபனாகேட் மருத்துவமனையின் மகப்பேற்றுப் பகுதி சேதமடைந்தது அதனால் மகப்பேற்றுப் பகுதி தற்காலிகமாகப் பாராளுமன்றக் கட்டிடத்தின் கீழ்ப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. நகரத்தின் முக்கிய மருத்துவமனை சென்ற திங்கள் ஆறு முறை எறிகணைத் தாக்குதல்களுக்கு உள்ளானது. மருத்துவ மனையின் சில பகுதிகள் சேதமடைந்த போதிலும் கட்டிடத்தின் சில பகுதிகள் இன்னும் பாவிக்கப்பட்டு வருகின்றன. எக்ஸ் றே (X - Ray), ஈ சி ஜீ (E C G) முதலிய அத்தியாவசிய சேவைகளுக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகின்றது. வெப்பநிலையில் வைத்திருக்கப்படவேண்டிய திரவ மருந்துவகைகளைப் பழுதுறாமல் வைத்திருப்பதற்கு அடுப்புக்களைப் பாவிக்கின்றனர்.

ஸ்ரீபனாகேட்டைச் சுற்றியுள்ள கிராமங்கள் அஜர்பைஜானுக்குச் சொந்தமானவை இக்கிராமங்களில் இருக்கும் அஜர்பைஜான் பீரங்கிப்படையினரின் எறிகணைகள் பலமுறை ஸ்ரீபனாகேட்டைத் தாக்கியுள்ளன. ஆகத்தூரத்திலுள்ள அஜர்பைஜானியரின் பீரங்கித்தளம் ஸ்ரீபனாகேட்டுக்குத் தெற்கே 1500 யார் தொலைவுக்கு அப்பால உள்ள மலைக்கூம்பிலுள்ள சூசா (Shusha) என்ற நகரத்தில் உள்ளது. மாலிபெலி (Malibeli) யிலிருந்து எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதால் அக்கிராமம் அழிக்கப்பட்டது என்கிறார்கள். பிரிவினைவாதிகள், வீடுகளை எரிப்பது நாகரீகமற்ற செயலாக இருக்கலாம். ஆனால் அங்கே பீரங்கித்தளம் இருக்கும்போது அதனை அழித்தே ஆகவேண்டும் என்கிறார் ஆர்மேனியாவின் உதவிப்பாதுகாப்பு அமைச்சரும் நாகர்னோ காரபாக்கின் பிரதான இராணுவ ஆலோசகருமான சேர்க் சார்கிசியன் (Serg Sarkissian) அவர்கள், எறிகணைத் தாக்குதல்களை நிறுத்த எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்தன சூசா மலைத்தொடரியிலுள்ள கேர்கஜான் (Kerkyan) முதலாவதாகவும், மாலிபெலி இரண்டாவதாகவும்பிரிவினைவாதிகளால் கைப்பற்றப்பட்டது. எறிகணைத் தாக்குதல்களை நிறுத்துவார்கள் என்ற எண்ணத்தில் தாங்கள் கைப்பற்றிய கிராமங்கள் அனைத்தையும் பிரிவினைவாதிகள் எரித்தனர். ஆனால் மற்றைய பீரங்கித்தளங்களிலிருந்து எறிகணைத் தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. தங்களால் பிடிக்கப்பட்ட கிராமங்

களைப் பிரிவினைவாதிகள் எரிப்பதைவிட்டு அஜர்பைஜானியர்கள் அக்கறை காட்டாது மேலும் எறிகணைத் தாக்குதல்களில் தீவிரம் காட்டினர்.

## பசியால் வாடும் நாய்கள்

இரவு நேரம் வந்தவுடன் தலைநகரிலுள்ள அநேகமான மக்கள் எறிகணைத் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாக்கும் வகையில் நிலவறைகளுக்குள் இருக்கின்றனர். கிறேகறி (Gregori) யிலுள்ள என்லைற்னர் (Enlightner) வீதியில் இருக்கும் தொடர் மாடிக் கட்டிடத்தின் அடித்தளத்தில் இருக்கும் 50 அடி அகல முழுமை இடத்தில் பத்துக்குடும்பங்கள் வாழ்கின்றனர். எங்கள் சுதந்திரத்துக்காக எம் மக்களில் 30% வீதமானவரைப் பலி கொடுக்க நாம் தயார் எனப் பெருமையடிக்கின்றார் ஒரு குடியிருப்பாளர். அயலவர்கள் கூச்சலிட்டு அவருடைய பேச்சை மறுதலிக்கின்றனர். நாங்கள் சிறு தொகையினர் எங்களால் இழப்புக்களைத் தாங்கமுடியாது என்று அந்தக்குடியிருப்பாளரைத் திருத்துகிறாள் ஒரு பெண்மணி. அமைதியான இரவு நேரங்களில் ஒரு சில மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வருகின்றனர். வீதிகளில் அலைந்து திரியும் பசியால் வாடும் நாய்களுக்கு அவர்கள் பயப்படுகின்றார்கள். நகரத்துக் காவல்துறையினர் இந்த நாய்களை அழிப்பதாக உறுதி அளித்துள்ளனர். ஆனால் இரவில் தற்போது வீதிகள் நாய்களுக்குச் சொந்தமாகவுள்ளது.

பிரிவினைவாதிகளின் வாழ்க்கைக்கு இன்னல்களை ஏற்படுத்த அஜர்பைஜானியர்கள் வேறு வழிகளைக் கடைப்பிடிக்கின்றனர். சென்றமாத முதற்பகுதியிலிருந்து நகரத்துக்கு மின்சாரம் இல்லை. நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. நகரத்தில் எட்டுப் பொதுக்கிணறுகளில் இருந்து நீர் எடுத்துத் தங்கள் வாளிகளை நிரப்பச் சில வேளைகளில் மணித்தியாலங்களும் சிலவேளைகளில் நாட்களும் செல்கின்றன. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் வரத்து தடைப்பட்டுள்ளது. ஆனால் நாகொர்நோ காராபாக் மக்கள் உணவுத்தட்டுப்பாட்டைத் தாங்கக்கூடிய நிலையில் உள்ளனர். கடும் குளிர் காலங்களில் பனிக்கட்டி வீழ்வதனால் இப்பிரதேசத்திற்கும் வெளி இடங்களுக்குமிடையிலான போக்கு வரத்துக்கள் தடைப்படுவது வழக்கம் அதனால் அவர்கள் மே மாதம் வரையிலும் தங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களையும் மற்றும் பொருட்களையும் சேகரித்துவைப்பது வழக்கம்.

தற்பொழுது இந்தப்பகுதிக்கோ அல்லது இங்கிருந்து வெளி இடங்களுக்கோ செல்வதற்கு உலங்கு வானூர்திகளே பயன்படுத்

தப்பட்டு வருகின்றன. சண்டையும் காலநிலையும் எப்பொழுதும் சீரில்லாத நிலையில் நீடித்திருப்பதால் வானூர்திகள் பயணத்துக்கென ஒரு நிலையான கால அட்டவணையைக் கூடத் தயாரிக்க முடியாதுள்ளது. அஜர்பைஜானுக்குச் சொந்தமான இரண்டு உலங்கு வானூர்திகள் விழுந்து நொருங்கியுள்ளன. இவை சுட்டு வீழ்த்தப்பட்டன என அஜர்பைஜான் கூறிய போதும் ஆர்மேனியர்கள் இதை மறுக்கின்றனர். சென்ற வார முற் பகுதியில் நான்கு பிரிவினை வாதப் போராளிகள் தங்களுக்கு உதவுபவர்களின் உலங்கு வானூர்தியை எதிர்பார்த்துக்கொண்டு, அது இறங்கும் தளத்துக்கருகே காத்து நின்றனர். ஸ்ரீபனாகேட்டுக்கும் சுசாவுக்குமிடையேயுள்ள சோசௌசென் (Chochoeichen) என்ற கிராமத்தில் நடைபெற்ற தாக்குதலின் போது உயிர் நீத்த தமது நண்பனின் பூதவுடலை ஆர்மேனியாவின் தலைநகரமான யெறிவானுக்கு (Yerevan) எடுத்துச் செல்வதற்காகக் காத்திருந்தனர். உயிர்நீத்த அந்த நண்பனின் கடைசிப் பெயர் அவர்களுக்குத் தெரியாது. அவனது முதற் பெயர் ஒவிக் (Ovik) என்பதாகும். அவனைப் பார்த்தால் ஆசிய இனத்தவன் போன்று தோற்றமளித்தான். ஆதலால் போராளிகள் அவனைச் செல்லமாக உஸ்பெக் (Uzpek) என அழைப்பார்கள். அவனுக்குப் பெற்றோர்கள் இல்லை. ஆர்மேனியத் தலைநகரமான ஜெறிவானில் அவனுடைய சகோதரன் ஒருவன் இருக்கின்றான். அவனிடம் ஒவிக்கின் பூதவுடலைச் சேர்க்கப்போகிறார்கள் இது நடந்த மூன்று நாட்களுக்குப் பின் ஒவிக்கின் நான்கு நண்பர்களில் இருவரைக் காயங்களுடன் உலாங்கு வானூர்தி ஏற்றிச் சென்றது. இந்த இருவரும் மாலிபெலித் தாக்குதலின் போது காயமுற்றிருந்தனர்.

## விரக்தி அதிகரித்தல்

சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்பதை ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் இருசாராரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட முயல்கிறார்களில்லை பேச்சுவார்த்தையைத் தொடங்க அஜர்பைஜான் விரும்புகின்றது என அஜர்பைஜான் பேச்சாளர் ஒருவர் சென்றவாரம் மொஸ்கோவில் தெரிவித்தார். ஆனால் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு முன் இந்த இரத்தக்களரி நிறுத்தப்படவேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். இரத்தக்களரியை நிறுத்துவது அஜர்பைஜானின் கடமை என்று பிரிவினைவாதிகள் கூறுகின்றனர். இது இப்படியிருக்க ஆர்மேனியாவில் மக்களின் விரக்தி உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. அஜர்

பைஜான் ஊடாகவே ஆர்மோனியா 80% வீதமான பொருட்களை இறக்குமதி செய்கின்றது. நாகொர்நோ காராபாக் கிளர்ச்சியி னால் ஆத்திரமடைந்த அஜர்பைஜான் தங்கள் நாட்டுக்கு ஊடா கப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு ஆர்மோனியாவுக்குத் தடை விதித்துள்ளது. இப் பொருளாதாரத்தடை ஆர்மேனிய மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது நிலநெய் இயற்கைவாயு, மூலப்பொருட்கள் ஆகியவற்றுக் தத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆர்மேனியாவின் தொழிற்சாலைகள் இயங்கமுடியாத நிலையில் உள்ளன. அத்துடன் ஆர்மேனிய அரசு பொருளாதாரத்தில் இழி நிலையில் உள்ளது அஜர்பைஜானியர்கள் இந்தக் கோரச்செ யலை நிறுத்தாது விடின் அவர்கள் எல்லோரையும் கொல்லவேண் டும் என்கிறான், யெறிவானுக்குத் தெற்கே இருபது மைல் தூரத் திலுள்ள அறாற்றா பள்ளத்தாக்கில் வசிக்கும் ஜோர்ஜி கமோ சியன் என்னும் வேலையற்ற ஓட்டுனர். எங்களுக்கு இயற்கை வாவு இல்லை, மின்சாரம் இல்லை, அப்படி இருக்கும்பொழுது அவர்களுடன் என்ன இணக்கம் வேண்டியுள்ளது, என மேலும் கூறுகின்றான்.

ருஷ்ய ஜனாதிபதி திரு போரிஸ் யெல்சின் உட்பட வெளி யேயுள்ள தலைவர்கள் எல்லோரும் ஒரு வித இணக்கம் ஏற் படத்தெண்டிக்கின்றனர். ஆனால் இருபகுதியினரும் விட்டுக் கொடுப்பதாயில்லை. சென்றவாரம் அமெரிக்க ராஜாங்க அமைச் சர் திரு ஜேம்ஸ் பேக்கர் இருநாட்டு ஜனாதிபதிகளையும் சந் தித்து, அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். இரு பக்கம் கருத்துக்களையும் கேட்டறிந்துகொள்வதால் அதில் இரு பகுதியி னரும் ஒத்துவரக்கூடிய விடயங்கள் இருக்கும் என்கின்றார் திரு. பேக்கரின் உதவியாளர் இந்தப் பிரச்சினையில் இரு பகுதியினரும் ஒத்துவரக்கூடிய விடயங்கள் எதுவுமில்லை. ஐரோப்பாவின் ஒற் றுமை பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைப்பு (Conference on Security of Co-operation in Europe) இங்குள்ள உண்மை நிலையை அறிவதற்கென ஒரு குழுவை இந்தவாரம் அனுப்பத்திட்டமிட்டுள்ளது. இங்கு நிலவும் இந்த முட்டுக்கட்டை நிலைமை இந்தக்குழுவின் முயற்சியினால் முறியடிக்கப்படலாம் என நினைக்கும் இரு நாடுகளும் இந்தக்குழுவை வரவேற்றிருக் கின்றனர். ஆனால் சண்டை தொடர்கிறது.

# தமிழ்நாடு
# தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பு

ஐலண்ட் 08-03-1992

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் சம்பந்த பட்டதாகக் கூறிச் சென்னை சிறப்பு நீதிமன்று புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது கட்டளை அனுப்பியதையடுத்து இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிக ளுடன் சிறிலங்கா பேச்சுவார்த்தை நடத்தப்படாதென சிறிலங்கா விலும் இந்தியாவிலும் பத்திரிகைகள் அறிக்கைகளை விட்டி ருந்தன.

இந்திய, தமிழ்நாட்டு அரசுகள் தமிழீழ விடுதலைப் புலிக ளுக்குத் தொடர்ந்தும் ஆயுதங்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் சிறிலங்கா அரசு கடும் எதிர்ப்பைத் தெரிவித்த போதும் வழங்கி உதவி செய்தது பற்றி, இங்கு திரும்பிப் பார்ப் பது நல்லது.

இன்னும் ஆச்சரியம் தரக்கூடிய விடயமென்னவென்றால் இந்திய அமைதிப் படையினர் இங்கு தம் நடவடிக்கைகளில் ஈடு பட்டிருந்த வேளையிலும் அதுவும் அவர்களின் தளபதிகள் செய்த கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தமிழ்நாட்டு அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுத்து வந்தமை இப்போது தெரியவந்துள்ளது.

இந்த விடயம் அமைதிப்படையினரின் நடவடிக்கைகளின் போது தலைமை வேலைகளில் ஈடுபட்டிருந்த லெப்ரினன்ட் ஜெனரல் சர்தேஸ் பாண்டே என்பவரால் எழுதி வெளியிட்ட (*Assignment*) என்ற புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது. அப்புத்த கத்தில் 87 ஆவது பக்கத்தில் லெப்ரினன்ட் ஜெனரல் சர்தேஸ் பாண்டே பின்வருமாறு கூறுகிறார்: நாங்கள் கள்ளக்கடத்தல் காரர், படகோட்டிகள், ஏதிலிகள் எங்களால் கைப்பற்றப்பட்ட தீவிரவாதிகள் போன்றவர்களிடமிருந்து சரியான பங்களா, ஒழுங்கை, வைத்தியசாலை, படுக்கைக்கட்டில், பட்டினம், நகரம்

போன்ற இடங்களில் இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்களின் உதவியாளர்கள், நோய்வாய்ப்பட்டு இளைப்பாறி வருகிறார்கள். ஆயுதக்கடத்தல்காரர்கள், வெடிகுண்டுகள் தயாரிப்பவர்கள் போன்றவர்களின் விபரங்களை நம்பத்தகுந்த வகையில் தகவல் சேகரித்துத் தமிழ்நாட்டுக் காவல்துறையினருக்கு அனுப்பி வைத்தோம். எமக்குக் கிடைத்த பதில் அவ்விதப்பட்டவர்களும் அவ்வித நடவடிக்கைகளும் அங்கில்லை என்பதாகும். நாங்கள் அவர்களுக்குக் கூறியிருந்தோம். தமிழீழ விடுதலைப் புலிகள் எமது பாதுகாப்பையும் மருத்துவ உதவியையும் பெற்றுவிட்டுச் சிறிலங்காவுக்குத் திரும்பிவந்து அமைதிப்படையினர்களைக் கொல்கின்றார்கள். எமது தமிழ் உத்தியோகத்தர்களின் தமிழ்நாட்டில் வசிக்கும் குடும்பங்கள் அழிக்கப்படும் என்று அவர்கள் எச்சரிக்கைகள் விட்டிருக்கிறார்கள் என்றும் கூறினோம். இவையெல்லாம் தமிழ்நாடு அரசையோ காவற்துறையினரையோ ஒருவிதமாகவும் பாதிக்கவில்லை. எமது சொந்த பாராளுமன்ற அங்கத்தவர்களும் அரசியல்வாதிகளும் கூட எம்மைக் குறைகூறி இலங்கைத் தமிழர்களை அழிக்கும் அமைதிப் படையினரென்று கூறியதுமட்டுமல்லாமல் எங்களை வெற்றிகரமாகத் தாக்குகிறார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளை தீரர்களாகப் போற்றி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சியதுபோல் முழங்கவும் செய்தார்கள். இது எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சோகக்கதை. எமது மக்களுக்கும் சமூகத்திற்கும் நஞ்சு ஊட்டப்பட்டது. அதே வேளை நாங்கள் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்தும்படி கேட்கப்பட்டோம். இதனால் மெளெழுந்தவாரியாகப் பார்க்கப் போனால் போரானது அரசியல் பொருளாதார நோக்கோ அல்லது பலனோ அற்ற பெயரளவிலான போராக மாறிற்று. நாங்கள் காடுகளுக்குள்ளும் நகரங்களுக்குள்ளும் மாறி மாறிப் போராடினோம்.

"பார்வையாளன்"

# வீரர்களைப் பயிற்றுவித்தலும் கிழக்கை அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருத்தலும்

- றோகன் குணசேகரா

கிழக்கு மாகாணத்தை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது இராணுவத்தின் தலையாய கடமையாகும். விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் இருப்பது போல் கிழக்கில் பலம் பொருந்தியவர்களாக இருக்கவில்லை. ஏனெனில் இங்கே பல்லின மக்கள் வாழ்கின்றனர் அவர்களில் அநேகமானவர்களும் குறிப்பிடத்தக்க சிலரும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரானவர்களாகவும் இருக்கின்றனர். இதற்கு அடுத்தபடியானதும், அதிமுக்கியத்துவம் கொடுக்கவேண்டியதும் படை வீரர்களுக்கு ஒழுங்கு முறையான பயிற்சியைக் கொடுப்பதாகும். அண்மைக்காலங்களில் படை வீரர்களுக்கு ஒரு சில வாரப்பயிற்சி கொடுக்கப்படுவதனால், அவர்கள் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்தும் தாக்குதல்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வழிவகை தெரியாது திகைப்பதோடல்லாமல், தங்களில் அநேகரைப் படுகாயப்படுவதிலிருந்தும் இறப்பதிலிருந்தும் காப்பாற்ற முடியாமல் தவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தை அரசின் முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவருவதும் ஜனாதிபதி பிரேமதாசாவின் கைகளை ஓங்கச் செய்வதோடல்லாமல் அவருக்கு நம்பிக்கையூட்டுவதாகவுமிருக்கும். இப்படிச் செய்வது ஈழகோரிக்கையாளரை உற்சாகம் இழக்கச் செய்யும். ஈழத்தின் தலைநகரமான திருகோணமலையில் கப்பல்கட்டும் துறைமுகமும், கடற்படைத்தளமும், இராணுவப் பிரிவுகளும், கரையோரக் காவல்படை முகாம்களும் இருக்கின்றன. இந்தவாரம் இராணுவ அதிகாரிகளைக் கொண்டஉயர்மட்டக்குழுவொன்று திருகோணமலைக்குச் செல்லவுள்ளது. இங்கு இவ்வாண்டுத் தொடக்கத்திலிருந்து பாதுகாப்புப் படையினர் நூறுபேர்வரை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்குள்ளாகி இறந்துள்ளனர்.

பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டு விடுதலைப் புலிகள் மீண்டும் 1990ம் ஆண்டு யூன் மாதம் போரிலீடுபட்டது அரசாங்கத்திற்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அன்று தொடக்கம் கிழக்கு மாகாணத்தை அரசின் முழுமையான கட்டுப்பாட்டில்

வைத்திருக்க வேண்டுமென்பது அரசின் முக்கிய நோக்கமாகும். போர் தொடங்கிய சில நாட்களில் ''ஒபறேசன் சிலெட்சு கமர்'' ( Sledge Hammer ) என்றழைக்கப்படும் இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளுக்கெதிராக முன்னெடுக்கப்பட்டது. விடுதலைப் புலிகளால் புதைத்துவைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளுக்கிடையிலும், அவர்கள் பலத்துடன் விளங்கும் பகுதிகளுக்கூடாகவும் அவர்களின் முற்றுகைக்குட்பட்ட தூரத்திலுள்ள முகாம்களிலுள்ள துருப்புக்களைமீட்பதுடன், நகரப்பகுதிகளைக்கைப்பற்றும் நோக்கு இராணுவம் சமரில் ஈடுபட்டு முன்னேறிச் சென்றது. இந்து திங்களின் பின்பும் இந்தப் பகுதிகளில் சுமுக நிலையைத் தோற்றுவிக்க முடியவில்லை. பலமிழந்த நிலையிலும் விடுதலைப் புலிகள் இடையிடையே அதிரடித்தாக்குதல்களை நடத்துகின்றனர். சில அதிரடித் தாக்குதல்களில் இராணுவத்தினருக்கு கணிசமான இழப்பு ஏற்படுகிறது. இப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் தாங்கள் நினைத்தமாதிரி சுதந்திரமாக நடமாடித்திரிகின்றனர். கிழக்கு மாகாணத்தில் சுமுக நிலையை ஏற்படாமல் செய்வதன் மூலம் யாழ் குடாநாட்டின் மீது அரச படைகள் வைத்துள்ள கவனத்தைத் திசைதிருப்பலாம் என்பது விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களுக்கு நன்கு தெரியும்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டுள்ளதாக ஒரு தருணத்தில் இராணுவ மதிப்பீடு செய்தது. பாதுகாப்பு வசம் போடப்பட்ட புல்டோசர்களில் வந்த விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படைகளினால் இராணுவத்தின் பாதுகாப்பரண்கள் தகர்க்கப்பட்டு ஆனையிறவு முகாம் முற்றுகையிடப்பட்டபோது அங்கு அகப்பட்ட 800 இராணுவத்தினரின் நிலை கவலைக்கிடமாக இருந்தது. சில நாட்களுக்குள் பிரமாண்டமான படைப்பிரிவு ஒன்று புல்மோட்டையிலிருந்து கப்பல் மூலம் சூரியன் மறையும் நேரத்தில் புறப்பட்டது. இது தான் கடற்படையினரின் முதலாவதானதும் பெரியதுமான தனிச்சமர் நடவடிக்கையாகும். வெற்றிலைக் கேணியில் ஒரு பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டது. முதல்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த சில மணிநேரத்தில் அலைஅலையாக ஆயிரம் இராணுவத்தினர் கரைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த இரு இராணுவப் பிரிகேட் பிரிவுகளும் விடுதலைப் புலிகளின் கடும் சமரினால் நிலைகுலைந்தன. இதனால் படையணியைப் பலப்படுத்த மேலதிக துருப்புக்களை அனுப்பும்படி அவசரச் செய்திகள் அனுப்பப்பட்டன. ஆனையிறவு முற்றுகையை

முறியடிப்பது ஒரு கௌரவச் சமராக மாறியது. சொற்ப காலத்துக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தின் தேவைகளுக்காகச் சிரமப்பட்டு அங்கு வைத்திருந்த வேலதிகப் படைகள், அணி அணியாக வெற்றிலைக் கேணியில் தரை இறக்கப்பட்டதன் காரணமாக, கிழக்கில் வெற்றிடங்கள் ஏற்பட்டு விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் மீண்டும் அங்கு தொடர்வதற்கு வாய்ப்பளித்தது

விடுதலைப் புலிகளை அவர்களின் மறைவிடங்களிலிருந்து வெளிக்கொணரும் நோக்கத்துடன் திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் இராணுவத்தினரின் சிறுபிரிவுத்தாக்குதல்கள் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வன்னிக்காடுகளில் இன்னும் கைப்பற்றப்படாத விடுதலைப் புலிகளின் முகாம்கள் இருக்கின்றன. வடகிழக்குக் கரையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவில் அமைந்துள்ள அரசபடையினர் முன்னணிக் காவல் அரண்களை இங்கிருந்து சென்று தாக்குதல்களை நடத்திய விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். இக்காவல் அரண்களை பீரங்கிப்படைப் பிரிவின் உதவியுடன் அரசபடைகள் மீட்டெடுத்தன.

சென்ற வருடம் 3000 அரச துருப்புக்கள் மூன்று வாரமாக நடத்திய உக்கிரச்சமரில் விடுதலைப் புலிகள் காட்டுக்குள் வைத்திருந்த மைக்கல் முகாம் முற்றாக அழிக்கப்பட்டது இந்தச் சமரில் காட்டிலிருந்த ஒரு மரமேனும் துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்பவில்லை. இந்தச் சமரை இராணுவத்தால் நீடித்து நடத்த முடியவில்லை ஏனெனில் மூன்று வாரம் நடந்த உக்கிரச் சமரில் ஈடுபட்டிருந்ததுருப்புக்கள் களைத்துப்போய்க் காணப்பட்டனர். அத்துடன் நித்திகைக் குளத்தை நீருக்கு நம்பியிருந்தபோது அக்குளம் வற்றிக்கொண்டே போயிற்று. விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதலில் தப்ப கட்டப்பட்டிருந்த பெரிய பதுங்குகுழி வானூர்திகளில் இருந்து பார்க்க தெரியாதவையாக இருந்தன. இராணுவம் இங்கிருந்து பின்வாங்குமுன் வெடிமருந்துகளைக் கொண்டு இந்தமுகாமை முற்றாக அழித்தது அத்துடன்இராணுவப் பொறியியலாளர்களின் மேற்பார்வையில் முகாமின்எஞ்சிய பகுதிகள் புல்டோசர்களினால் தரைமட்டமாக்கப்பட்டன இந்த முகாமுக்கு விடுதலைப் புலிகள் திரும்பவும் வருவார்கள் என்ற எண்ணத்தில் இராணுவத்தினர்களால் கண்ணிவெடி புதைக்கப்பட்டதாலும் முகாம் கண்ணிவெடிகளால் தகர்க்கப்பட்டதாலும் விடுதலைப்புலிகள் இந்த முகாமைக் கைவிட்டனர்.

. 86649

தாங்கள் வெற்றிபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் குறையும் பட்சத்தில் விடுதலைப்புலிகள் பாதுகாப்புப் படையினருடன் மோதுவதைத் தவிர்த்துக்கொள்கின்றனர். கடந்த மூன்றுவாரங்களில் காடுகளில் நடாத்தப்பட்ட இருபெரும் இராணுவ நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரைத் தங்கள் முழுப்பலத்துடன் எதிர்க்கவில்லை. அரசபடைகள் முன்னேறி வருவதற்குச் சில மணித்தியாலங்களுக்கு முன் விடுதலைப் புலிகள் தொப்பிகளைக் காட்டுக்குள் இருந்த தங்கள் முகாம்களை கைவிட்டுச் சென்றுள்ளனர். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது முகாம்களை இழந்தாரேயன்றி தனது வீரர்களையோ, கருவிகளையோ இழக்கவில்லை. வீரர்களும், கருவிகளும் தான் அவருக்கு மிகவும் முக்கியமானவை. அவை எளிதில் கிடைக்கக்கூடியவையல்ல. முகாம்கள் அப்படியல்ல விடுதலை, புலிகள் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றாத முகாம்களுக்குச் சென்றிருக்கலாம்

கடந்தவாரம் வெளியாகச்சு மேர்சேன்னார் வீதியில் நடந்த ஒட்ரேசன் வன்னிவிக்ரம' என்ற பெயர்கொண்ட இராணுவத்தின் மூன்றாம் கட்ட நடவடிக்கையிலும், இராணுவத்தினரின் பல தாக்குதலை விடுதலைப் புலிகள் எதிர்கொள்ளவில்லை முன்னர் நடந்த வன்னிக்கிராம நடவடிக்கைகள் போல், இந்த மூன்றாம் கட்ட நடவடிக்கையும் விடுதலைப்புலிகளை அவர்களின் மறைவிடங்களிருந்து வெளிக்கொணர்ந்து அவர்களின் தற்காப்பு இடங்களை அளிப்பதும் அவர்களுக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்துவதையுமே நோக்கமாய்க் கொண்டிருந்தது

இந்தப் பகுதிகளிலுள்ள இராணுவத்தினரின் முன்னணிக் காவல் அரண்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த விடுதலைப் புலிகளை அளிப்பதற்கு இராணுவத்தினர் அவர்களைத் தேடி

அலைந்தனர் இராணுவத்தினர் ஆயிரக்கணக்கில் ஈடுபட்டு சென்ற வருடம் நடத்திய வன்னிவிக்ரம நடவடிக்கையின்போது, விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் தனது வீரர்களை இராணுவத்தினரை எதிர்கொள்ளச்செய்து அவர்களை இழந்ததன் விளைவாகப் புத்திசாலித்தனமாக இம்முறை இச் சண்டையில் இராணுவத்தை எதிர்கொள்ளவில்லை. இராணுவத்தினரை தனது கட்டுப்பாட்டிலுள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இழுத்து, அவர்களது தரைவழித் தொடர்புகளைத் துண்டித்து, விமானப்படையின் பழைய உலங்கு வானூர்திகளில் தங்கியிருக்கச் செய்து, அவர்களைச் சுற்றிவளைத்துத் தாக்குதல்

களை நடத்துவதே திரு. பிரபாகரன் அவர்களின் நோக்கமாக இருக்கலாம். வன்னியிலும் கிழக்கிலும் கரந்தடித்தாக்குதல் நடத்தி இராணுவத்தினரின் ஆயுதபலத்தை விரயம் செய்வதும் நல்ல பலனை அளிக்கும் என்பதும் திரு. பிரபாகரன் அவர்களுக்குத் தெரியும்.

வெள்ளிக்கிழமை தொடங்கிய மூன்றாம் கட்ட வன்னிவிக்கிரம நடவடிக்கையின்போது வவுனியாவுக்கு வடமேற்குத் திசையிலுள்ள சாத்திரி கூழாங்குழத்திலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமை எதிர்பாராத விதமாகத் தாக்கியபோது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டனர். பல ஆண்டுகாலமாக நடந்த இழுபறி நிலைக்குப் பின்பும், பலவித தடைகளின் பின்பும் இராணுவத்தினர் தங்களைப் பலப்படுத்துவதற்குக் கிடைத்த சுழறபட்டிரக சண்டை வாகனங்களை முதன் முதலாக இந்த தாக்குதல் நடவடிக்கையின்போது பயன்படுத்தினார்கள். இத்தாக்குதலின் போது மூதன் முதலாகப் பயன்படுத்தப்பட்ட தாங்கிகளின் செயல்பாடுகளை அறிவதுடன் அவர்களின் திறமைகளையும் பரிசோதித்துப் பார்க்கவேண்டியிருந்தது ஏனெனில் யாழ்குடாநாட்டில் பாரிய தாக்குதல்களைத் தொடங்குவதாயின் அங்குள்ள மணற்பாங்கான பிரதேசங்களில் புதையக்கூடிய சில்லு வாகனங்களுககுப் பதிலாக இத்தாங்கிகளைப் பயன்படுத்தியே விடுதலைப்புலிகளின் பதுங்கு குழிகளை அழிக்க முடியும். இந்தத் தாங்கிகளைச் செலுத்தும் ஓட்டுனர்களுக்கு இவைகளைச் செலுத்தும் திறமையுடன், அத்தாங்கிகளில் பொருத்தப்பட்டுள்ள சுடுகலன்களையும் அதே நேரத்தில் இயங்கும் திறமையும் வல்லமையும் தேவைப்படும் இவர்களின் வல்லமையைப் பொறுத்தே குடாநாட்டில் தாக்குதலைத் தொடங்கலாம். இந்தப் போரைத் தீர்மானிக்கக்கூடியதாக இச்செயல் இருக்கும்.

இராணுவத்தினருக்கோ அல்லது விடுதலைப் புலிகளுக்கோ சனநெருக்கடியும், கட்டிடங்களும் மிகுந்த யாழ்ப்பாணத்தில் ஒரு சமரைத் தொடங்கவிருப்பமில்லை. இரு பகுதியினரும் இதைத் தவிர்ப்பதற்கு விரும்புகின்றனர். ஆனால் இராணுவத்தினருக்கு வேறுவழி இன்மையால் இதைச் செய்தே ஆகவேண்டிய நிலை தோன்றும். இச் சமர் தொடங்கினால் வீடு வீடாகச் சண்டை நடந்து யாழ்ப்பாணம் தரைமட்டமாகிவிடும் இப்படி நடப்பதை ஒருவரும் விரும்பமாட்டார்கள். இராணுவத்தினரின் புதியதாங்கிகள் மணற்பிரதேசமான வெட்டவெளிகளில் பயன்படக்கூடும். ஆனால் கட்டிடங்கள் நிறைந்த இடங்களில் விடுதலைப்புலிகளின்

தாங்கி எதிர்ப்புப் படைக்கலங்களுக்கு இவை தாக்குப்பிடிக்க மாட்டா. தாக்குதல் நடவடிக்கையில் பொதுகாலாற்படையினர் தாங்கிகளுக்கு முன் செல்லவேண்டி வரும் ரீ 55 (T 55) ஏகச் சண்டை தாங்கிகளையும், ரீ 85 (T 85) ரக சுழற்பட்டி ரக சண்டை வாகனங்களையும் விடுதலைப் புலிகளின் ஆர் பி ஜி (RPG) தாக்குதல்களினால் சேதமடையக்கூடும். இச் சேதங்களை மேலதிக தடுப்புக் கவசம் போடுவதன் மூலம் Add on reactive armour) குறைக்கலாம்.

ரீ 85 (T 85) சழற்பட்டி ரக சண்டை வாகனங்களைப் பற்றிய விவாதங்களும், முரண்பாடான சர்ச்சைகளும் இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சிசில்வைத்தியரத்தினவுடன் நடந்துகொண்டிருக்கின்றன.

இத் தாங்கிகளைப் பார்வையிடாமலும், பரிசோதித்துப் பார்க்காமலும் இவைகளுக்கு உதிரி பாகங்கள் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லாமலும் இத்தாங்கிகளை வாங்கியமை பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று அனுராதபுரத்திலுள்ள பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த உயர் இராணுவ அதிகாரிகள் கேட்டுள்ளார்கள். இந்த அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்தத்தாங்கிகள் தரங்குறைந்தவை என்றும் அடிக்கடி பழுதடையக் கூடியவையென்றும், இவைகளுக்கு அதிகமான உற்பத்திகள் தேவை படும் என்றும் தோன்றுகின்றது. இந்த உதிரிப்பாக வசதி ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதும் இப்போது தெரியவந்துள்ளது. இந்த வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள 73 ரக பீரங்கிகள் சுடும்போது 850 யார் தூரம்மட்டுமே செல்லுமென்றும், முதன்மை சமர் தாங்கியான ரீ 55 (T 55) தாங்கிகளில் பொருத்தப்பட்டுள்ள 100 மி. மீ பீரங்கிகள் 2000 யார்கள் வரை செல்லக்கூடியவை என்றும் பீரங்கிப்படை அதிகாரிகள் விமர்சிக்கின்றார்கள்.

செக்கோசெலவாக்கியாவிலிருந்து வாங்கப்பட்ட ரீ 55 ரக முதன்மை சமர்தாங்கியின் விலை 3 4 மில்லியன் ரூபாவாக இருக்கையில் சீனாவில் இருந்து வாங்கிய ரீ 85 காலாட்படைச் சண்டை வாகனங்களின் விலை 12 மில்லியன் ரூபாவாக இருக்கின்றது. ரீ 55 ரகத் தாங்கிகள் செயல்பாட்டுத் திறன் கொண்டவையாக உள்ளபடியாலும், மலிவாக இருக்கின்றபடியாலும் அதையே வாங்கியிருக்கலாம் என்று இலர் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகள் வெள்ளிக்கிழமை நடத்திய கடுமையான தாக்குதலால் அதிர்ச்சியடைந்த இராணுவத்தினர் புதுமுறைப் போர்ப் பயிற்சிகளைக் கொடுத்து உயிரிழப்புக்களைக் குறைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று விரும்புகின்றனர்.

முறையான பயிற்சியின்மையால் உயிரிழப்புக்கள் அதிகரிப்பதாக இராணுவத்தினர் எண்ணுகின்றனர். மனிதவளத்தேவை நிமித்தம் தறபோது இராணுவததினருக்கு ஆறு வார காலப் பயிற்சியே கொடுக்கப்படுகின்றது. ஆனால் முன்னையவர்களு கு மூன்று மாதங்கள் தொடக்கம் ஆறுமாதங்களின்வரை பயிற்சி அளிக்கப்படடுவந்தது முறைபான பயிற்சி இன்மையால் அதிக உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. இதனால் இராணுவத்தினரின் மனோபலம் குறைகின்றது. விடுதலைப் புலிகளின் உத்திகளை இர ணுவம் நன்கறிந்திருக்கின்றது. விடுதலைப் புலிகள் சிறு சிறு குழுக்களாக இயங்குகின்றனர். அவர்களுக்கு அதிகளவு பொறுமையுண்டு. இர ணுவத்தினரை உன்னிபபாக கவனித்து வரும் இவர்கள் இராணுவத்தினர் கவனயீனமாக இருக்கும் பொழுது திடீரென அதரடித் தாக்குதல்களை நடத்தினர் இராணுவத்தினர் தங்கள் காவல் அரண்களை நீண்ட நாட்களுக்கு ஓரே இடத்தில் நிலையாக வைத்திருக்கின்றனர். அந்த. காவலரண்களில் கடமையாற்றிபவர்களுக்குப் பதிலாக வேறு இராணுவத்தினர் அனுப்பப்படுவதில்லை.

இப்படியான நடவடிக்கைகள் இராணுவத்தினரிடையே சலிப்புத்தன்மையையும் அளவுக்கதிகமான, நம்பிக்கையையும் கடமையுணர்ச்சியில் அக்கறையின்மையையும் தோற்றுவிக்கும். இதன ல்விடுத லைப்புலிகள் இவர்களைசுலபமாகதாக்குகின்றனர் பயிற்சியளிப்பாளர்கள் பங்குனி மாதம் தொடக்கம் ஒவ்வொரு முகாம்களுக்கும் சென்று புதுப் புதுப் பயிற்சிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தியுள்ளார்கள். இப்படிப் பயிற்சி பெற்று வருபவர்களினால் புது உத்வேகம் படையினரிடையே உருவாகும். இராணுவத்தினருடையமதிப்பும் உயரும் இவர்களின் தேவைகள் அத்தியாவசியமாகும். எதிர்வரும் கடுமையான சமர்களுக்கு இவர்கள் இன்றியமையாதவர்கள்.

# விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்தும் காத்தான்குடி வாழ்கின்றது

-தினேஷ் வட்டவன
(ரைம்ஸ் 01.03.1992)

மட்டக்களப்புக்கு நான்கு மைல் தொலைவில் தெற்குப் பக்கமாக மக்கள் கோட்டையாக விளங்குகின்ற ஒரு சதுரமைல் பரப்பைக் கொண்ட காத்தான்குடியில் 55,000 மக்களும் 10,000 வீடுகளும், கடைகளும் அத்துடன் தீவிரவாதிகளும் இருக்கின்றனர்.

ஒரு சதுர மைல் பகுதியில் இவ்வளவு மக்கள் தொகையினரா என்று ஆச்சரியப்படாதீர்கள். இலங்கையில் அடர்த்தியாக மக்கள் வாழும் நகரமாக மாத்திரமின்றி, உலகத்திலே மக்கள் தொகை அதிகமாக உள்ள நகரங்களில் ஒன்றாகவும் இது விளங்குகின்றது.

இந்தச் சிறிய நகரம் கிழக்கே கடலாலும், மேற்கே குடாக்கடலாலும், வடகிழக்கிலும் தெற்கிலும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு அளிக்கும் தமிழர்களாலும் சூழப்பட்டதோடல்லாமல் முஸ்லிம்கள் மாத்திரமே அங்கு வாழ்ந்து வருகின்றார்கள்.

## அதிர்ச்சியூட்டும் காரணிகள்

இந்த அதிர்ச்சியூட்டும் காரணிகளைத் தவிர ஆயிரமாயிரம் மக்கள் வாழ்க்கைப் போராட்டம் நடத்துவதும், தனிமைப்படுத்தப்பட்டு வாழ்வதும் வெளியாரை அவர்கள் மீது அக்கறை காட்டச் செய்கின்றது.

காத்தான்குடி எந்த நேரத்திலும் பிரச்சினை வெடிக்கக் கூடிய ஒரு நகரமாக உள்ளது. ஏனெனில் இங்கே விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கும் அவர்களுக்குச் சார்பான தமிழர்களுக்கும் நடுவில் முஸ்லிம் மக்கள் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர் என்கிறார் அந்தப் பகுதிப் பாதுகாப்புக்குப் பொறுப்பான காவல்துறை அத்தியட்சகர் நிஹால் கருணாரத்ன அவர்கள். இப்படிப்பட்ட இன்னல்களுக்கு நடுவில் இந்த ஒதுக்கப்பட்ட முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என அவர் மேலும் கூறினார்.

1989ஆம் ஆண்டு தொடக்கம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு தாக்குதல்களில் 400க்கு மேற்பட்ட முஸ்லிம் பொதுமக்கள் இறந்துள்ளனர். பள்ளிவாசலில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான முஸ்லிம்களும் இதில் அடங்குவர்.

## போர் முனைப்புடன் வளர்தல்

ஈழப்போராட்டம் முனைப்புடன் வளரத்தொடங்கியதும் காத்தான்குடி முற்றாக அழியும் பயங்கர நிலைதோன்றியது. இதைத் தடுக்கும் முகமாக 25 இராணுவ காவல்துறை நிலையங்கள் காத்தான் குடியைச் சுற்றிவர இராணுவக்கோட்டை போல் தோற்றம் அளிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டன. இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டதும் விடுதலைப்புலிகளால் பிற இடங்களிலிருந்து துரத்தப்பட்ட 12 000 முஸ்லிம் மக்களும் காத்தான் குடிக்கு வந்து சேர்ந்தனர் இதன் காரணமாக காத்தான்குடி இப்போது மிகவும் பதற்ற நிலையில் உள்ளது. எந்த நேரமும் வெடிக்க இருக்கும் குண்டுபோல் ஒரு நிலை அங்கு உள்ளது.

காத்தான்குடி முஸ்லிம்கள் வெளியிடத்தில் விவாகம் செய்வதில்லை தாங்கள் விவாகம் செய்ததும் பெற்றோரின் வீட்டுக்கு அருகாமையிலேயே புதுத்தம்பதிகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பார்கள். இந்நடவடிக்கைகளினால் மக்கள் தொகையும். வீடுகளும் விரைவாகப் பெருகிச் செல்கின்றது என முதியவர் ஒருவர் கூறினார். இந்த மக்கள் தொகைப் பெருக்கம் தடையில்லாமல் பெருகியுள்ளதால் அங்கு எந்த நேரமும் பிரச்சினைகள் வெடிக்கலாம்.

நாம் பயணம் செய்த ஒவ்வொரு தெருக்களிலும், குறுக்குத் தெருக்களிலும் எங்களுக்கு ஒரு வேறுபாடான காட்சி தென்பட்டது. நூற்றுக்கணக்கான வீடுகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டு நகரத்தில் ஒவ்வொரு மூலை முடுக்குகளுக்கும் செல்லத்தக்கதாக பாதைகள் அமைக்கப்பட்டும் இருந்தன.

நகரம் மனித நடமாட்டமற்ற பதற்றமான காட்சி அளித்தது. கொளுத்தும் வெய்யில் நேரத்திலும் வீடுகளின் கதவுகளும் பலகணிகளும் பூட்டப்பட்டும் அங்கொருவரும், இங்கொருவரு

மாக ஆடவர்கள் மாத்திரமே தூசுபடர்ந்த மணற்பாங்கான குச்சொழுங்கைகளில் காணப்பட்டனர்.

## பெண்கள் இல்லை

அது மாத்திரமல்ல, நகரம் முழுவதிலும் ஒரு பெண்மணி யாவது எங்கள் கண்களுக்குத் தென்படவில்லை. இங்குள்ள பெண்கள் எல்லோரும் எங்கே சென்றுவிட்டார்கள் என நாங்கள் கேட்டபோது, பெண்கள் வீட்டுக்கு வெளியே வருவதில்லை என ஒருவர் சொன்னார்

காத்தான்குடி ஊடாகச் செல்லும் மட்டக்களப்பு-அம்பாறை முதன்மைப் பாதையில் அமைந்துள்ள வியாபாரத் தலங்களும், சந்தைகளும் ஒரு மைல் தூரம் நீண்டிருந்ததோடல்லாமல் (காத்தான்குடியின் நீளம்) பார்ப்பதற்கு அதுவே ஒரேயொரு சுறு சுறுப்பான இடமாகவும் காட்சியளித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு நகரத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய நகரமாக காத்தான்குடி விளங்குகின்றது. இங்குள்ள முஸ்லிம் மக்கள் சிறந்த வியாபாரிகள். இவர்கள் கொழும்பிலிருந்து பெருமளவில் பொருட்களை வாங்கிவந்து கூடுதலான வியாபாரத்தைச் செய்து வருகின்றார்கள். இதனால் தமிழர்களும் அங்கு பொருட்களை வாங்க வருகின்றார்கள். இதனால் காத்தான்குடியில் வியாபாரத்திற்குத் தேவையான பணம் சேருகின்றது.

பலகாலமாகக் காத்தான்குடி வியாபாரிகள் மட்டக்களப்பு நகரத்தில் நடக்கும் வியாபாரத்தில் முக்கிய பங்கை வகித்து வந்துள்ளனர். நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் மட்டக்களப்புக்குத் தினமும் போக்குவரத்துச் செய்யவேண்டியுள்ளதால்நாம்இந்த நான்கு மைல் தூரத்துக்கு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியுள்ளது.விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்துஇவர்களைப் பாதுகாப்பதற்காக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக காவல்துறை அதிபர் கருணரத்ன கூறுகின்றார்.

இங்கிருந்து இராணுவம் வெளியேறினால் நாமும் வெளியேற வேண்டி நேரிடும். நாம் எங்கு செல்வது என்பது எமக்குத் தெரியாது ஆனால் தாங்கள் காத்தான்குடியை விட்டு வெளியேறவேண்டி நேரிடும் என்று அநேகமான முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

மன்னாரைப் போன்று இங்கிருக்கும் முஸ்லிம்களையும் விடுதலைப் புலிகள் வெளியேற்றப் பார்ப்பார்கள். ஆனால் எங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுவரும் வரை நாம் இங்கிருந்து வெளியேறமாட்டோம் எனமுஸ்லிம் வர்த்தகன் ஒருவர் கூறினார்.

போரினால் சீரழிந்த மற்றப் பகுதிகளுடன் ஒப்பிடும் போது காத்தான்குடி இரவில் அமைதியாக இருக்கின்றது. போர் நடக்கும் பகுதிகளில் ஒன்று இப்படி அமைதியாக இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மாலையில் நாம் பிரதான வீதிப்பாதையை மூடிவிடுகின்றோம். நகரத்துக்கு வரும் எல்லா வாயில்களையும் இராணுவத்தினரும் பொலிசாரும் காவல் புரிகின்றனர் என்கின்றார் உதவிக் காவல்துறை இன்ஸ்பெக்டரும், காத்தான்குடி காவல் நிலையப் பொறுப்பதிகாரியுமான திரு.சமன் பத்மசிறி பெரேரா.

## பகல் வேளைகளில் ஏற்படும் அச்சுறுத்தல்கள்

''பகல் வேளைகளில்தான் எங்களுக்குப் பயமாக உள்ளது'' என்கிறார் ஒரு கிராமவாசி. விடுதலைப் புலிகளின் ஈருருளி வெடிகுண்டினால் அண்மையில் எட்டுப் பொதுமக்கள் நகரத்தில் இறந்துள்ளனர். இங்கு நிலவும் அமைதியைச் சீர்குலைப்பதற்கு விடுதலைப் புலிகள் எப்போதும் எத்தனிக்கின்றார்கள் என்று உதவிக் காவல்துறை இன்ஸ்பெக்டர் பெரேரா மேலும் கூறினார்.

அதிகமாக முஸ்லிம் மீனவர்களே புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காக உள்ளனர். மீனவர்களைப் போல் வள்ளங்களில் வரும் விடுதலைப் புலிகள் மீன்பிடிக்கும் முஸ்லிம் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றார்கள் என்கிறார் ஒரு முஸ்லிம் மீனவர்.

எப்பொழுதாவது ஓர் அசம்பாவிதம் ஏற்பட்டால், இங்கிருக்கும் அரசபணிமனைகளில் பணிபுரியும் தமிழர்களை அப்புறப்படுத்துவதே எமது முதலாவது கடமையாகவுள்ளது. இங்குள்ள இரு சமூகங்களுக்கிடையே நீண்டகாலமாக இருந்துவரும் பகையுணர்வை இது எடுத்துக்காட்டுகின்றது என்கிறார் காவல்துறை அதிகாரி ஒருவர்.

இப்படிப்பட்ட அமைதியற்ற சூழலிலும் தங்களுக்கு அமைதியையும், சுபீட்சத்தையும் வழங்கவேண்டுமென்று அல்லாவை வேண்டிப் பிரார்த்திக்கிறார்கள் இங்குள்ள முஸ்லிம் மக்கள்.

தங்கள் அன்றாட வாழ்க்கையில் தங்கள் தொழில், தங்கள் உணவு மற்றும் பிரார்த்தனை ஆகியவற்றில் இங்குள்ள மக்கள் ஈடுபடுகின்றனர். எதிர்ப்புணர்ச்சியிலுள்ளோர் நடுவில் வாழ்பவர்கள் இவைகளைத்தவிர வேறு என்னதான் செய்யமுடியும் என்கிறார் இந்நகரத்தைப் பாதுகாக்கும் கடமையிலீடுபட்டிருக்கும் இராணுவ வீரர் ஒருவர்.

# யாழ். குடாநாட்டை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இராணுவம் தயார் நிலையில் உள்ளது

-சமிந்திரா பர்ணாண்டோ *Island* 8-3-92-

யாழ்குடாநாட்டின் மீது பாரிய அளவிலான தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள இராணுவம் முற்படும் வேளையில் நான்கோ, ஐந்தோ மூத்த இராணுவத் தளபதிகள் இராணுவத்தைவிட்டு வருகிற பதினொரு திங்களில் விலக இருப்பது கவலை அளிப்பதாக உள்ளது.

வடபகுதிக்குப் பொறுப்பான இராணுவத்தளபதியும், இரண்டாவது படைப்பிரிவுக்குப் பொறுப்பானவருமான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பகடுவாவும் இவர்களில் அடங்குவார் என்று கொழும்பிலும், வெளியிடங்களிலும் பேசப்பட்டு வருகின்றது.

இது விடயமாக ஒரு மூத்த இராணுவ அதிகாரியிடம் வினவியபோது, இப்படி நான்கோ ஐந்தோ தளபதிகள் ஒரே வருடத்தில் விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும், இப்படிப்பட்ட வதந்திகள், குற்றச்சாட்டுக்கள் எதிர்பார்ப்புக்களில் எதுவித உண்மையில்லையென்றும், இதில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பகடுவாவின் பெயர் அடிபடுவதும் பொய் என்றும் கூறினார்.

இந்த அதிகாரியின் கூற்றுப்படி மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி த சில்வா மாத்திரம் இந்த வருடம் இராணுவத்தை விட்டு விலகுவார் எனத் தெரியவருகிறது. 77,000 பேரைக்கொண்ட இலங்கை இராணுவத்தில் அவரே மூத்த அதிகாரி என்றும் கூறினார். பாலரத்தினராசா, ஜெறி சில்வா, கொப்பகடுவா, திலக் பறணகம ஆகியோர் சேவை மூப்பிலான மற்றைய மேஜர் ஜெனரல்கள் ஆகும்.

தற்போது இவர்களில் கனிட்ட மேஜர் ஜெனரலான திலக் பறணகம முதலாவது படைப்பிரிவின் தளபதியாகவுள்ளார். இவர் பனாகொடை இராணுவத் தலையகத்துக்குப் பொறுப்பாகவுள்ளார். மூன்றாவது படைப்பிரிவின் தளபதியாகிய மேஜர் ஜெனரல்

ஜெறி சில்வா கிழக்குப் பிராந்தியத்தில் முழுப் பாதுகாப்புப் படைகளின் தளபதியாக விளங்குகின்றார்.

படைப்பிரிவுகள் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்கும் இவ்வேளையில் நான்கு மூத்த தளபதிகள் பதவி விலகிச் செல்வது சிலருக்குக் கவலையை அளிக்கிறது.

மேஜர் ஜெனரல் கொப்பகடுவா இந்தவருடம் பதவியை விட்டு விலகுவார் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிய இராணுவத்தலையகப் பேச்சாளர் அவர் தொடர்ந்து பதவியில் இருப்பார் எனவும் கூறினார்.

யாழ்குடாநாட்டை கைப்பற்றும் திட்டம் இறுதிக்கட்டத்தில் இருக்கும் பொழுது பாரிய அளவிலான மாற்றங்கள் எதுவும் நடக்காது என இராணுவத்தினர் கூறுகின்றனர் இலங்கையின் மற்றைய பிரதேசங்களுடன் யாழ்குடாநாடு ஒரு சிறு தெருவினால் மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளது. குடாநாட்டைக் கைப்பற்ற வேண்டுமானால் மூத்த அதிகாரிகளினதும், கனிட்ட அதிகாரிகளினதும் கூர்ந்த அறிவுரைகள், ஒத்தாசைகள் தேவைப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் தரைப்படைகள் எவ்வித இராணுவ முன்னேற்றத்தையும் தடைப்படுத்தும் வல்லமை படைத்தவை.

இத்தருணத்தில் அனுபவசாலிகளை இராணுவத்திலிருந்து விலக விடுவது நல்லதல்ல எனச் சிலர் கருதுகின்றனர் கடந்த இருமாதங்களிலும் விடுதலைப் புலிகள் நடாத்திய மின்னல்வேக அதிரடித் தாக்குதல்களினால் இராணுவத்தினருக்குப் பாரதூரமான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் மின்னல்வேக அதிரடித் தாக்குதல்களினால் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரும் குடியேற்றப்பட்ட பொதுமக்களும் பலத்த சேதங்களுக்கு ஆளாகியுள்ளனர். இத்தாக்குதல்களினால் நூறு படையினர் வரை இறந்துள்ளதுடன் , அதிகமான பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனியைப் பறிக்க வேண்டுமென்பது அரசின் உறுதியான நிலைப்பாடாகும். பாதுகாப்புப் படையினரால் இதைச் செய்ய முடியும் என்று அரசு திடமாக நம்புகின்றது. விடுதலைப்புலிகள் தமிழ் ஈழம் என்னும் தங்களது தாயகக் கோட்பாட்டை எதுவித எதிர்ப்பும் இன்றி முன்னெடுத்துச் செல்கின்றனர் இந்தக் கோரிக்கையைத் தடுத்து நிறுத்துவது அவ்வளவு சுலபமல்ல. இதனை அரசியல் தலைவர்

களும், பாதுசாப்புப் படைத்தலைவர்களும் மனதில் வைத்திருப்பது சாலச்சிறந்தது.

அரசினதும், இராணுவத்தினதும் தவறான கணிப்பீடுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன 1990ம் ஆண்டு யூன் மாதத்தில் விடுதலைபுலிகள் போரைமுன்னெடுத்துச்சென்றவேளையில், அரசு பொறுத்திருந்து பார்த்ததன் விளைவாகக் கிழக்குமாகாணத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பல நூற்றுக் கணக்கான காவல் துறையினர் இறக்கவேண்டி நேரிட்டது. ஈழப்போரைச் சரியான கண்ணோட்டத்துடன் அரச தலைவர்கள் முன்னெடுத்துச் செல்லாவிடின் இதைப்போன்ற பாரிய பின்விளைவுகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

வடக்கிலும், கிழக்கிலும் இராணுவ நடவடிக்கைகள் சிறப்பானமுறையில் வழி நடத்தப்படுகின்றது எனச் சில அறிக்கைகள் கூறுகின்றபோதிலும், இவ்விடங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய மின்னல்வேக அதிரடித்தாக்குதல்களினால் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள காவலரண்களுக்கும் ரோந்து செல்லும் படைகளுக்கும் பாரிய அளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் பாரிய தாக்குதலை மேற்கொள்ளலாம் என்றொரு அச்சம் பொதுமக்கள் மனதில் வேரூன்றியுள்ளது இதேபோல் தற்போது நடைபெறும் அதிரடித் தாக்குதல்களினால் ஏற்படும் பாரிய சேதங்களினால் இராணுவத்தினர் மனதிலும் பயப்பிராந்தி ஏற்பட்டுள்ளது இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் கட்டுப்பாடுகளும் இழக்கப்படும்.

ஊழல்

இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், படைவீரர்களும் பாரிய அளவில் ஊழலில் ஈடுபட்டுள்ளதால் இக் குற்றச்சாட்டுக்களைவிசாரிக்கவென இராணுவத்தினரால் விசாரணை நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது இப்பொழுதுமூன்றுநீதிமன்றங்கள் விசாரணையில் ஈடுபட்டுள்ளன. இராணுவத்தினரின் ஊழல்களை விசாரிக்கவென லால்வீரசூரியா, பற்றிக் பர்னாந்து, உபாலி கருணாரத்ன ஆகிய மூன்று பிரிகேடியர்களையும் இராணுவத் தலைமைத் தளபதி சிசில் வைத்தியரத்ன நியமித்துள்ளார். விடுதலைப் புலிகளுக்கு எரிபொருள் அனுப்புவதிலும், கடத்தல்களிலும் படைவீரர்கள் ஈடுபட்டார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு பொது நீதிமன்றங்களிலும், இராணுவ நீதிமன்றங்களிலும் இவர்

கள் விசாரிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது இராணுவ வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த மூன்று விசாரணை மன்றங்களும் தங்கள் சிபார்சுகளை இந்த மாதத்துக்குள் கையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்பின் இராணுவத் தலைமைத் தளபதி இவற்றிற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாவின் மறைவு தங்களை வெகுவாகப் பாதித்துள்ளதாக இராணுவத்தினர் எண்ணுகின்றனர். இராணுவத்தினருக்கும், அரசாங்கத்துக்குமிடையில் அவர் ஒரு நல்ல இணைப்புப் பாலமாக விளங்கினார் என இராணுவத்தினர் நினைக்கின்றனர். சென்ற வருடம் பயங்கரவாதிகளின் தாக்குதலினால் காலஞ்சென்ற திரு. விஜயரத்ன, இராணுவத்தினருக்கு ஒரு நல்ல தலைவராக விளங்கினார். அவர்களின் பிரச்சினைகளை கேட்டு அறிவதோடு, திட்டங்களை செயலாற்றவும் செய்தார்.

## நிறைவு ஏற்பட உதவினார்

எதிரிகளைவிடப் பாதுகாப்புப் படையினரைக் கண்டு பொது மக்கள் அஞ்சி ஒடுங்கி நடுங்கவேண்டுமெனத் திரு. விஜயரத்னா எதிர்பார்த்தார். கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் மக்களைப் பயமுறுத்தும் வகையில் அமைந்தால் மக்கள் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதுவித உதவிகளும் அளிக்க மாட்டார்கள் என்பது அவரின் கொள்கையாகும்.

யாழ் குடாநாட்டின்மீது பாரிய தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிடும் இவ்வேளையில் இராணுவரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வெற்றிவாய்ப்பைப் பெறுவதற்குப் பாதுகாப்புப் படையினருக்குப் பலம் வாய்ந்த அரசியல் தலைமைத்துவம் தேவைப்படுகின்றது. கொலைசெய்யப்பட்ட முன்னாள் துணைப்பாதுகாப்பு அமைச்சராகிய திரு விஜயரத்னா, பாதுகாப்புப் படையினருக்கும் அரசியல் தலைவர்களுக்குமிடையில் திறமையாக இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தார்.

இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகளை ஒடுக்க வேண்டுமென்றே திரு. விஜயரத்ன எப்பொழுதும் விரும்பினார். விடுதலைப் புலிகளின் சாதாரண போராளி தொடக்கம் தலைமைத்துவம் வரையில் உள்ள சகலரினதும் ஆணவத்தை இராணுவ ரீதியில் அடக்கவேண்டுமென்று நினைப்பவர்களில் இவரும் ஒருவர். தமிழ்ப்பிரிவினை வாதிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த

தாயுள்ளதெனப் பலர் எண்ணுகின்ற யாழ் குடாநாட்டுத் தாக்குதலை முன்னெடுத்துச்செல்ல அரச பாதுகாப்புப் படையினர் தயார்நிலையில் உள்ளனர் அரசியல் தலைமைத்துவத்தின் முழுமையான ஆதரவு இராணுவத்துக்கு தேவைப்படும். சமரில் வெற்றிவாகை சூடும்போது அதற்கு உத்வேகம் கொடுக்கக்கூடிய வகையில் செயலாற்றினால் மேலும் வெற்றிவாய்ப்புக்களை ஏற்படுத்தலாம் என்றும் அது பாதுகாப்புப் படையினருக்கு மனநிறைவைக் கொடுக்கும் என்றும் பாதுகாப்புப் படையினர் கூறுகின்றனர்.

பேச்சுவார்த்தைகள் தொடங்குமுன் வடபகுதியைத் தங்கள் முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியுமென்று பாதுகாப்புப் படையினர் நம்புகின்றனர். இவ்வருட நடுப்பகுதிக்குள் விடுதலைப் புலிகளுக்கு கணிசமான அளவு பாதிப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென்பது அவர்களது திடமான நம்பிக்கையாகும்.

இது விடயமாக மூத்த இராணுவ அதிகாரியிடம் அவர் எண்ணத்தை கேட்டபோது, யாழ் குடாநாட்டை இராணுவ பலத்தினாலே கைப்பற்றவேண்டுமென அவர் கூறினார். யாழ் குடாநாட்டை இராணுவம் கட்டாயமாக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர உறுதிபூண்டுள்ளதென இன்னொரு இராணுவ அதிகாரி கொழும்பில் கூறினார்.

பாரிய தாக்குதல் ஒன்று நடக்கப்போகின்றது. இத்தாக்குதல் முன்னைய தாக்குதல்கள் எல்லாவற்றிலும் பார்க்க உக்கிரமாகவும், இதனால் ஏற்படும் அழிவுகள் சாவுகள் பெருமளவில் இருக்கும் என்றும் மக்கள் பெரும் துன்பம் அடைவார்கள் என்றும் நிச்சயமாகத் தெரிகின்றது. விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது சுலபமான காரியமல்ல. ஆனால் இம்முறை பாதுகாப்புப்படையினரும், அரசும் ஒருங்கிணைந்து, இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் (முன்னணிநிலையில்) இருக்க எத்தனிக்க வேண்டும்.

இதைத் தவிர விடுதலைப் புலிகள் நடாத்துகின்ற மின்னல் வேக அதிரடித்தாக்குதல்கள், சில ஆயிரம் திறமை வாய்ந்த படைவீரர்களைக் கிழக்கு மாகாணத்தில் முடக்கிவைத்துள்ளது. அத்துடன் விமானப் படையினரும் தங்களது பலத்தை அங்கு அதிகரித்துள்ளனர்.

வன்னியில் நடைபெற்ற அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகள் யாழ்குடாநாட்டில் எடுக்கவிருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக இருக்கலாம். விடுதலைப் புலிகளை

மரபுவழிப்போருக்கு இழுக்கும் முகமாக வவுனியாவுக்கு அப்பா லுள்ள அரசு காலாட்படைவீரர்களை அவர்களது முன்னணிப் பாதுகாப்பு நிலையங்களிலிருந்து முன்னேறச் செய்தனர். இப் பிரதேசத்தில் இராணுவ முன்னேற்றத்தைத் தடுக்கும் முகமாக விடுதலைப்புலிகள் தங்கள் அணியினரை ஈடுபடுத்தினர். 96 மணித்தியாலங்கள் நடைபெற்ற மோதல்களின் பின் இரண்டு போராளிகளே இறந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

வன்னிவிக்ரம III என்று அழைக்கப்பட்ட இந்நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் பல அணிகளை அழிக்க இராணுவம் திட்டமிட்டிருந்தபோதும், விடுதலைப் புலிகளின் தந்திரோ பாயமான படைவிலகல்களினால் இராணுவத்தின் எதிர்பார்ப்பு பயனளிக்கவில்லை.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் படைகளை இரா ணுவம் நகர்த்தமாட்டாது. என்பது விடுதலைப் புலிகளுக்கு நன்கு தெரியும் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் 90 கல் தொலைவில் அமைந்துள்ளது வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத் துக்கு படைகளை நகர்த்தும் அதேவேளை தங்கள் விநியோக மார்க்கங்களைச் செம்மையாக வைத்திருப்பது கடினமானது என்பது பாதுகாப்புப் படையினருக்குத் தெரியும். வவுனியா - யாழ்ப்பாண முதன்மை வீதியில் பாதுகாப்புப் படையினரின் முகாம்கள் கிடையாது. இப்பிரதேசத்தில் முன்னர் இருந்த மூன்று இராணுவ முகாம்களும் அழிக்கப்பட்டோ அல்லது கைவிடப் பட்டோ உள்ளன.

ஈழப்போரின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளின் போது கொக்காவில், மாங்குளம் ஆகிய இராணுவ முகாம்கள் தனிச் சிறப்பு வாய்ந்த முறையில் விடுதலைப் புலிகளினால் தகர்த் தெறியப்பட்டன அதைத்தொடர்ந்து சொல்ல விரும்பாத கார ணங்களுக்காக கிளிநொச்சிமுகாம் இராணுவத்தினரால் கை விடப்பட்டது.


அங்கும் இங்குமாகச் சில மோதல்கள் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் வேளையில் யாழ்குடாநாட்டைத் தாக் குவதற்கான ஆயத்தங்களை இராணுவம் செய்து வருகின்றது. யாழ்குடாநாட்டுத் தாக்குதல் நடவடிக்கையில் இராணுவம் தனது முழுப்பலத்தையும், வளங்களையும் (resources) பிரயோகிக்கவேண்டி நேரிடும்.

வடக்கிலுள்ள காலாட்படை அணிகளின் நிலைகளை அறிந்து வருவதற்காக இரண்டு குழுக்களை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன வடக்கே அனுப்பி யுள்ளார். மருத்துவம் பொறியியல் மற்றும் படையினருக்குத் தேவையான வேறு சேவைகளின் நிலைகளைப் பற்றியும் இரா ணுவத் தலைமைத் தளபதி கவனஞ் செலுத்துகின்றார். தாக்குதல் நடவடிக்கைகளில் ஊறித்திளைத்த விடுதலைப்புலிகளுடன் மோது வதற்குப் படையினரை அனுப்புவதற்கு முன்னர் உண்மையான நிலைமைகளை அறிந்து கொள்ளவேண்டிய கடப்பாடு இரா ணுவத்திற்கு உள்ளது.

வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் ஒரே நேரத்தில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதியளவு படைவீரர்கள் இல்லை என்பது விடுதலைப் புலிகளுக்கு நன்றாகத் தெரியும். மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங் களையும் உள்ளடக்கிய வன்னிப் பிரதேசம் அரசுக்கும் பெரும் நெருக்கடிகளைக் கொடுக்கின்றது. மீண்டும், மீண்டும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டும் அண்மையில் வன்னிவிக்ரம II என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டும் கூட வன்னிப் பிரதேசத்தை அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாதிருக்கின்றது.

# எதிர்காலத்தை நோக்கி வீசும் காற்று

— டிக் தொம்சன் (Time 13-1-92)




அழுக்கடைந்த எரிபொருள்களிலும், வெளிநாட்டு எண்ணெயி
லும்பல ஆண்டுகளாகத் தங்கியிருக்கும் அமெரிக்காவை அவற்றில்

ருந்து விடுவிக்க உதவும் சக்தியாகத் தூய்மையானதும், நம்பிக்கையானதுமான காற்று விசையாளி (Windmill) விளங்கியது. மென்காற்று எப்படித் தாராளமாகக் கிடைக்கின்றதோ அதே போன்று இதில் இருந்து பெறும் சக்தியும் தாராளமாகக் கிடைத்துப் புதிய புதிய கைத்தொழில்களின் தேவையைப் பூர்த்தி செய்யுமென எண்ணப்பட்டது. அரசாங்க வரிச்சலுகைகளால் ஊக்குவிக்கப் பட்ட முதலீட்டாளர்கள் 1980-ம் ஆண்டுகளில் 2.5 பில்லியன் டாலர்களுக்கும் மேலாகக் காற்று விசையாளித் திட்டங்களில் முதலீடு செய்தனர்.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் உண்மையான நோக்கம் நிறைவேற வேண்டுமாகில், அதற்கு உத்வேகம் மாத்திரம் இருந்தால் போதாது. காற்று விசையாளிகள் வேலை செய்வதில்லை எனக் கூறப்பட்டு வந்தது ன் அதற்குக் கொடுக்கப்பட்ட வரிச்சலுகையும் ஒரு இழுக்காகக்கருதப்பட்டன. கொலறாடோ (Colorada) மாநிலத்தில் உள்ள கோல்டன் (Golden) என்னுமிடத்தில் அமைந்திருக்கும் தேசிய சக்தி ஆய்வு கூடத்தின் (Nationa) Renewable Energy Labora gory) காற்றாளி விசைத்திட்ட முகாமையாளர் திரு றொபர்ட் திரேசர் (Robert Thereshar) கூறுகின்றார். இறுதியில் இந்த நிலை காற்று விசையாளி நிறுவனங்களை உற்சாகமிழக்கச் செய்தது. அநேக காற்று விசையாளிகள் கைவிடப்பட்டன. 1985-ம் ஆண்டளவில் வரிச்சலுகைகள் நிறுத்தப்பட்ட பின் மிகுதியாகவிருந்த காற்றுவிசையாளிகளும் கைவிடப்பட்டுப் பெரும் நம்பிக்கையோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் ஞாபகச் சின்னங்களாக இவற்றின் கோபுரங்கள் காட்சியளித்தன.

இருப்பினும் காற்றில் புதிய சக்தி இருக்கின்றது என்பது காலக்கிரமத்தில் உணரப்பட்டது முந்திய வருடங்களில் இருந்த காற்று விசையாளிகள் போன்றில்லாது, தற்போதைய விசையாளிகளைப் புதிய தொழில் நுட்பத்தை உபயோகித்துத் திறமையானவையாகவும், அதிக பலனைத் தரத்தக்கவையாகவும் பொறியியலாளர்கள் அமைத்துள்ளார்கள். இவை போலியல்லாததும், நம்பிக்கையானதுமென அமெரிக்க சக்திவளத்துறைத் (Dept of Gnergy) தலைவராக இருக்கும் திரு. மைக்கல் டேவிஸ் (Micha) Deves) கூறுகின்றார். இப்போதுள்ள காற்றுவிசையாளிகள் அமெரிக்காவின் தேவையில் 10% சக்தியைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் உள்ளவைகளாய் இருப்பதாகவும், இவற்றை மேலும் புதுமைப் படுத்தினால் இன்னும் முப்பது வருட காலத்தில் இவை அமெரிக்காவின் தேவையில் காற்பங்கைப் பூர்த்தி செய்யும் எனவும் நம்பப்

படுகின்றது. இந்தப் புள்ளிவிபரங்கள் காற்று விசையாளி உற்பத்தியாளர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் சர்வதேச உற்பத்தியாளர்களுக்கும் ஆர்வத்தைக் கொடுத்துள்ளது. காற்று விசையாளி பற்றி மதிப்பீடுகள் செய்யப்பட்டுப் பரீட்சார்த்த திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாளைக்கு எண்ணெய்க் கிணறுகளாகச் செயல்படப் போகின்ற இவற்றை அமைப்பதற்கு அனுமதி பெறுவதற்கு அனேகர் போட்டியிடுகின்றார்கள்.

ஒரு நிக்கல் (*Nickel*) செலவில் ஒரு கிலோவாட் (*Kilowatt*) சக்தியை எண்ணெய் மூலம் உற்பத்தி செய்வது போல் காற்று விசையாளி மூலம் உற்பத்தி செய்வதே இதன் நோக்கமாக விருந்தது. கலிபோர்னியா (*California*)வில் இயங்கிவரும் காற்று விசையாளி இயந்திரங்கள் ஏழு பெனிக்கு (*Penny*) ஒரு கிலோவாட் சக்தியை உற்பத்தி செய்யக்கூடியனவாக இருக்கின்றன. இடைவிடாது பெருங் காற்று வீசும் பகுதிகளில் 1995-ம் ஆண்டளவில் இவ்வியந்திரங்கள் ஐந்து பெனிக்கு ஒரு கிலோவாட் சக்தியை உற்பத்தி செய்யக்கூடியதாயிருக்கும். மேலும் இந்த இயந்திரங்களைப் புதுமைப்படுத்தினால் 2000-ம் ஆண்டளவில் இன்னுமொரு பெனியைக் குறைக்க முடியும். இந்தக் தொழில் நுட்பத்தைப் பாவிப்பதற்கு உள்ளூர் வாசிகளுக்குப் போதியளவு காற்று இல்லாதபோதிலும், இப்பொழுது இருக்கும் தொழிற்றுறையில் நிலப்பரப்பு இருமடங்காக விரிவாக்கப்பட்டு இந்தத் தொழில் இலாபகரமாக இயங்கும் என்று தேசிய சக்தி ஆய்வுகூடத்தைச் சேர்ந்த நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

இதனுடைய வெற்றி ஒரு அரசியல் விவகாரமாக இருக்கின்றது. புதிய தொழில் நுட்பங்களை உபயோகித்துப் புதுமைப் படுத்தப்படுவதும் தற்போது சுதந்திரமாக இயங்குவதுமான இந்தக் கைத்தொழிலில் அரசாங்கம் தலையிடுமா? இந்தத் துறையைப் புதுப்பிக்க வேண்டுமென எண்ணுவோர் இதற்கு ஆதரவாகவே இருப்பர். அமெரிக்க மத்திய அரசும் மாநில அரசுகளும் காற்று விசையாளிக் கைத்தொழில் உற்பத்தியாளருக்கு உதவியை வழங்காதிருப்பின், இத்துறையின் ஆராய்ச்சிக்கென அதிக பணத்தைச் செலவழித்த ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கட்டுப்பாட்டிலேயே இந்தத்துறை இருந்திருக்கும். ஆனால் இன்று அமெரிக்காவே இத்துறையில் மேம்பட்டிருக்கின்றது.

1900 களின் ஆரம்ப காலத்தில் அமெரிக்காவிலுள்ள அநேகமான விவசாயப் பண்ணைகளுக்குக் காற்று விசையாளி மூலமே மின்சாரம் பெறப்பட்டு வந்தது 1930 களில் கிராமிய மின்சாரப்

படுத்தும் நிருவாகம் (*Rural Electrification Administration*) கிராமப் புறங்களுக்கு மின்சாரத்தை வழங்கியபோது இவை கைவிடப் பட்டன. 1970களில் ஏற்பட்ட எண்ணெய்த் தடையையும், எண்ணெயால் சூழலுக்கேற்படுகின்ற தீங்கையும் கருத்திற் கொண்டு எண்ணெய்க்குப் பதிலாக மாற்று வழியைக் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் யோசித்தது. மாநில அரசாங்கங்கள் தங்கள் வருவாயில் ஒன்று தொடக்கம் இரண்டு வீதத்தை இத்தொழிலின் ஆராய்ச்சிக்கு ஒதுக்கிய அதேவேளையில், அமெரிக்க அரசாங்கமும் இத்தொழிலை மீண்டும் ஆரம்பிப்பவர்களுக்கு வரிச்சலுகையும் அளித்தது.

இத்தொழிலில் முதலீடு செய்கின்றார்கள் என்ற காரணம் கருதியே இவ்வரிச்சலுகைகள் வழங்கப்பட்டனவே தவிர இத்தொழில் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பன போன்ற விடயங்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாகக் கூடிய சலுகைகளைப் பெறுவதற்காக இந்த மாற்று விசையாளிகள் உருவாக்கப்பட்டனவே தவிர காற்றினால் எவ்வளவு பயனைப் பெறப்போகின்றோம் என்பது கருத்தில் கொள்ளப்படவில்லை. சில காற்று விசையாளிக் கோபுரங்கள் காற்றுக் குறைவாகவுள்ள இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. வேறு சில இடைக்கிடையே பழுதடைந்து இருந்தன. இப்படியிருந்தும் சில நிறுவனங்கள் மனம் தளராது ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தன. புதிய தொழில் நுட்பம் மூலம் கலிபோர்னியா மாநிலம் இதை வளர்க்க ஆரம்பித்தது. காற்று நுழைவாயில்கள் போல் செயல்படுவதும், கடற்கரைகளிலுள்ள உயரமான மேடுகளாலும், பள்ளத்தாக்குகளாலும் இந்த மாநிலத்திலுள்ள பள்ளத்தாக்குகள் கடலுடன் இணைக்கப்பட்டுள்ள இயற்கையாகவே இங்குஅமைந்துள்ள இந்த ஆய்வுகூடங்களிலே பொறியியலாளர்கள் புதிய காற்றாடி வடிவமைப்புக்களை பரிசோதனை செய்ய ஆரம்பித்தார்கள்.

காற்றினுடைய விசைக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய வகையில் விசையாளிகளை உருவாக்குவது பற்றி எதுவும் ஆராய்ச்சி செய்தவர்களுக்குப் புரியாதிருந்ததையே 80களில இத்தொழிலில் ஏற்பட்ட தோல்வி எடுத்துக்காட்டுகின்றது. ஆரம்பத்தில் இக்காற்று விசையாளிகளில் பொருத்தப்பட்ட அலகுகள் (*Blades*) உலங்குவானூர்திகளுக்கு ஆரம்பத்தில் பொருத்தப்பட்ட அலகுகள் போன்றிருந்தன. ஒரு அலகில் ஒரு முனைக்கும் மற்ற முனைக்குமுள்ள காற்றமுக்கம் ஒரே சீராகவில்லாததால் காற்று

விசையாளியின் சுழல் கருவி (Rotor) பயங்கரமாக அசைந்தாடி இறுதியில் உடைந்தே விடும். சடுதியாக வரும் கடுங்காற்றினால் ஏற்படும் அதிக சக்தியினால், சக்தியாக மாற்றமடையச் செய்யும் விசையளி (Energy Coawerting Turbine) எரிந்துவிடும். இந்தப் பிரச்சினைகளைத் தவிர்பதற்குப் பொறியியலாளர்கள் அதிக செலவில் பெரிய இயந்திரங்களைச் செய்தார்கள். அவை பெரும் செலவை ஏற்படுத்தியது.

எவ்வளவோ முயற்சிகளுக்குப் பின்னர், நீடித்து உழைக்கக்கூடிய வகையில் அலகின் நடுப்பகுதியைத் தடிப்பாக்கி இந்த அலகை ஆராச்சியாளர்கள் திருத்தியமைத்தார்கள். காற்றுவரும் திசையை அறிவிப்பதற்கும், சரியான மாற்றங்களைச் செய்ய இயந்திரத்தை திருப்புவதற்கு விசையாளியின் கோபுர உச்சியில் மின்னியல் சாதனங்களைப் பொறியியலாளர்கள் பொருத்தியுள்ளனர். இந்த மின்னியல் சாதனம் ( Electronic Sensors ) ஒவ்வொரு மாற்றங்களையும் தெரிவிக்காது கணனி ( Computer ) ( 15 ) பதினைந்து பாகைக்குத் திரும்புமாறு கட்டுமாகில, இந்த மின்னியல் சாதனம் காற்றுப் பக்கம் திரும்பும்படி சமிக்ஞை செய்யும். காற்று விசையாளி உற்பத்தித் தொழிலில் முன்னணி வகிக்கும் அமெரிக்க நிறுவனமான கலிபோர்னியாவிலுள்ள யூ. எஸ். வின்டபவர் ஒப் லிவர்மோர், (U S. Windpower of Livermore) கடுங்காற்றினால் திடீரென ஏற்படுகின்ற அதிசக்தி விசையளியை செயலிழக்கச் செய்யாது பாதுகாக்கக்கூடிய காற்று இயந்திரங்களை மின்னியக்க சாதனங்களைப் பெருத்தியுருவாக்கியுள்ளது.

காற்று விசையாளியைச் சரியான இடத்தில் அமைக்காதுவிட்டால் அதனால் ஏற்படுகின்ற 10% காற்றின் இழப்பு 30% சக்தி உற்பத்தியை இழக்கச் செய்யக்கூடிய பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றது. மேலும் காற்று விசையாளியின் பின்புறத்திலுள்ள காற்று அந்த விசையாளியைச் சுற்றியுள்ள மற்றைய விசையாளிகளைத் தாக்கக்கூடியதாகவிருப்பதால் விசையாளிகளைச் சீராக அமைப்பது முக்கியமானதாயிருக்கின்றது. கூடுதலான சக்தியை எப்படிப் பெறலாம் என்பதை அறிவதற்கும், வேறுபட்ட நிலப்பரப்புக்களில் எங்கெங்கு விசையாளிகளை அமைக்கலாம் என்பதை அறிவதற்கும் கணனிகள் பாவிக்கப்படுகின்றன.

இதனால் பெறும் பலன்களைக்கொண்டே தொழில் நுட்பத்தை மதிப்பீடுசெய்ய வேண்டும் என்ற முறையை இதில் ஏற்படும் முன்னேற்றங்கள் மாற்றிக்கொண்டு வருகின்றன.

''நாங்கள் இந்தத்துறையை நல்ல பலன்தரத்தக்கதொன்றாகவே
கருதுகின்றோம்' என சான்பிரான்சிஸ்கோவில் உள்ள பசுபிக் காஸ்
அன்ட் எலக்ரிக் நிறுவனத்தின் ஆராய்ச்சித்துறைத் தலைவர்
திரு. கார்ல் வெயின்பேர்க் கூறுகின்றார். கலிபோர்னியா
தவிர்ந்த ஏனைய மாநிலங்கள் முன்னர் இத்தொழிலில் ஏற்பட்ட
இழப்புக்களின் பழுவை இப்பொழுதும் தாங்கவேண்டியுள்ளது.
அமெரிக்காவின் மத்திய மேற்கிலுள்ள பத்து மாநிலங்களின்
மின்சாரத் தேவையை காற்றுவிசையாளிகள் மூலம் பூர்த்திசெய்ய
முடியும் என ஒரு அரசாங்க மதிப்பீட்டில் குறிப்பிட்டிருந்தபோதி
லும் இந்த மாநிலங்களில் 1992-ல் பெரியளவிலான காற்று
விசையாளிகளை அமைக்கும் திட்டம் எதுவும் மேற்கொள்ளப்
படவில்லை.

எரிபொருள் கழிவுகளின் காரணமாக சூழலில் மாசு ஏற்
படுவதையிட்டு மக்கள் அதிருப்தி கொண்டிருக்கின்றபடியால்
எரிபொருள்களுக்கு ஒப்பான புதிய சக்தியைப் பெறவேண்டு
மென்ற நெருக்குதல்கள் அதிகரிக்கும். சூழல் மாசடைவதால்
ஏற்படும் செலவினத்தை சக்தியை உற்பத்திசெய்யும் செலவுடன்
சேர்த்துக்கொள்ளுமாறு சில மாநிலங்கள் கேட்க ஆரம்பித்துள்
ளன. சூழலில் மாசு ஏற்படுவதனால் ஏற்படுகின்ற செலவீனத்தை
கலிபோர்னியாவில் தற்பொழுது மதிப்பீடு செய்ய ஆரம்பித்திருப்
பதுடன், மற்றைய சக்திகளுக்கு விதிக்கப்பட்டதைவிட 15%
குறைவான விலை காற்றாளி விசைமூலம் பெறும் சக்திகளுக்கு
விதிக்கப்பட்டுள்ளது.

புதிய காற்றுவிசையாளிகளை வாங்குவதற்கு சலுகையளிக்
கும்படி ஏழுவிதமான யோசனைகள் அமெரிக்கக் காங்கிரஸிடம்
சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சலுகைகளின் பெறுமதிபற்றி
இத்தொழில்துறையிலுள்ளவர்களே முரணான கருத்தைக்
கொண்டுள்ளார்கள். வேறுவிதமான உதவிகளின்றியே இத்
தொழில் மற்றத் தொழில்களுடன் போட்டியாகவிருக்கும் எனக்
காற்றுவிசையாளி உற்பத்தியாளர்கள் கருதுகின்றார்கள். ஆனால்
காற்றுவிசையாளி உற்பத்தித் தொழிலில் முதலீடுசெய்வதை
ஊக்குவிப்பதற்கு வரிச்சலுகை கொடுக்கப்பட வேண்டும்.

இத்துறையில் ஏற்பட்டுவருகின்ற முன்னேற்றங்கள் மேலும்
இந்தத் துறையைக் கவரச் செய்யும். நிலக்காற்றின் சீரற்ற
தாக்கத்திலிருந்து இயந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும்,
ஒரே சீரான காற்றைப் பெறுக்கொள்ளவும் கூடியவகையிற்

சில பகுதிகளில் தற்போதுள்ள காற்றாளி விசைக் கோபுரங்களை உயரமான இடங்களில் அமைக்க பொறியியலாளர்கள் திட்டமிட்டுவருகின்றார்கள். பாரமற்ற பொருட்களினால் கோபுரங்களை அமைப்பது செலவைக்குறைக்கும். சக்தி அதிகம் தேவைப்படும் வேளைகளிலும், காற்றில்லாத வேளைகளிலும் பாவிப்பதற்காக, காற்றுக்காலங்களில் உற்பத்திசெய்யப்பட்ட தேவைக்கு மிஞ்சிய சக்தியைச் சேமித்து வைக்கக்கூடிய வழிமுறைகளை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

எல்லாச் சக்தியிலும் பார்க்க காற்றால் பெறும் சக்தியே முதன்மையான சக்தியாக இந்த நூற்றாண்டின் இறுதியில் விளங்குமென்ற எங்கள் வேட்கை நிறைவேறாதுவிடின் அது தொழில்நுட்பத்தின் தவறல்ல, இதை உன்னத நிலைக்குக் கொண்டுவர ஆவன செய்யாதது சமூகத்தின் நெடுநோக்கத்திலுள்ள தவறேயாகும்.

86649

2223 CC

# பிறெஸ்லரின் திருத்தம் - 2

- கௌதில்யா
(Island 26.1.92)

இதை நாங்கள் எப்படி அழைப்போம்? செனட்டர் லாறி பிறெஸ்லர் (Senator Lary Preslor) அவர்கள் பிரியாவிடை பெற்றுச் சென்றபோது விடுத்த அறிக்கை பற்றியே நான் இங்கு குறிப்பிடுகின்றேன். இதைப் பிறெஸ்லர் திருத்தம் - 2 என அழைப்பது போதுமானது என எண்ணுகின்றேன். திரு. பிறெஸ்லர் அவர்களின் முதலாவது திருத்தமே அவரை உலகெங்கும் அறிமுகப்படுத்தியது. அணு ஆயுதங்களுக்கு உள்ள உரிமையை விட்டுக்கொடுக்கும் தகுதிச் சான்றே ஐக்கிய அமெரிக்காவின் உதவியைப் பெறுவதற்கு மற்ற நாடுகளை உரித்துடையவர்கள் ஆக்குகின்றது. இந்த உறுதிமொழியைப் பாகிஸ்தான் வழங்காததன் காரணமே 1990ஆம் ஆண்டு அதனுடைய உதவி குறைக்கப்பட்டது. மிகவும் கூடுதலான உதவியைப் பெறும் இஸ்ரேல் மற்றும் பாகிஸ்தான், எகிப்து போன்ற நாடுகளில் பாகிஸ்தான் உதவி பெற தகுதி பெறவில்லை. பாகிஸ்தானுடைய உதவியைக் குறைத்ததற்கு இதுதான் காரணமுமல்ல. இதுதான் முக்கிய காரணமுமல்ல.

1950 ஆம் ஆண்டுகளிலிருந்து பாகிஸ்தான் ஐக்கிய அமெரிக்காவின் உற்ற நண்பனாகவும், அமெரிக்கா உருவாக்கிய அல்லது ஆதரவளித்த இராணுவ ஒப்பந்தங்களுக்கு ஆதரவாக இருந்து வந்த நாடாகவும் இருந்த வேளையில் இந்தியா அணிசேரா நாடுகளின் அமைப்பை உருவாக்கியதுடன் சோவியத் ஒன்றியத்தின் நெருங்கிய நண்பனாகவும் இருந்து வந்துள்ளது. இந்தியாவினால் உருவாக்கப்படாவிட்டாலும் அதன் ஆதரவுடன் எழுச்சியடைந்த வங்காளதேசக் கிளர்ச்சியின்போது ஜெனரல் சாம் மனேக்ஷாவின் (Jenerol Sam Manekshaw) தலைமையில் ஆன இந்தியப்படையினால் பாகிஸ்தான் துண்டாடப்பட்டு பங்களாதேஷ் (Bangaladash) உருவாக்கப்படுவதற்குச் சில காலத்துக்கு முன்னரே 1971 இல் இந்தியாவும் சோவியத் ஒன்றியமும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன.

இன்றுவரை தீர்க்கப்படாதிருக்கும் எல்லைத்தகராறு காரணமாக சீனாவும் இந்தியாவும் போரில் ஈடுபட்டமை தங்களை நெருங்கிய நண்பர்களாக ஆக்கிக்கொள்ள அவாவுற்றிருந்த சீனாவை

யும், பாகிஸ்தானையும் நெருங்கிய நண்பர்களாக்கியது. சீனாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்ட நெருங்கிய உறவு பாகிஸ்தான் மூலம் அமெரிக்கா சீனாவுடன் தொடர்புகொள்ள வழிவகுத்ததுடன் திரு. கிஸிங்கரும் இரகசியமாகச் சீனாவுக்குச் செல்ல வழிவகுத்தது இதனைத் திரு கிஸிங்கரே,'' வெள்ளை மாளிகையில் நான் வாழ்ந்த காலம்'' (The White House Year) என்னும் நூலில் கூறியுள்ளார். அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையினர் டாக்டர் கிஸிங்கரை அதிபர் (Principal) என சந்தேகப் பெயரிட்டழைத்தனர். நதியாகளியிலுள்ள (Nathagali) பாகிஸ்தானிய ஜனாதிபதியின் மாளிகைக்கு, ஜனாதிபதி யகியா (Yahya) தன்னை அழைப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவும், பாகிஸ்தானில் மேலும் ஒரு நாள் கூடுதலாகத் தங்கியிருப்பதை நோக்கமாகக் கொண்ட டாக்டர் கிஸிங்கர், இந்தியாவையும் மற்றும் உலகத்தையும் ஏமாற்றுவதற்காகத் தனக்கு வயிற்றுவலி என்றும், அதற்குத் தூதரக மருந்தகத்தில் மருந்தில்லை என்றும் கூறினார். இதைத் தொடர்ந்து இவர் பாகிஸ்தானிலிருந்து விசேட வானூர்தி PIA) மூலம் சீனாவுக்குச் சென்றார். சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தக்கூடிய செயலகம் (U S.Liaohier) ஒன்றை இவர் அங்கே திறந்துவைத்தார்(இதனுடைய பொறுப்பதிகாரியாக அப்போது ஜோர்ஜ்புஷ் (George Bush)என்பவர் இருந்தார்)

இந்த விதமாகவே உலக வரலாற்றில் மிகவும் பலம்வாய்ந்த ஒரு வல்லரசுக்கும் இன்னொரு வல்லரசுக்குமிடையே உறவு உருவானது. சோவியத் ஒன்றியத்துக்குச் சார்பான ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிராகப் பாகிஸ்தானைத் தளமாகப் பாவித்து அமெரிக்காவால் மறைமுகமாக நடாத்தப் பட்டபோர் இக் காலத்தில் நடந்தது. இந்தப் போரில் பாகிஸ்தானின் பங்கிற்காக சியாவின் காலத்தில் பாகிஸ்தான் மூன்று தொடக்கம் ஐந்து பில்லியன் அமெரிக்க டாலர்களை அமெரிக்காவிடமிருந்து பெற்றுக்கொண்டது.

சோவியத் ஒன்றியம் இப்போது சிதைவுற்றுள்ளது. கெடுபிடி யுத்தம் முடிவுற்றுள்ளது. அமெரிக்காவுக்குப் பாகிஸ்தான் இப்போது தேவையற்றதாகிவிட்டது சோவியத் ஒன்றியத்தினுடைய நேசநாடுகளான கிழக்கைரோப்பிய நாடுகள் போன்று பாகிஸ்தானும் தன்னையே தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. மனிதப் பண்பில் வெறுப்படைவது மார்க்கிஸத்தின் (Maracism) தனிச்சொத்தல்ல. 1974-ம் ஆண்டு இந்தியாவுக்கான தூதுவராகத்தான் இருந்தபொழுது இந்தியா அணு சாதனத்தைச் சோதித்துப் பார்த்ததாக அமெரிக்கத்

தூதுவராக அன்றிருந்த திரு மொயினிக்கன் (*Mr. Moynikan*
கூறியிருந்தபோதிலும். இந்தியா உலகில் ஒரு சனநாயகநாடு
என்பதை ஏற்றுக்கொண்டதன் காரணமாக அமெரிக்கா
பாகிஸ்தானை ஒருபக்கம் ஒதுக்கிவிட்டு இந்தியாவுக்கு ஆதரவு
கொடுக்கின்றது. இரு காரணங்களுக்காகப் பாகிஸ்தான்
அமெரிக்காவால் தண்டிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தயாரிக்
கும் குண்டானது இஸ்லாமியக் குண்டாக மாறலாம் என்பதே
முதலாது அச்சமாகும். மேலத்தேய நாட்டவர்களுக்குப் புதிய அச்
சுறுத்தலாக இருப்பது இஸ்லாமிய அடிப்படை வாதமாகும்.(அல்
ஜீரிய பொதுத்தேர்தலை நிறுத்துவதற்கு இராணுவம் தலையிட்ட
போதும் மேற்குலகநாடுகள் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்
தன )பாகிஸ்தான் தனது அணு ஆற்றல் வளத்தைத் தனது நேசு
நாடுகளுக்கும்மற்றும் அணு ஆயுதங்களைப் பெருக்க அவாவுறும்
மற்றையநாடுகளுக்கும்பகிர்ந்தளித்துவிடும்என்பதேஅமெரிக்காவை
அச்சுறுத்தும் இரண்டாவது காரணமாகும். சோவியத் ஒன்றியத்
துக்குப்பதிலாக உருவாக்கப்பட்டுள்ள காமன் வெல்த் (Common
wealth) தில் அங்கம் வகிக்கும் மத்திய ஆசியாவில் உள்ள
முஸ்லிம் குடியரசுகளுக்கும் மத்திய கிழக்கில் உள்ள இஸ்லாமிய
அரபுநாடுகளுக்கும் ஏற்றவகையில் தனது வெளிநாட்டுக்கொள்
கையைப் பாகிஸ்தான் உருவாக்கி வருகின்றது. காஷ்மீர் (Kashmir,
பிரச்சினை முக்கிய பிராந்தியப் பிரச்சினையாகவும், உலகத்தின்
கவனத்தை ஈர்க்கும் பிரச்சினையாகவும் தற்பொழுது மாறியுள்
ளது.

ஒன்றோடொன்று தொடர்புள்ள இருபக்கச் சார்பாக
இணைந்திருந்த அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், சீனா
இந்தியா பாகிஸ்தான் ஆகிய ஐந்து நாடுகளின் வலிமை பெற்ற
பிணைப்பு இப்பொழுது முடிவுக்கு வந்துள்ளது. பொருளாதார
ரீதியான அபிவிருத்தியை விட, இலங்கை மற்றும் சார்க் நாடு
களின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்களுக்கு இது இன்று
முக்கிய சவாலாக இருக்கின்றது.

# "தமிழ்க் கவிப் பித்து"

பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை - என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டியதில்லை
மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை - அந்த
மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை.

கன்னித்தமிழெனக்கு வேணுமேயடா - உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமேயடா
இன்னத்தமிழெனக்கு வேணுமேயடா - தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா.

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை - ஒரு
உற்றார் உறவினரும் வேண்டியதில்லை
மண்ணில் ஒரு பிடியும் வேண்டியதில்லை - இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை

பாட்டில் ஒரு வரியைத் தின்றுகளிப்பேன் - உயிர்
பாயு மிடங்களிலே தன்னை மறப்பேன்;
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன் - அங்குக்
காயுங் கிழங்குகளும் தின்று மகிழ்வேன்.

மாட மிதிலைநகர் வீதி வருவேன் - இள
மாதர் குறுநகையிற் காதலுறுவேன்;
பாடியவர் அணைக்கக் கூடி மகிழ்வேன் - இளம்
பச்சைக்கிளிகளுடன் பேசி மகிழ்வேன்.

கங்கை நதிக்கரையில் மூழ்கியெழுவேன் - பின்பு
காணும் மதுரைநகர்க் கோடி வருவேன்
சங்கப் புலவர்களைக் கண்டு மகிழ்வேன் - அவர்
தம்மைத் தலைவணங்கி மீண்டும் வருவேன்.

செம்பொற் சிலம்புடைத்த செய்தியறிந்து - அங்குச்
சென்று கசிந்தழுது நொந்து விழுவேன்;
அம்பொன் உலகமிர்து கண்டனேயடா - என்ன
ஆனந்தம் ஆனந்தம் கண்டனேயடா.

கால்கள் குதித்துநட மாடுதேயடா - கவிக்
கள்ளைக் குடித்த வெறி ஏறுதேயடா!
நூல்கள் கனித் தமிழில் அள்ள வேண்டும் - அதை
நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறவேண்டும்.

தேவர்ச்(கு) அரசுநிலை வேண்டியதில்லை - அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவிற் றமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்.

பண்டிதர் க. சச்சிதானந்தன்
(1954இல் வெளிவந்த ஆனந்தத்தேன் கவிதை நூலில் இருந்து)

# தோழர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 8 ஆவது வெளியீடாகும்.

***01-07 1991*** இல் வெளிவந்த முதலாவது வெளியீட்டில் இருந்து இன்றுவரை வெளிவந்த 7 வெளியீடுகளையும் பெரும்பாலோர் முழுமையாகப் பயன் படுத்தவில்லை.

இக் கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல்வேறுபட்ட எண்ணங்களை சரியாக ஆய்வு செய்து உண்மைகளை கண்டறிய வேண்டியது வாசிப்பவர்களின் கடமையாகும்.

இக் கட்டுரைகளில் உள்ள தகவல்கள் எல்லாம் சரியானவையல்ல.

இந்நூலை நீங்கள் படிப்பதிலும் பேணிப்பாதுகாப்பதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் மேலும் ஊக்குவிக்கும்.

## ஈசனுவக்கும் இன் மலர்கள்

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ,
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளை நிறப் பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல,
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது!

காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல, கழுநீர்த்தொடையுமல்ல,
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது!

பாட்டளிசேர் பொற்கொன்றையோ, பாரில்லாக் கற்பகமோ,
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல, பாரில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது!

சுவாமி விபுலானந்த அடிகள்